

**கலைஞர் 50** -ஒரு ஸ்கேன் ரிப்போர்ட்!

KALKI
20.5.2007 ரூ.8.00
80 பக்கங்கள்

# கல்கி

குடும்பத்துடன் படிக்க...



## "அவர்கள் ஹீரோக்கள் அல்ல... கொள்ளையர்கள்!"

-பள்ளிக்கூட பாடம்
நடத்தும் தங்கர்பச்சான்



+16 இணைப்பைக் கேட்டு வாங்குங்கள்

**கண்கவர் ரகம்; காலத்துக்கும் தரம்!**

**ஜாலி ஷாப்பிங்**

# கல்கி

கல்கி
நிறுவன வெளியீடு
தரம் நிரந்தரம்

குடும்பத்துடன் படிக்க...

27.5.2007 இதழ்...

+16

# கை மணக்கும் கலை!

## ஆல் அபௌட் கேட்டரிங்



இணைந்து வழங்குவோர்.

ANNAI FATHIMA COLLEGE

Fathima Nagar, Alampatty,
Tirumangalam, Madurai District.

✉ பிரம்மாண்டமாக நடைபெற்ற ஐஸ்வர்யாராய் - அபிஷேக் கல்யாண நிகழ்ச்சியைப் படித்து பிரமிப்பில் ஆழ்ந்தோம். ம்... இனி இல்லை ஐஸ் கனவு!
பாளையங்கோட்டை, பி.சிவா

✉ புதுமையான முயற்சி - ஜனங்களின் சாமி. கழனியூரானுக்கு ஜே!
சென்னை - 114, ஆர். ராஜகோபால்

✉ 'தகுதி இருந்தால் தானாகத் திறக்கும்' கட்டுரை சிம்ப்ளி சூப்பர்ப்!
மதுரை, பிருந்தா

✉ சரத்குமாரின் பேட்டியின் மூலமாக, அவர் தீவிர அரசியலில் இறங்கி, தனியாக ஜொலிக்க ஆசைப்படுவது தெரிகிறது. இருந்தாலும், காமராஜருக்கு மணி மண்டபம் அமைக்கும் எண்ணத்தையும் முயற்சியையும் நிச்சயம் பாராட்டுவோம்.
மதுரை, என்.பாலகிருஷ்ணன்



# இனி இல்லை

✉ அமரர் கல்கி, உதவி ஆசிரியர்களின் கடமையையும், பரிதாப நிலைமையையும் எடுத்துக்காட்டி வாசகர்களைச் சிந்திக்க வைத்துவிட்டார்!
சென்னை - 116, ஜே.துரைராஜ்

வண்ணப் பக்கங்களை அச்சிடும் இயந்திரத்தில் எதிர்பாராமல் ஏற்பட்டுவிட்ட கோளாறு காரணமாக இந்த இதழில் ஆங்காங்கே கறுப்பு-வெள்ளைப் பக்கங்கள்... இந்த இதழுக்கு மட்டும் எக்ஸ்க்யூஸ் தருவீங்கதானே?

✉ கண்ணையும், கருத்தையும் கவரும் சுற்றுலா இடங்களைப் பற்றிக் கூறி, எங்கள் மனதில் ஆசையை அலைபாயச் செய்துவிட்டீர்கள். கன்னியாகுமரியும் அருமை!
லால்குடி, இராஜேந்திரன்

✉ 'கொடிது கொடிது வறுமை கொடிது' என்று ஔவையின் வாக்கை நெற்றிப் பொட்டில் ஓங்கி அறைந்தாற்போல உணர்த்தியது மேலாண்மை பொன்னுச்சாமியின் சிறப்புச் சிறுகதை.
விழுப்புரம், சங்கரி ரமேஷ்

✉ மகாத்மா அவதரித்த மண்ணில் மனித நேயம் சாம்பலாகிப் போனது துரதிர்ஷ்டம்.

## வட்டமேஜை

தேசியவாதிகளின் உடைமையாயிருந்த பி.ஜே.பி., இன்று அரசியல்வாதிகளின் கூடாரமாகிப் போனது வேதனை.
கடலூர், இள.முனீஸ்வர சர்மா

✉ 'எதிர்வீட்டுத் திண்ணை' - தாத்தா கேரக்டர் கண்களைக் குளமாக்கி விட்டது.
திருச்சி, ஆர்.பிரகாஷ்

✉ இந்திய கிரிக்கெட் தேர்வுக் குழுவில் குழப்பங்களும் குளறுபடிகளும் உள்ள வரையில், கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சும்!
திருநெல்வேலி பி.எஸ்.

✉ 29.4.07 இதழில் வெளியாகியுள்ள 'கங்காதரா மாண்டாயோ!' கட்டுரை, அமரர் கல்கி தம் உதவியாளர் ஒருவரைக் கொண்டு எழுதச் செய்தது. 'கரகோஷம் எழுதியது' என்ற தகவலுடன் வெளியிடப்பட்ட கட்டுரை அது. தம்முடைய மகன் ராஜேந்திரனின் வற்புறுத்தலுக்கிணங்க கிரிக்கெட் மைதானம் சென்ற கல்கி கிருஷ்ணமூர்த்திக்கு அரைமணி நேரத்துக்கு மேல் அங்கே உட்கார்ந்திருக்க முடியவில்லையாம்! மறுவாரம் தம்முடைய உதவி ஆசிரியரைக் கொண்டு ஒரு கட்டுரை எழுதச் செய்து வெளியிட்டதாக, ராஜேந்திரன் 15.9.63 தேதியிட்ட ஆனந்த விகடனில் எழுதிய ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.
சென்னை, சுப்ர.பாலன்

# கனவு!


7ம் பக்கம்...


கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி
தலைமை உதவி ஆசிரியர் :
மு.மாறன்
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
ச.கார்த்திகேயன்
தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324
தொலைநகல் :
044 - 22251021
மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com
சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ்.டாலர்

**Bharathan Publications Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

# கலைஞர் 50

**கடந்த ஐம்பது வருட கால தமிழக வரலாற்றோடு பின்னிப் பிணைந்திருக்கிறார் முதல்வர் கருணாநிதி. 1957-ல் முதன் முறையாகச் சட்டமன்றத்துக்குள் நுழையும் கலைஞரை சட்டமன்ற தி.மு.க.வின் கொறடாவாக நியமிக்கிறார் அண்ணா. அதன்பிறகு**



**எதிர்கட்சித் துணைத் தலைவர், பொதுப்பணித்துறை அமைச்சர், முதலமைச்சர் என்று ஏற்றங்களை அடைந்தாலும், இடையிடையே சரிவுகளும் இல்லாமல் இல்லை. அந்த ஐம்பது ஆண்டுகளின் பேலன்ஸ் ஷீட்...**

**சாதனைகள் :**

★ தமிழகம் இதுவரை 13 சட்டமன்றப் பொதுத் தேர்தல்களைச் சந்தித்துள்ளது. இவற்றில் தாம் போட்டியிட்ட 11 சட்டமன்றத் தேர்தல்களிலும் வெற்றி பெற்று சாதனை படைத்திருப்பவர் இந்தியாவில் கலைஞர் மட்டுமே!

★ அன்றிலிருந்து இன்று வரை, சட்டமன்றத்தில் எரிமலையாகப் பேசினாலும், எந்தக் கட்டத்திலும், சபைக் குறிப்புகளிலிருந்து நீக்கப்படும் அளவுக்கு, கலைஞருடைய பேச்சு அமையவில்லை.

★ சென்னை மாநகராட்சியை தி.மு.க. முதன் முறையாகப் பிடித்ததற்கு முக்கியமான காரணம் அவரது திட்டமிடுதலும் உழைப்பும்.

★ இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைக்குச் சென்றது.

★ கை ரிக்‌ஷாக்களை ஒழித்தது. பேருந்துகளை தேசியமயமாக்கியது போன்ற திட்டங்கள்.

★ நிலச் சீர்திருத்தச் சட்டங்களை அறிமுகப்படுத்தியது.

★ தமிழ்நாடு அரசின் கீழ் பல பொதுத்துறை நிறுவனங்கள் வரக் காரணமாக இருந்தவர். சிப்காட் தொழிற்பேட்டைகள் தமிழகத்தில் உருவாகக் காரணமாக இருந்தவர்.

★ சேலம் உருக்காலை மற்றும் தூத்துக்குடி துறைமுகம் ஆகியவை வரக்காரணமாக இருந்தவர்.

★ மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெற, நீதிபதி ராஜ மன்னார் கமிஷனை அமைத்தது.

★ தமிழ்மொழி, ஆட்சி மொழியாகவும், பயிற்று மொழியாகவும் இருக்க வகை செய்யும் விதத்தில் முனைந்து பணியாற்றி வருகிறார். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் இவரது முயற்சியால் வந்தது



# ஒரு ஸ்கேன் ரிப்போர்ட்!

தான். தமிழுக்குச் செம்மொழி பெற முனைந்தது.

- ★ குடிசை மாற்று வாரியம் என்ற அமைப்பை உண்டாக்கியவர்.
- ★ பெண்களுக்குச் சொத்தில் பங்கு உண்டு என்கிற புரட்சிகரமான சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தவர். பெண்களுக்குத் திருமண உதவித்திட்டம், பேறுகால உதவி போன்றவையும் அமுல்படுத்தியவர்.
- ★ காவிரி நடுவர் மன்றம் நியமிக்க முழு மூச்சாகச் செயலாற்றினார்.
- ★ பெரியார் சமத்துவபுரம், உழவர் சந்தை ஆகியவை இவரது திட்டங்களே.
- ★ சேது சமுத்திரத் திட்டத்தைச் செயல்படுத்தியது.
- ★ கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்குப் விநியோகித்தது.
- ★ சுதந்திரப் போராட்ட வீரர்கள், மற்றும் மறைந்த தலைவர்களுக்கு நினைவில்லங்கள், மணி மண்டபங்கள் கட்டியது.

**பின்னடைவுகள்:**

- ★ 1983-ல் இலங்கைத்தமிழர்கள் பிரச்னையில் ராஜினாமா செய்த பின்னரும் மற்றும் 1986-ல் எம்.ஜி.ஆர்.மேலவையைக் கலைத்துவிட்ட பின்னரும் கிட்டத்தட்ட நான்கு வருட காலம், சட்டமன்றத்திலோ மேலவையிலோ உறுப்பினராக இல்லாமல் இருந்திருக்கிறார் கலைஞர்.

★ 1991-ல் துறைமுகம் தொகுதியில் வென்ற போதும், தி.மு.க.வின் தோல்வியை ஏற்றுக் கொண்டு ராஜினாமா செய்து விட்டார்.

★ 2001-ல் சேப்பாக்கத்தில் வெற்றி பெற்றாலும், அவைக்குச் சென்று ஜனநாயகக் கடமையை ஆற்றாமல் இருந்ததும் விமர்சனத்துக்கு உள்ளானது.

★ எமர்ஜென்சியைத் தொடர்ந்து, இவர் மீது போடப்பட்ட வீராணம், பூச்சி மருந்து, கோதுமை பேரம் ஆகிய ஊழல் வழக்குகளை பின்னர் மத்திய அரசு வாபஸ் பெற்றுக் கொண்டாலும், இவை கரும்புள்ளிகளாக அமைந்து விட்டன. அந்த அவலம் இன்று வரை தொடர்வதற்குக் காரணமானவர்.

★ அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இவருக்கு டாக்டர் பட்டம் கொடுத்த போது, மாணவர்கள் மீது போலீஸ் தாக்கியதில் உதயகுமார் என்ற மாணவர் இறந்து விட்டார். பின்னர் விடப்பட்ட மிரட்டல்கள் காரணமாக, உதயகுமாரின் தந்தையே பெற்ற மகனை ''தன் மகன் இல்லை'' என்று சொல்ல நேர்ந்த கொடுமை.

★ திருச்சி மற்றும் பாளையங்கோட்டையில் மாணவர்கள் மீது நடந்த தாக்குதல்.

★ காவிரி பிரச்னை தொடர்பாக, உச்ச

மு.க.அழகிரியின் ஆதரவாளர்கள் தினகரன் அலுவலகத்துக்குள் நுழைந்து தாக்கியதில் மூன்று ஊழியர்கள் இறந்தது கருணாநிதிக்குப் பின்னடைவு!



★ எம்.ஜி.ஆர்.கட்சியை விட்டு விலகியதைத் தொடர்ந்து, சட்டசபையை இரு சபாநாயகர்கள் நடத்தும் சூழல் உருவானது இந்தக் காலகட்டத்தில்தான்.

★ சட்டசபையில் இவரது கையில் இருந்த பட்ஜெட் புத்தகத்தை ஜெயலலிதா பறிக்க முயன்றபோது துரைமுருகன் ஜெயலலிதாவை மிக அநாகரிகமான முறையில் தாக்கியது களங்கமாய் அமைந்துவிட்டது.

★ 1996-ல் இவர் ஆட்சிக்கு வந்த சில மாதங்களில் தென்மாவட்டங்களில் ஜாதிமோதல்கள் நடந்தன.

★ மூதறிஞர் ராஜாஜி, கலைஞர் வீட்டுக்குச் சென்று கேட்டுக் கொண்டதையும் பொருட்படுத்தாமல் ஒரு தலைமுறைக்கு அறிமுகமில்லாத கள், சாராயத்தை தமிழகத்தில் கொண்டு வந்து நீதிமன்றத்தில் தமிழக அரசு போட்ட வழக்கை வாபஸ் வாங்கியது இன்று வரை தொடர் பிரச்னைகளுக்குக் காரணமாக இருந்து வருகிறது.

★ தி.மு.க. ஆட்சியில் சென்னையில் ஈழப் போராளி பத்மநாபா மற்றும் அவர் தோழர்களைக் கொன்ற புலிகள், கோடியக்கரை வழியாக தப்பிச் சென்றது.

★ மின்சாரக் கட்டண உயர்வுக்காகப் போராடிய விவசாயிகள் காவல் துறையால் கொடூரமாக தாக்கப்பட்ட சம்பவம். 1972-ல் கச்சத்தீவை விட்டுக் கொடுத்தது.

★ மு.க. அழகிரியின் ஆதரவாளர்கள் தினகரன் அலுவலகத்துக்குள் நுழைந்து தாக்கியதில் மூன்று ஊழியர்கள் இறந்தது.

– ப்ரியன்

# ஒரு லட்ச ரூபாய் போட்டி முடிவுகளின் அணிவகுப்பு...



ஒரு லட்ச ரூபாய் பரிசுப் போட்டி முடிவுகளை ரொம்ப ரொம்ப ஆவலா எதிர்பார்த்த வாசகர்களே... இதோ கிளம்பிட்டோம் உங்களைக் குஷிப்படுத்த... முதல் முடிவு சர்வஜித் போட்டி ரெண்டோடது. குளுகுளு அனுபவத்தை எழுதக் கேட்டிருந்தோம்... குவியல் குவியலா எழுதிக் குவிச்சுட்டீங்க...

மிகச் சிறந்த குளுகுளு அனுபவம் எழுதி தலா ஆளுக்கொரு ரெப்ஜிரேட்டர் பரிசு பெறும் வாசகர்கள் த.ஸ்ரீதர், சென்னை - 72, ஏ.சாதிக் குல், நாகர்கோவில். இருவருக்கும் வாழ்த்துக்கள். இவர்களின் குளு குளு இந்த இதழில்... ஆறுதல் பரிசு பெறும் ஐந்து அனுபவங்கள் அடுத்த இதழில்...

### குற்றாலத்தில் கும்மாங்குத்து!

**வ**ருடா வருடம் குற்றாலத்துக்கு சீசனில் நான், என் நண்பர்கள் மோகன், ஆனந்த், 'மீசை' சுந்தர மூர்த்தி நால்வரும் போவது வழக்கம். மீசை சுந்தரமூர்த்தி போலீஸ்காரர் கெட் அப்பில் இருப்பான்.

ஒரு வருடம் மற்ற அருவிகளில் குளித்துவிட்டு மலை மீதிருக்கும் செண்பகாதேவி அருவிக்குப் போனோம். நாங்கள் நடந்துபோன போது மரங்களடர்ந்த பகுதியில் நாலைந்து பேர் உட்கார்ந்து ஏதோ செய்து கொண்டிருந்தார்கள். ஏதோ ஓர் ஆர்வக் கோளாறில் நாங்கள் எட்டிப் பார்க்க... காசு வைத்துச் சூதாடிக் கொண்டிருந்த அந்தக் கும்பல் சுந்தரமூர்த்தியின் போலீஸ் கெட் அப்பைக் கண்டு பயந்து

தொடர்ச்சி
79ம் பக்கம்...



## யாருக்கு ஃப்ரிட்ஜ்?

# மறக்க முடியாத

'பார்த்திபன் ஸார் படத்தில் நடிக்க எம்பொண்ணுக்கு சான்ஸ் வந்திருக்கு. அதுக்கு மேக்கப் டெஸ்ட் எடுக்கணுமாம்!'

வேற்று மொழியில், வேற்று மாநிலத்தில் உள்ள ஒரு குக்கிராமத்தில் ஒரு தாய், தன் பக்கத்து வீட்டு விவரஸ்தரிடம் கூற, அவரும் சினிமா (அதிலும் தமிழ் சினிமா) எனும் ஜுராஸிக் பார்க் (பார்க் காமலே) கைப் பற்றியும் அதிலுள்ள மிருகங்களைப் பற்றியும் பூதாகரமாக விளக்கிவிட்டார். சினிமாவுக்கு அறிமுகமில்லாத அந்தக் குடும்பம் வெலவெலத்து விட்டது. குறிப்பாக, அந்தப் பெண்ணுக்கு ஓட்டு போடுவதற்கே இன்னும் ஏழு, எட்டு மாதங்கள் ஓட்டுப்போட வேண்டிய வயது. குடும்பப் பெண்ணாக நடிப்பதற்கான முகவெட்டு. ஆனால், கட்டுப் பெட்டித்தனமான பட்டிக்காட்டுப் பெண்ணுக்கான குணநலன்கள் உள்ளவள். விரல் விட்டு எண்ணக் கூடிய படங்களில் மட்டுமே நடித்தாலும், யாருடைய விரல் நகம்கூட தன் மீது பட்டுவிடாமல் தேசிய விருது பெற்றுக் கொண்டு குடும்பம் நடத்த வேண்டும் என்ற குறிக்கோள் கொண்டவள்.

பார்த்திபனைப் பற்றிப் பலரும் பலவிதமாகச் சொல்ல, செல்வதா வேண்டாமா என குலுக்கிப் போட்டால், 'செல்' என்ற சீட்டையே எல்லா சாமிப் படங்களும் எடுத்துக் கொடுத்தன.

'போலாம், ஆனா ஜாக்கிரதையா'

'படாத இடத்தில் கை பட்டா - பளார்'

'ரூம் போட்டு 'வா'ன்னு கூப்பிட்டா கொலை பண்ணிட்டு ஜெயிலுக்குப் போவேன்'

'மத்த பொண்ணு மாதிரியில்லே நான்.'

எதிர்மறை எண்ணங்களை ஏகப்பட்ட லக்கேஜாகக் கட்டிக்கொண்டு ரயிலேறி என்




## ரா. பார்த்திபன்

# மருதாணி விரல்கள்!

எதிர் இருக்கையில் வந்து இறங்கியது அந்தக் கவரிமான்!

குண்டு குண்டாய் இருந்த அவள் கண்களில் பயம், மிரட்சி... வண்டி வண்டியாய்... இயல்பு நிலைக்கு வரவழைப்பதற்காக 'உங்க பேர் என்னம்மா?' என்றேன் தாய்மானைப் பார்த்தபடி. 'எங்க ஊர்லயிருக்கும்போது, ஃபோன்ல நீங்க கேட்டப்ப சொன்னேன் இல்லே... அதே பேர்தான்' என்றது. எனக்குச் சிரிப்பு வந்தது. (அந்தச் சிரிப்பு அழகாக இருந்ததாக பிற்காலத்தில் என்னிடம் தெரிவிக்கப்பட்டது).தாவணியின் முந்தானை இன்னும் coverந்தது. காட்டு மிருகங்கள் ஊருக்குள் வராமலிருக்க கம்பி வேலியில் கரண்ட் பாய்ச்சுவதைப் போல அவள் கண்களில் சர்க்யூட் அமைக்கப்பட்டிருந்தது. சிப்பி விரிய... கடல் தெரிய... கண்கள்! புகைப்படத்தில் அந்தப் பகுதி என்னைக் கவர்ந்ததால்தான் அவளுக்கு அந்த அழைப்பு! டன் கணக்கான அவள் சந்தேகங்களைக் களைந்து, மேக்கப்பி, புடைவைக்குள் அவளை நுழைத்து க்ளிக்குவதற்குள் சூரியனுக்கே போதும் போதுமென்றாகி - போய்விட்டது. 'ரூம் எடுத்துத் தர்றேன், தங்கிட்டு நாளைக்குப் போலாம்' என்றேன். 'ரூமா?' என்ற சந்தேக ஜாதி முல்லை தன் தாயை அர்த்தமாய்ப் பார்த்தபடி, 'எங்களுக்கு ரூம் ஒண்ணும் வேணாம்.'

'பின்னே, காரிடாரிலேயேவா படுத்துக்குவே'-நான்



தாய்லாந்து தன்னையறியாமல் சிரித்துவிட, சேய்க்கு மூக்கு நுனியில் கோப காரம்! 'நாங்க எங்கேயோ தங்கிட்டுக் காலையில வர்றோம். எத்தனை மணிக்கு சார்?' அவர்கள்

## ஜிகினா 6

தங்குமிடம் எனக்குத் தெரியக்கூடாது என்பதற்காக கம்பெனி கார்கூட வேண்டாமென ஆட்டோவில் ஏறிப் பறந்துவிட்டாள்.

**ம**றுநாள்...

உடலெங்கும் முட்கள் நீட்டிக் கொண்டிருக்கும் அந்த முயல் குட்டியின் மேல், என் நிழல்கூட படாமல் புகைப்படங்கள் எடுத்துவிட்டு, 'நீங்க போலாம்மா' எனக் கூறி, என் உபசார உபாசகர்களை அழைத்து, அந்தப் பெண்ணுக்குப் பயணத்துக்குத் தேவையான தண்ணீர் பாட்டில் உட்பட அனைத்தையும் ஏற்பாடு செய்து தரும்படி பணித்தேன். குடுகுடுவென ஓடிவிட்ட அவளின் வீடியோ பதிவைப் போட்டுப் பார்த்தேன். நான் கவனிக்காத தருணத்தில் எல்லாம் அந்தப் பெண் என்னையே பார்த்தபடி தன் தாயிடம் ஏதோ ஜாடை காட்டிக் கொண்டிருந்தது ஏனென்று அப்போது எனக்குப் புரியவில்லை. ஒரு மாதம் கழித்து ஒரு நாள், அடுத்த மாநில பொது தொலைபேசி என்னை அழைத்தது.

'சார் உங்களை எனக்கு இஷ்டமாயிடுச்சி'.

'ஏம்மா?' என்றேன்.

'இல்லே... நான் பயந்த மாதிரி நீங்க எங்கிட்ட தப்பா எதுவும் நடக்கல அதான்'.

'தப்பா என்றால்?'- நான்

என்னைப் பற்றிய அவளின் நெகடிவ் யூகமும், அது பொய்யெனப் பெய்த என் சுயமும் விளக்கமாகக் கூறி ஃபோனை கட் செய்யும் முன் ஒல்லியான குரலில் 'ஐ லவ் யூ' என்றாள். அவளைக் கவர எந்த கவன ஈர்ப்பு உண்ணாவிரதமும் நான் மேற்கொள்ளவில்லை. நான் நானாக இருந்ததில் அவளது எதிர்மறை எண்ணங்கள் மறைய மறைய... என்னை ஒரு ரொமான்டிக் ஹீரோவாக ஆக்கிக் கொண்டாள் அந்தப் பேதை! மூன்று மாதங்கழித்து ஒருநாள் ஃபோனினாள், என் நலம் பேணினாள்.

'ஏம்மா ரொம்ப நாளா பேசல?' எனக்

கேட்டேன்.

'ஐயோ! ரொம்ப நாளா நான் உங்ககிட்டதான் பேசிக்கிட்டிருக்கேன். உங்களுக்குத்தான் கேக்கலை' என்றாள்!

தமிழுக்கே தடுமாறியவள், இன்று கவிதையாய்ப் பேசிக் கரைந்தாள்.

எனக்கோ பேச்சு முட்டியது.

அழுகைக்கு நடுவே விசும்பல்களாய் 'எனக்கு நடிப்பே வேணாம், நிஜமாவே உங்களோட இருக்கணும்னு நினைக்கறேன். நீங்க ஒண்ணும் செய்ய வேணாம். 'ம்' மட்டும் சொல்லுங்க... உங்க நினைப்போடவே கடைசி வரைக்கும் இருப்பேன். ஆனா உங்களைத் தொந்தரவு செய்ய மாட்டேன். ப்ளீஸ்'- காதலால் கசிந்துருகினாள். ஏற்கெனவே காதலாகிக் கண்ணீர் மல்கிக் கொண்டிருந்த நான், கிலோ மீட்டர் நீளத்தில் அவளிடம் சென்ட்டிமென்ட்டலாய்ப் பேசி, சென்ட்டிமீட்டர், செ.மீ.ராய் அவள் மனத்தை மாற்றினேன்.

**அந்தக் கடல் கொந்தளிக்கிறது,**
**சிப்பி மூடி மூடித் திறக்கிறது.**
**வழியும் கண்ணீர் வடிவதற்குள்**
**அவளின் மருதாணி விரல்,**
**யார் கண்ணிலும் படாமல்**
**துடைத்தெறிகிறது!**



**எ**ன்னிடம் அவள் கொண்ட காதலை நான் புரிந்துகொள்ளவில்லை எனப் புலம்பியவள், சில வருடங்கள் கழித்து, தன் கல்யாணப் பத்திரிகையோடு என்னை வந்து சந்தித்தாள்!

ரிசப்ஷனுக்கு வரவேண்டுமென சொன்னபோதுகூட 'இப்ப உங்களுக்கு சந்தோஷம்தானே' என்றாள் கண்ணீரில் மூழ்கியபடி.

போனால்...? அழுது அலம்பிவிடுவாளோ, பயத்தில் தயங்கினேன்.

குறிப்பிட்ட நாளில் அவளின் தாயார் நான் வரவேண்டுமென வற்புறுத்தினார். அவருக்கு என்னை மிகவும் பிடித்தது. காரணம் இறுதிவரை என் முடிவில் நான் உறுதியாக இருந்தது.

வரவேற்புக்குப் போன என்னைப் பேராச்சர்யம் வரவேற்றது.

உதடெங்கும் சிரிப்பொலிக்க, மிக இயல்பாய் தன் கணவரிடம் என்னை அறிமுகப்படுத்தினாள், கண்களில் சிறு சிராய்ப்புக்கூட இல்லாமல். 'அடிப்பாவி அந்த அழுகையெல்லாம் பொய்யா?' மனம் இப்படி ஒளிவேகத்தில் திசை மாறுமோ? வெளிரிய முகத்தோடு வெளியேறிய எனக்கு, வெளி வாசலில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டி கண்ணில் பட்டது. அதில் மண்டபத்தில் எடுக்கும் வீடியோ லைவ் கேமரா அவளின் முகம் நோக்கி ஊடுருவுகிறது. அவள் முகமோ என் திசையில் நிலைக்கிறது.

அந்தக் கடல் கொந்தளிக்கிறது,

சிப்பி மூடி மூடித் திறக்கிறது.

வழியும் கண்ணீர் வடிவதற்குள் அவளின் மருதாணி விரல், யார் கண்ணிலும் படாமல் துடைத்தெறிவது தெரிகிறது.

என் கண்களும் விக்கி, விசும்ப...

வேகமாய் கார் ஏறி...

என்னிடம் நான் வந்து சேர்ந்து விட்டதாக நினைக்கிறேன்!

**(மின்னும்)**



டயாபடீஸ் வந்தாச்சு... என்ன செய்யணும்? நவீன சிகிச்சைகள் என்னென்ன? சென்னை கீழ்ப்பாக்கத்திலுள்ள சேஷய்யா டயாபடீஸ் சென்டரின் நீரிழிவு நிபுணர் டாக்டர் மாதுரியிடம் கேட்டோம்.


"நவீன சிகிச்சைகள் டயாபடீஸுக்கு நிறைய இருக்கு. ஆரம்பக்கட்டத்துல மாத்திரைகள் சாப்பிடுவதிலேயே ஏகப்பட்ட பிரச்னைகள் இருந்துச்சு. குறித்த நேரத்தில் சாப்பிடாததால் மாத்திரையின் பலன் கிடைக்காமல் இம்சை தொடங்கிடும். இதற்கென தற்போது மிகவும் நவீன மாத்திரைகளான Extented Release Tablets வந்துவிட்டன. இந்த மாத்திரைகளை ஒரு நாளில் ஒரு வேளை உட்கொண்டாலே போதும்; இருபத்து நான்கு மணி நேரமும் தன்னுடைய பணியை இடைவிடாது செய்துவிடும். இம்மாத்திரையைச் சாப்பாட்டுக்கு முன்பு எந்த நேரத்திலும் போட்டுக் கொள்ளலாம். மாத்திரை போடுவதற்கு மறந்து அகோரப் பசியில் சாப்பிட்டு விட்டால்கூட பரவாயில்லை; சாப்பிட்டு ஐந்து நிமிடங்களுக்குள் இம்மாத்திரைகளை உட்கொள்ளலாம்.

அடுத்து, நம் உடம்புக்குள் இன்சுலின் புகுத்திக்கொள்ளும் முறையிலும் நவீன கருவிகள் வந்துவிட்டன. இதுவரைக்கும் இன்சுலின் ஊசிதான் பயன்பாட்டில் இருந்தது. இதற்கென Pulmonary Insuline Inhaler எனப்படும் புதிய முறை வந்துவிட்டது. ஆஸ்துமாக்காரர்களுக்குக் கொடுப்பதைப் போன்று, குழாய்க்குள் இன்சுலின் கேப்சூலைப் பொருத்திவிட்டு, வாய் வழியாக இன்சுலின் சுவாசத்தை இழுத்துக்கொள்ளலாம்.

'நேசல் ஸ்ப்ரே' என்பதும் இன்சுலின் செலுத்தும் கருவிதான். இதனை மூக்கு நுனியில் வைத்து நுகர்ந்து நம் உடலுக்குள் இன்சுலினைச் செலுத்திக்கொள்ளலாம்.

குழந்தைகளுக்கு வரும் டைப் ஒன் டயாபடீஸுக்கு நாளொன்றுக்கு மூன்று அல்லது நான்கு தடவை இன்சுலின் தேவையிருக்கும். இந்நிலையில் அவர்களுக்கு பேஜர் வடிவத்திலுள்ள 'இன்சுலின் பம்ப்' வந்து விட்டது. இதனுள் இன்சுலினை 'லோட்' செய்துவிட்டு ஒரு நாளைக்கு இத்தனை தடவை இன்சுலின் உடம்புக்குள் செல்ல வேண்டும் என்று ப்ரோக்ராம் செய்து அடிவயிற்றுப் பகுதியில் பொறுத்திக் கொள்ள வேண்டும்.

இன்னொன்று இன்சுலின் பென் (Insulin Pen). எத்தனை யூனிட் இன்சுலின் டோஸ் கொடுக்க வேண்டும் என்று பெரிய எழுத்துகளில் இந்த 'பென்'னில் இருப்பதால், மிகவும் சுலபமாக இருக்கும். அதுவும் மருந்து மாத்திரைகளைக் கையில் எடுத்துச் செல்ல விரும்பாதவர்கள் எங்கு சென்றாலும் பாக்கெட்டுக்குள் வைத்து இந்த 'பென்'னைச் செருகிக்கொண்டு செல்லலாம்.





# டயாபடீஸுக்கான நவீன சிகிச்சைகள்...



✱ டாக்டர் மாதுரி

இன்சுலின் மருந்திலேயே கூட பல நவீன முறைகள் வந்துவிட்டன. முன்பெல்லாம் இரண்டு வகையான இன்சுலினை ஒன்றாகக் கலந்து கொடுப்பார்கள். தற்போது ஒரே இன்சுலின் வந்துவிட்டது. முன்புபோல் சாப்பாட்டுக்கு அரைமணி நேரத்துக்கு முன்பே போட வேண்டுமென்கிற கட்டாயமெல்லாம் இல்லை. சாப்பிட்டு முடித்து ஐந்து நிமிடங்களுக்குள்ளாகக் கூட போடலாம். பள்ளி, கல்லூரி மாணவர்கள், அலுவலகப் பணியாளர்கள் இன்சுலினைப் போட்டுக் கொண்டு அரை மணி நேரம் காத்திருக்க முடியாது. காரணம் சாப்பிடுவதற்கான அவகாசமே அரை மணி நேரமாகத்தான் இருக்கும். இவர்களுக்கு இந்த நவீன இன்சுலின் எல்லா நேரத்திலும் ஈஸியாக வேலை செய்யும். கர்ப்பிணிப் பெண்கள் சாப்பிட்ட பிறகே இந்த இன்சுலினை உட்கொள்ளலாம்.

அதேபோல் ஒரு தடவை எடுத்துக் கொண்டால் இருபத்து நான்கு மணிநேரமும் வேலை செய்யும் இன்சுலினும் வந்திருக்கிறது. சிலருக்குக் காலை உணவுக்கு பிறகோ, மதிய உணவுக்குப் பிறகோ எந்த வேளையில் சர்க்கரையின் அளவு அதிகமாகிறதோ, அந்த நேரத்துக்கு மட்டும் வேலை செய்யும் தருந்த (Short Acting Analog) இன்சுலின் வந்துவிட்டது. இத்தகைய நவீன சிகிச்சைகளைப் பயன்படுத்திக் கொண்டு சர்க்கரையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்வது நமது கையில்தான் உள்ளது'' என்கிறார் டாக்டர் மாதுரி.

- வினோப்ரியா

படம்: பொள்ளாச்சி சுந்தரம்





# கல்கி




2007 மே 20
சர்வஜித் வைகாசி 6
மலர் : 65
இதழ் : 42


தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற தாயென்று
கும்பிடடி பாப்பா
- *பாரதியார்.*


## அர்த்தமுள்ள எதிர்ப்பு!

ஆளுங்கட்சியின் செயல்பாடுகளை விமர்சிப்பதும், அவசியமானால் தட்டிக் கேட்பதும் எதிர்கட்சியின் பொறுப்பு. ஆனால், இன்றைய அரசியல் கலாசாரத்தில் எதிர்கட்சியின் பணி, எதற்கெடுத்தாலும் எதிர்ப்பது என்கிற அர்த்தமற்ற பாதைக்குத் திசைமாறிவிட்டது. அதிலும், கொள்கை அடிப் படையில் எதிர்க்காமல், தனிமனிதத் தாக்குதலிலும் சிறு பிள்ளைத்தனமான பழிசுமத்தும் படலங்களிலும் கட்சிகள் ஈடுபடுவதைத்தான் நாம் காண்கிறோம்.

இந்தச் சூழ்நிலையில் பா.ம.க. தலைவர் ராமதாஸின் அணுகுமுறை வித்தியாசமாகவும் வரவேற்கத்தக்கதாகவும் இருக்கிறது. கூட்டணிக் கட்சித் தலைவராக இருந்தபோதிலும் தமிழக ஆட்சியாளர்கள் செய்வதையெல்லாம் ஆமோதித்து வரவேற்காமல், ஒவ்வொரு நடவடிக்கையையும் மக்கள் நல நோக்கில் எடைபோட்டு விமர்சித்து வருகிறார் ராமதாஸ்:

பீடிகளில் அபாய எச்சரிக்கை சின்னம் பொறித்தாக வேண்டும் என்ற மத்திய அரசின் ஆணையை தமிழக முதல்வர் எதிர்த்தபோது, அதனை ஆட்சேபித்திருக்கிறார் ராமதாஸ். பீடித் தொழிலாளர்களின் பணி இந்த ஆணையினால் பாதிப்புக்குள் ளாகும் என்பது முதல்வரின் வாதம். ஆனால், ராமதாஸோ, பீடி புகைப்பவர்களின் உயிருக்கு ஆபத்து இருப்பதை அபாய சின்னம் மூலம் உணர்த்தியாக வேண்டும் என்பதோடு, பீடித் தொழிலாளர்கள் பேரில் அக்கறை இருப்பின் அவர்களுக்கு






வேறு தொழில் தந்து புனர்வாழ்வு அளிப்பதே நியாயம் என்றும் உறுதிபடச் சொல்லியிருக்கிறார். மேலும், முதல்வரின் விவாதம் பீடித் தொழிலாளிகளைக் காட்டிலும் அத் தொழிலை நடத்தும் முதலாளிகளுக்கே உறுதுணையாக இருக்கும் என்றும் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

சென்னையையொட்டி சாட்டிலைட் நகரங்களை உருவாக்கும் திட்டத்திலும் சென்னை விமான நிலைய விரிவாக்கத் திட்டத்திலும் இருக்கக்கூடிய அபாயங்கள், அநீதிகள்; பல ஏழை மக்களுக்கு விளையக் கூடிய இழப்பு, சுற்றுச்சூழல் பாதிப்பு ஆகியன எத்தகையவை என்றும் எடுத்துச் சொல்லி வருகிறார்.

ரிலையன்ஸ் போன்ற நிறுவனங்கள் சில்லறை வியாபாரத்துக்குள் நுழைவதை அனைவருமே கேள்விக்குறியுடன் அணுகிக் கொண்டிருக்க, தயாநிதி மாறன் மட்டும் அது தவிர்க்க முடியாத நிகழ்வு என்றும், நமது உள்ளூர் வியாபாரிகள் ரிலையன்ஸோடு போட்டியில் இறங்க வேண்டும் என்றும் தீர்மானமாகக் கூறிவிட்டார். கூட்டணிகட்சி என்பதற்காக இதற்கு ஒத்துப் போகாமல் எதிர்ப்பு தெரிவித்துப் போராட முற்பட்டிருக்கிறது பா.ம.க.

பாலாறு, பெரியாறு, காவிரி பிரச்னைகளில் தமிழக அரசு, மெத்தனமாகச் செயல் படுகிறது என்றும் இதனால் தமிழகத்துக்கு விளையக்கூடிய பின்னடைவுகளைச் சுட்டிக் காட்டியும் மாநில அரசை அடிக்கடி உசுப்பி விட்டுக் கொண்டிருக்கிறார் ராமதாஸ்.

பா.ம.க.வின் புலிகள் ஆதரவு நிலையும் வேறு சில கொள்கைகளும் நமக்கு ஏற் புடையவையாக இல்லாமல் போகலாம்; ஆனால் கூட்டணிக் கட்சியாக இருந்த போதிலும் விமர்சனப் பணியையும் தட்டிக் கேட்கும் தர்மத்தையும் அவர் கைவிடாமல் பின்பற்றுவது, இறுக்கமான இன்றைய ஜனநாயக வெப்பத்தில் இளந் தென்றலைப் போல் மகிழ்ச்சி தருகிறது. அவரது ஆட்சேபணைகளைப் பரிசீலனைக்குட்படுத்துதல் ஜனநாயக மரபுகளை முழுமையாக்கும்.

●

# சுற்றுலா

# ஏலகிரி



ஜோலார்பேட்டையில் இருந்து நாற்பத்தைந்து நிமிஷம்; அவ்வளவு பக்கம்! அதனால்தான் நிறைய பேர் தளும்பும் ஆர்வத்துடன் ஏற்காடு போகிறார்கள். அதனால்தான் நிறையபேர், 'இவ்ளோ பக்கத்திலயா? வேற எங்கயாவது போலாமே!' என்று ஏலகிரியைப் புறக்கணித்துவிடுகிறார்கள்.

ஆபீஸுக்கோ, மார்க்கெட்டுக்கோ போவதுபோல் தோளில் பையை மாட்டிக் கொண்டு ஏலகிரிக்குக் கிளம்பிவிட முடியும். உட்கார்ந்து திட்டம் எல்லாம் தீட்ட வேண்டாம். மூட்டை, முடிச்சு கட்ட வேண்டாம். கண் மூடிக் கண் திறப்பதற்குள் போய்ச் சேர்ந்துவிட முடியும். நிறைய ஹேர்பின் வளைவுகளைக் கடக்க வேண்டியிருக்கும். ஒவ்வொரு வளைவும் கொடைக்கானலை நினைவுபடுத்தும்.


ஏலகிரியை நெருங்கும் வரைக்கும் டூர் போவது போன்ற ஒரு நினைப்பே வராது. உண்மைதான். ஆனால், அந்தக் குளிர் பரப்பில் கால் வைத்ததுமே, பிரமிப்பு தொடங்கிவிடுகிறது. 'அட, அப்பவே தெரியாமப் போயிடுச்சே' என்று புலம்புவோம். வெளியூர்க்காரர்களுக்கு ஓட்டல்கள் நிறைய உள்ளன. கண்டிப்பாக ரூம் கிடைக்கும். உள்ளூர்வாசிகள் நேரடியாகப் பயணத்தை ஆரம்பித்துவிடலாம்.




யூகலிப்டஸ், குல்மஹர் மரங்கள் நிறைந்த பகுதிகள் கண்முன் விரிகின்றன. பாம்புபோல் வளைந்து நெளியும் சாலைகள். சின்னச் சின்ன குகைகள். துண்டை உதறி தோளில் போட்டுக் கொண்டு நடக்க ஆரம்பிக்கலாம். எங்கே என்று கேட்க வேண்டும். சும்மா சாலையில் இறங்கி நடந்தாலே போதும். அந்தச் சாலையே உங்களை மேற்கொண்டு அழைத்துச் செல்லும்... அருகிலுள்ள நீர் நிலைக்கு, நீர் வீழ்ச்சிக்கு, பூங்காவுக்கு. கேமரா காதலர்களுக்குக் கேட்கவே வேண்டாம். ரோல் ரோலாக ஃபிலிம் கொண்டு போயிருந்தாலும் போதாது. ரசனையுடன் சுட்டுத் தள்ளிக்கொண்டே போகலாம்.

ஏலகிரி மலைப்பகுதி மொத்தமே முப்பது கிலோமீட்டருக்குள் முடிந்துவிடுகிறது. உயரம் 3500 அடி. ஊட்டி, கொடைக்கானல் அளவுக்கு ஜில்லீர் என்று இருக்காது. மஃப்ளர், அமிர்தாஞ்சன் எதுவும் தேவையிருக்காது. மிதமான குளிர் மட்டுமே இருக்கும். வருடிக்

# சொர்க்கம் அருகிலே!





கொடுக்கும் செல்லக் குளிர்.

விடிகாலையில் இங்கே வந்துவிட முடிந்தால், இருட்டுவதற்குள் நிறைய நடக்க முடியும்; நிறைய ரசிக்க முடியும். கான்க்ரீட் கட்டடங்களுக்கு இடையே மூச்சு முட்ட வாழ்ந்துகொண்டிருக்கும் நகர வாசிகளுக்கு ஏலகிரி ஒரு நல்ல மாற்று.

கொஞ்சம் நடந்தால், புங்கனூர் ஏரிப் பூங்கா. மிக அருகில் ஜலகம்பரை நீர் வீழ்ச்சி. ஆற, அமர உட்கார்ந்து ரசிக்கலாம். 'டைம் ஆயிடுச்சு, ஜருகண்டி' என்று தள்ளிவிட யாரும் வரமாட்டார்கள். அடுத்து, சுவாமி மலை. 4338 அடி உயர மலைப் பிரதேசம். ஏலகிரியின் ஆத்மாவாக இருக்கும் சிறு பட்டணம், ஆத்தனூர் கிராமம். ஒரு நடை நடந்து பாருங்கள். பல்வேறு பழங்குடி இன மக்களைக் காண முடியும். ஏலகிரிக்கு மிக அருகில் சேலம். ஏற்காடும்கூட பக்கத்தில்தான் இருக்கிறது.

ஊட்டி, கொடைக்கானல் போல் மக்கள் திரள் இங்கு குவியாமல் இருப்பதும் ஒருவிதத்தில் நல்லதுக்குத்தான். நெருக்கடி, நெரிசல் கிடையாது. ஓட்டலில் ரூம் கிடைக்குமா என்ற பயம் வேண்டாம். மூன்று ரூபாய் காபியை ஐந்து ரூபாய் என்று சொல்லி விற்க மாட்டார்கள்.

ஏலகிரியைப் பற்றிச் சொல்லி விட்டு குரங்குகளைப் பற்றிச் சொல்லாமல் இருக்க முடியாது. கும்பலாகச் சுற்றிக் கொண்டிருக்கும். உர்ரென்று முறைக்கும். கையில் எது வைத்திருந்தாலும் சரி, ரைட் ராயலாக வந்து பிடுங்கிக்கொள்ளும் பழகிய நண்பரின் உரிமையுடன். சத்தம் போடாதீர்கள்; ஆர்க்யூ செய்யாதீர்கள்; கொடுத்து விடுங்கள்.

இன்னொரு அத்தியாவசிய அட்வைஸ். நேஷனல் ஜியாகிரஃபிக் சேனல் எஃபெக்டுடன் பேன்ட்டை மடக்கி விட்டுக் கொண்டு மரம், செடி, புதர்களுக்கு இடையே போக வேண்டாம். பாம்புகள் அதிகம். சாலையில் நடந்து போனால் ஒன்றும் செய்யாது. அநாவசியமாக அவற்றை டென்ஷன் ஆக்கினால் மட்டுமே சீறும்.

நடக்கத் தெம்பும் திராணியும் இருப்பவர்களுக்கு ஏலகிரி ஒரு வரப்பிரசாதம். கைதட்டி ஆட்டோ கூப்பிட்டுப் பழகியவர்கள் நிறைய சிரமப்பட வேண்டியிருக்கும். டாக்ஸி, ஆட்டோ வெகு குறைவு. மலையில் ஏற வேண்டியதாக இருந்தாலும் சரி; காட்டுப் பகுதியில் உலாவ வேண்டுமானாலும் சரி; சொர்க்கத்தின் அருகில் செல்லக் கூடிய நடைபயணம் மட்டும்தான் சாத்தியம்.

ஆர்ப்பாட்டம் அதிகம் இல்லாத அமைதியான ட்ரிப் வேண்டும் என்று பிரியப்படுபவர்களின் சாய்ஸ் ஏலகிரி.

– வ்ருத்திஸ்ரீ



# "இந்தப் புத்தகம் மேல்தட்டு மக்களுக்கு மட்டும்தான்!"

**பெ**ண் சிசுக் கொலைக்கு எதிராகப் புத்தகம் எழுதி பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறார் ஒரு பெண்மணி. அண்மையில் ஜனாதிபதி கலாமின் கரங்களால் வெளியிடப்பட்ட இப்புத்தகத்தின் சொந்தக்காரர் கீதா ஆராவமுதன்.

''கடந்த 1990-ம் வருடம் தமிழ்நாட்டில் மதுரை, சேலம், தர்மபுரி போன்ற மாவட்டங்களில் பச்சிளம் பெண் குழந்தைகள் கொல்லப்படுவதைப் பற்றிப் பல தினசரிகளில் கட்டுரைகள் எழுதினேன். அதை எல்லாம் படித்துவிட்டு பெங்குவின் புத்தக நிறுவனத்தினர், ஒரு புத்தகம் எழுதித் தரும்படி என்னைக் கேட்டுக் கொண்டனர். இந்தியாவில் தமிழகம் மட்டுமின்றி பஞ்சாப், ஹரியானா, குஜராத் போன்ற பல வடமாநிலங்களிலும் பெண் குழந்தைகளைக் கருவிலேயே கொல்லும் அபாயகரமான செயல் அரங்கேறி வருவதை அறிந்தேன். இது பற்றித் தீவிரமாக ஆராய்ந்து 'மறைந்து வரும் பெண் குழந்தைகள்' புத்தகத்தைக் கொண்டு வந்தேன். இதில் வேதனையான விஷயம் என்னவென்றால், ஏழ்மையின் பிடியில் சிக்கித் தவிக்கும் குடும்பங்களில்தான் பெண் குழந்தைகளைப் பிறந்தவுடன் அழிக்கிறார்கள் என்று பார்த்தால், நல்ல படித்த, பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் பெண் குழந்தைகள் இவ்வுலகத்தை எட்டிப் பார்க்கும் முன்பே அழித்து விடுகிறார்கள். இப்படி ஒரு கொடூர நிகழ்வு நடந்து கொண்டிருக்கிறதா என்று நாம் நினைத்துப் பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்திலேயே, நம் நாட்டில் ஆயிரக்கணக்கான பெண் சிசுக்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன'' என்று அதிர்ச்சியளிக்கிறார் கீதா.

'ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கும் இப்புத்தகம் கிராமத்தினரைச் சென்று சேருமென்று நினைக்கிறீர்களா?' என்றால், 'இல்லை' என்று ஒப்புக்கொள்கிறார் கீதா.

''ஆங்கிலத்தில் புத்தகம் வெளியிட்டிருப்பதால் இது நிச்சயம் படித்த, மேல்தட்டு மக்களைக் கட்டாயமாகச் சென்றடையும். அவர்கள்தான் கருவில் இருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்று தெரிந்துகொள்வதற்கும், அது பெண் என்றால் கருக்கலைப்பு செய்வதற்கும் பணம் செலவழிப்பதற்கும் தயங்குவதில்லை. கிராமப்புறங்களில் பலர் பெண் குழந்தைகளைக் கருவிலேயே அழிப்பதற்கு இவர்கள்தான் முன்னோடியாகத் திகழ்கிறார்கள். பணக்காரர்களே பெண் குழந்தைகளை வேண்டாம் என்கிறபோது, நாம் ஏன் செய்யக்கூடாது எனப் பல ஏழை மக்கள் துணிவது இவர்களைப் பார்த்துத்தான். இந்தப் புத்தகத்தை கட்டாயம் ஆங்கிலம் தெரிந்த மக்கள் படிக்க வேண்டும் என்பதே என் விருப்பம்'' என்கிறார் கீதா.

\- நளினி சம்பத்குமார்

# உங்கள் மகனுக்கோ, மகளுக்கோ படிப்பு ஏறவில்லை என்ற கவலையா?



- பள்ளிக்கூடம் மாற்றிப் பார்த்தீர்கள்
- மெட்ரிக் போர்டு, ஸ்டேட் போர்டு என சிலபஸ் மாற்றிப் பார்த்தீர்கள்.
- டியூசன் டீச்சர்களை மாற்றிப் பார்த்தீர்கள்.
- அடித்து உதைத்து பார்த்தீர்கள்

**எதிலும் பலன் இல்லையே!**

## இது வரை IQ, EQ Test எடுத்தீர்களா?

**படிப்பு வராததற்கு என்ன காரணமென கண்டறிந்தீர்களா?**

**• பிறவி குறைபாடு • உடல்நிலை குறைபாடு • மனநிலை குறைபாடு • பாரம்பரிய குறைபாடு • நினைவாற்றல் குறைபாடு இவற்றில் என்ன பிரச்சனை? எனக் கண்டறிய வேண்டாமா? இதை சரியான முறையில் தீர்க்க வேண்டாமா?**

**ABCD கூட எழுத தெரியாமல் இருந்த 16 வயது சேலம் மாவட்ட பெண் அஸ்வினி இரண்டே வருடத்தில் இன்று 10th எழுத தயாராகி விட்டாள்.**

- 3 1/2 மணி நேரம் டெஸ்ட் நடத்தப்பட்டு கவுன்சிலிங் செய்யப்படும்.
- டெஸ்ட் கட்டணம் ரூ. 500/- (SQ Test உள்பட)
- டெஸ்ட் முன்கூட்டியே அப்பாயிண்ட்மெண்ட் பெற வேண்டும்.

# S.L.A.SCHOOL

(சுசி டிரையினிங் காலேஜ் வளாகம்)

திண்டுக்கல் – திருச்சி N.H. Road, சத்திரப்பட்டி, திருச்சி

தொடர்பு தொலைபேசி எண்கள்:

**0431-6536355, 6523235 & 98424-17771**

"என்னடா, நேத்தும் பிரச்னையா?" என்றாள் ராதிகா, சரவணனிடம்.

ஆமா ராதி... முன்னே மாதிரி இல்ல... ரொம்ப மாறிட்டேன்னு 'பிலுபிலு'ன்னு பிடிச்சிக்கிட்டா."

"முன்னே எப்படிடா இருப்ப இதயாகிட்ட?"

"முன்னேன்னா... எப்ப? லவ் பண்ணும்போதா... கல்யாணத்துக்கு அப்புறமா?"

"ரெண்டும்தான்."

"லவ் பண்றப்போ எல்லார் மாதிரியும் அரைமணி நேரத்துக்கு முன்னாடியே போய்க் காத்துக்கிட்டிருப்பேன். எப்படா அவ இறங்குற பஸ் வரும்னு ஏங்கிக்கிட்டிருப்பேன். லேட்டா வந்த ஒவ்வொரு அஞ்சு நிமிஷத்துக்கும் சேர்ந்து வட்டியும் முதலுமா வசூல் பண்ணிடுவேன்."

"கல்யாணம் முடிஞ்சதும்...?"

"அப்பவும் அப்படித்தான்... என்ன, எனக்காக இதயா, வீட்ல காத்திட்டிருப்பா... அஞ்சு மணிக்கு ஆபீஸ் விட்டதும் பஸ் ஏறி எட்டரைக்கெல்லாம் மல்லிப்பூவோட அவ எதிர்ல இருப்பேன்."

"புது மாப்பிள்ள ஜோரு."

"அப்படிச் சொல்ல முடியாது... மூணு வருஷம் வரைக்கும் அப்படித்தான் இருந்தேன்."

"இப்ப மட்டும் என்ன வந்துச்சு உனக்கு? ஏன் பொண்டாட்டி சந்தேகப்படுற மாதிரி வச்சுக்கற?"

"என் வேலையப் பத்தி உனக்குத் தெரியாதா? மார்க்கெட்டிங் ஃபீல்டு முன்ன மாதிரி இல்ல... முன்னுக்கு வரணும்னா நேரம் காலம் பார்க்காம உழைக்க வேண்டியிருக்கு. சமயத்துல இதயாகிட்ட சொல்லிட்டுத்தான் கிளம்புவேன்... நைட் வர லேட்டாகும்னு. ஆனா, புரிஞ்சுக்க மாட்டா, சத்துவா... நைட் லேட்டா வந்தா."

"புரிய வைக்க நீ ட்ரை பண்ணலையா?"

"இருப்பேனா? ஒரு வாரம் லீவ் எடுத்துக்கிட்டு, கொடைக்கானல் போய் ரூம் போட்டு எடுத்துச் சொன்னேன்... சென்னைக்கு வந்து ரெண்டு நாள் அமைதியா இருந்தா... அப்புறம் வேதாளம் பழையபடி முருங்கை மரம் ஏறிடுச்சு."

"அவளையே திட்டுறியே... அவளோட கோணத்துல இருந்து என்னைக்காவது நீ யோசிச்சுப் பார்த்திருக்கியா? மாமனார், மாமியார் ஊர்ல இருக்காங்க... தனியா கைக்குழந்தைய வெச்சுக்கிட்டு அபார்ட்மெண்ட் வீட்ல எவ்ளோ நேரம்தான் வெட்டு வெட்டுன்னு இருப்பா... அந்தக்



# இர

பூ.மாறன்




# கி வா இதயா!

கோபம்தான் உன்மேல சந்தேகமாக வெளிப்படுதுன்னு நெனைக்கறேன்.''

''இருக்கலாம்... ஆனா, அவ சந்தேகப் படற மாதிரி நான் என்ன யாரையாவது வெச்சுக்கிட்டா இருக்கேன்? அடிப்படையிலேயே கைவைக்கும்போது வெறுப்பா வருது.''

''வரும்தான்; ஒப்புக்குறேன். ஆனா அதுக்காக வக்கீலைப் பார்க்கப் போறேன்னு சொல்றதெல்லாம் டூமச்! நிதானமா முடிச்சை அவிழ்த்து சரி பண்ணப்பாரு; பைத்தியம் மாதிரி பண்ணாதே.''

''எடுத்த உடனே நான் இந்த முடிவுக்கு வரல. புரிதல் இல்லாதப்ப வேற வழி தெரியல எனக்கு.''

''நான் சொல்றேன், நீ அவளைப் புரிஞ்சுக்க ட்ரை பண்ணல.''

''அவ மட்டும் என்னைப் புரிஞ்சுக்கிட்டான்னு நினைக்கிறியா?''



**ஆஹா...லக்ஷ்மி!**

முன்புபோல் இல்லை லக்ஷ்மிராய்... இப்போது முற்றிலும் மாறிவிட்டார். யாரைப் பார்த்தாலும் சிரிப்புதான். காரணம் கேட்டால், கண் ணடிக்கிறார். "கோபப்பட்டு ஒன்னும் சாதிக்கப் போறதில்ல... அமைதியா இருந்தாலும் விடமாட்டேங் கிறாங்க... ஸோ, சிரிக்க ஆரம்பிச் சுட்டேன்" என்கிறவர், தான் புதிதாக நடித்து வரும் 'நெஞ்சைத் தொடு' படம் குறித்தும் சிலாகித்துப் பேசி னார்... "இந்தப் படம் எனக்கு மைல் கல்லா அமையும். எது மாதிரியும் இல்லாம புது மாதிரி கேரக்டர் எனக்கு. அறிமுக நாயகன் ஜெமினி, படம் வந்ததும் ஒரு கலக்கு கலக்கப் போறார் பாருங்க" என்கிறவர், இப்படம் மூலம் ரசிகர்களின் நெஞ் சங்களைத் தொட்டால் சரி!

– எக்ஸ்

"அஃபேர்ஸ் இல்லாம இருக்கலாம்... அதுக்காக நீயும் புரிஞ்சுக்க மாட்டேன்னு அடம் பிடிப்பியா? இதுக்குத்தான் உயிரைக் கொடுத்து லவ் பண்ணியா?"

"ஏன் அவ இறங்கி வந்து என்னைப் புரிஞ்சுக்கக் கூடாதா?"

"அப்போ லேட்டா வர்றது பிரச்னை இல்ல.. ஈகோ க்ளாஷ்தான் பிரச்னை... அப்படித்தானே?"

"விட்டுக்கொடுத்துப் போனா எதுவுமே பிரச்னை இல்ல."

"ஏன் அது நீயா இருக்கக்கூடாது?"

"நானெல்லாம் எவ்ளோ இருந்து பார்த்தாச்சு."

"வேணும்னா நான் வந்து இதயாகிட்ட பேசட்டுமா?"

"உன்னையும் சந்தேகப்படுவா, பர வாயில்லையா?"

"எந்த நேரத்திலும் ஒரு பொண்ணு ஒரே மாதிரி இருக்க மாட்டா."

"உனக்கு அவளப் பத்தித் தெரியாது... நான் தூங்கினப்புறம் என் மொபைலை நோண்டி, எஸ்.எம்.எஸ்., கால்ஸ் பார்க் கறதே அவளுக்கு வேல."

"நீயா ஃபோனைத் தூக்கிக் கொடுத்துடு; விட்டுடப் போறா."

"அதே மாதிரிதான் பண்ணப் போறேன்... நான் வீட்ல இருக்கேன்... நீ போய் சம்பாதிக்கட்டு வாடின்னு தொரத்தப் போறேன். அப்பத்தான் புருஷனோட வேதனை அவளுக்குப் புரியும்."

"அப்புறம் நீ சந்தேகப்படுவ, வேறென்ன நடக்கும்."

"நீயும் பொம்பளதானே... அதான் இப் படியே பேசற."

"இதுல பொம்பள, ஆம்பள்ன்னு வேறுபாடு இல்ல. எல்லோருமே ஒரு நேரத்துல சுயநலவாதிகளா மாறிடுறாங்க."

"புரியலயே..."

"புரிய வேணாம்... புறப்படுவோம். டைம் இப்பவே எட்டரை; இன்னிக்கும் இதயாகிட்ட உனக்கு ஆப்புதாண்டி!"

"ஏன் வாய வெக்குற... நான் நல்லா இருக்கறது உனக்குப் பிடிக்காதே... நீயெல் லாம் ஒரு ஃப்ரெண்டு!"


"ஹலோ போம்மா... போ... நாங்கதான் ஃப்ரெண்டு..."

**ரா**திகா தி.நகரிலிருந்து பஸ் பிடித்து பெரம்பூர் வந்து சேரும்போது மணி பத்தாகியிருந்தது. அலுப்பாக இருந்தது. காலிங்பெல்லை அழுத்திக் காத்திருந்தாள். நீண்ட நேரம் பதிலில்லை. சற்றைக்கெல் லாம் மெதுவாக, மெல்லியதாகத் திறக்கப் பட்ட கதவு வழியே ஓர் ஆண் முகம் எட்டிப் பார்த்து ராதிகாவை கடித்துக் குதற ஆரம்பித்தது...

"புருஷன் திட்டுவானேன்னு பயம் இருந்தா சீக்கிரம் வருவ... ஊர் சுத்திட்டு ராத்திரி பத்துப் பதினொரு மணிக்கு வந்தா உன்னை உள்ள சேர்த்துக்கணுமா... வெளி லயே கிட. இன்னைக்கு வீட்டுக்குள்ள நீ வரக்கூடாது..."

கதவு அறைந்து சாத்தப்பட, ராதி காவுக்கு சரவணனின் ஞாபகம் வந்தது. ●

# கிரேஸியைக் கேளுங்கள்...



● அ.சுஹைல் ரஹ்மான், திருச்சி

*பங்களாதேஷ் செல்லும் நம்ம பசங்களுக்கு என்ன சொல்ல விரும்பறீங்க...?*

டிராவிட் அண்ட் கோ பசங்களா... கடுமையான வெய்யிலா இருக்கு... பங்களாதேஷ் போகணுமான்னு ஒரு தடவைக்கு நூறு தடவை யோசியுங்க. அசட்டு தைரியத்துல போற பட்சத்துல, வாரத்துக்கு ரெண்டு வாட்டி மறக்காம எண்ணெய் தேய்ச்சுக் குளிங்க... தர்பூஸ், இளநீர் விடாம சாப்பிடுங்க... குளுமையா இருக்கத் தலைக்கு மருதாணியும் உள்ளங்கால்ல விளக்கெண்ணையும் தடவிக்குங்க... மேட்ச்சின்போது மறக்காம டாஸ்ல ஜெலிச்சு பேட்டிங் எடுத்து அரை மணி, ஒரு மணில மேட்ச்சை முடிக்கற வழியைப் பாருங்க... அசடாட்டம் பங்களாதேஷை ஆடவிட்டு அவங்க நானூறு, ஐநூறு அடிக்கறதை வெயில்ல நின்னு வேடிக்கை பார்த்து, டீ.வி விளம்பரத்துக்குத் தேவையான உடம்பைக் கெடுத்துக் காதீங்க!

● எஸ்.சுவாமிநாதன், மன்னார்குடி

*கிரேஸியைக் கவர்ந்த பொன்மொழி...?*

மின்னுவதெல்லாம் பொன்னல்ல...!

● டி.ஜி.எஸ்., நெல்லை

*காதல் சைவமா... அசைவமா?*


காதலிக்காக கொலைப் பட்டினியோடு காத்திருக்கும் 'ஏகாதசி - விரதம்'

● ப.ராமகிருஷ்ணன், காயக்காடு

*பெண்களை நிலவோடு ஒப்பிடுவது ஏன்...?*

பொதுவாகப் பெண்கள் உணர்வு 'பூர்ண'மானவர்கள்... சின்ன வருத்தத்துக்குக்கூட அவர்கள் முகம் 'அமாவாசை'யாக இருண்டுவிடும்... அதே போல எளிமையான சந்தோஷத்தில் 'பௌர்ணமி'யாகப் பிரகாசிப்பார்கள்.





● அனன்யா, பெங்களூர் - 40

*நாற்பது வயதில் நாய் குணம் என்று ஏன் சொல்லப்படுகிறது...?*

'ஜாக்கிரதை, நாற்பது வயதாகிவிட்டது. இனி நீங்கள் உப்பைக் குறைக்கணும், சர்க்கரையைக் குறைக்கணும், சோற்றைக் குறைக்கணும், சுகபோகங்களைக் குறைக்கணும்' என்று டாக்டர்

# பெண்களை நிலவோடு ஒப்பிடுவது ஏன்?



நம்மை நோய் வராமல் தடுக்கக் குறைக்கச் சொல்வார். நாம் நமது வசதிக்காக குறைத்தலில் உள்ள பெரிய 'ற'வை சின்ன 'ர'வாக்கி... நோயை நாய் ஆக்கிவிட்டோம்.... வைத்தியர் சொல்படி உப்பு, சர்க்கரை இத்யாதிகளைக் குறைத்தால் 'நாற்பது வயதில் நோய் குணம்' ஆகும்.

● *பி.சிவா, பாளையங்கோட்டை*

**பெண் பேய் இருப்பதைப் போல் ஆண் பேய் இருக்கிறதா?**

இருக்கும்போதுதான் 'ஆண்' 'பெண்'... இறந்த பிறகு 'none' அலைபவர்கள் எல்லோருமே ஒரு விதத்தில் பேய்தான்... ஆண்டவன் பின் அலைந்தால் பேய் ஆழ்வார்... கண்டவன் பின் அலைந்தால் எங்க ளாச்சும் போய் விழ்வார்...

● *என்.காளிதாஸ், சிதம்பரம்*

***சமீபத்தில் படித்த புத்தகம்?***

நான் படித்த புத்தகங்கள் எல்லாமே சமீபத்தில் வைத்துப் படித்ததுதான். எதுக்கு வேலை மெனக்கெட்டு தள்ளி வைத்துப் படித்துக் கண்ணைக் கெடுத்துக் கணும்...

● *கா.சங்கர், விழுப்புரம்*

***குழந்தையின் பொக்கை வாய் சிரிப்பு... வயதானவரின் பொக்கை வாய் சிரிப்பு... உம்மைக் கவர்ந்தது எது?***

வாசல் திண்ணையில் பொ.வா. பேரனோடு அமர்ந்திருக்கும் பொ.வா. பாட்டி, வானில் பறக்கும் ஏரோபிளேனைக் காட்டி ''அயோ போயுயு பாயு அயுயான் ஏயோபேன்''என்று பொ.வாயால் குழற... எண்பது வயதான பாட்டி, தன்னைப் போல மழலையில் பேசுவது கண்டு அடக்க முடியாமல் சிரிக்கும் பேரக் குழந்தையின் பொக்கை வாய் நக்கல் சிரிப்பு...

● *பா.அச்சுதன், வயலூர்*

***கவிஞர் கண்ணதாசன் பாடல்களில் உங்களைக் கவர்ந்த வரிகள்...?***

சமுத்திரத்தை சீசாவில் அடக்கச் சொல்கிறீர்கள்... பதம் சோறு சொல்கிறேன்... கந்தன் கருணை சினிமாவில் 'சொல்லச் சொல்ல இனிக்குதடா' பாடலின் சரணத்தில் வரும் வரிகள்.... 'உயிரினங்கள் ஒன்றையொன்று வாழ்த்திடும்போது அதன் உள்ளிருந்து வாழ்த்துவது உன் குரலன்றோ...' அந்தக் குரல் 'தெய்வத்தின் குரல்...' இதுபோல கவிஞரின் பல வரிகள், ராமன் அணிலின் முதுகில் போட்ட வரிகளுக்குச் சமமானவை...

# சேமிப்புக்குக் கைகெ



★ ராஜேந்திரன்

"பயிர் செஞ்ச விவசாயிய ஒரேடியா கவுத்துடாது. அந்தந்த வருஷத்து மார்க் கெட் ரேட்டைப் பொருத்து எங்களைக் கைதூக்கிவிடும். இதைப் பயிரிட்டா, அந்த விவசாயி சேமிக்கத் தொடங்கிட்டா ருன்னு அர்த்தம்'' என்று திருவண்ணா மலை மாவட்டம் முழுக்க ஒரே புகழாரம் தான். எல்லாம் யாருக்கு என்கிறீர்கள்...? சேனைக்குத்தான்!

''ஏழு மாச சாகுபடிங்க இந்தச் சேனை. அதனோட கிழங்குதான் விதை. நடுவதற்கு விதைக் கிழங்கு வேணும்னா, சாதாரணமா கிழங்கு வெட்றதைவிட ஒரு மாசம் கழிச்சு வெட்டணும். நல்லா நெழல்ல கொட்டி கொறைஞ்சது முப்பது நாளாவது காய விட்டா, விதைக் கிழங்கு ரெடி. இதுக் குச் சிறுவெட்டுக் கிழங்குதான் நல்லது. ஒரு ஏக்கர் சாகுபடிக்கு சிறுவெட்டுக் கிழங்குன்னா, ஆறு மூட்டை போதும். பெரு வெட்டுக் கிழங்குன்னா பத்து மூட்டை வேணும்'' என்கிறார் கொளக்குடி ராஜேந்திரன். பத்து வருடங்களாகச் சேனை பயிரிடும் விவசாயி இவர். பாலிபட்டு, சாலைனூர், அண்டம்பள்ளம், உடையா னேந்தல், வேளானேந்தல், மெய்யூர், கொளக்குடி, வடமாத்தூர், அரடாப்பட்டு என்று திருவண்ணாமலை மாவட்டத்தின் பணப் பயிராகத் திகழ்கிறது சேனை.

நல்ல லாபம் தருவது போலவே சேனை நன்கு வேலை வாங்கும் பயிரும் கூட. மாசி மாதம் துவங்கி மூன்று மாதங் களில் இதனை நடலாம். நன்றாக உழுது வைத்து, மஞ்சிக் கரை கட்டி, விதைக் கிழங்கு நட வேண்டும். பின்னர் பதி னைந்து நாட்கள் கழித்துக் களை எடுக்க வேண்டும். அதன் பிறகும் தொடர்ந்து இரண்டு தடவை களை எடுக்க வேண்டும். செடி முளைத்ததும் ஐந்து நாட்களுக்கு ஒரு தடவை தண்ணீர் பாய்ச்சப்பட வேண்டும். மூன்று மாதங்கள் கழித்து உரமிட்ட பின் னர், இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை



# கொடுக்கும் சேனை!

## திருவண்ணாமலை மாவட்டத்தின் பணப் பயிராகத் திகழும் சேனை, ஒரு ஏக்கருக்கு சுமார் ஏழாயிரம் கிலோ விளையுமாம்.

யென்று மூன்று மாதங்களுக்குத் தண்ணீர் விட வேண்டும். விதை நட்ட ஏழாவது மாதத்தில் சேனைக் கிழங்கு அறுவடைக்கு வந்துவிடும். அதாவது கிழங்குகளை மண்ணுக்குள்ளிருந்து வெட்டி எடுத்து விடலாம். ஒரு ஏக்கருக்கு சுமார் ஏழாயிரம் கிலோ சேனைக் கிழங்கு விளையும் என்று கூறப்படுகிறது.

''என்னோட ஒரு ஏக்கர் வயல்ல சம்பா சாகுபடியாக, பொன்னி விதைச்சுடுவேன். வீட்டுச் சாப்பாட்டுக்கும் குடும்பப் பணச் செலவுக்கும் சம்பா அறுவடை துணையா இருக்கும். அப்புறமா அதே வயல்ல சேனை நட்டுடுவேன். அதனோட செலவெல்லாம் போக, சேனை விளைஞ்சு வர்ற பணம் குடும்பச் சேமிப்பா கூடிக்கிட்டே இருக்கும்!'' என்கிறார் ராஜேந்திரன். அப்ப சேனையை நீங்க எப்போ பயிரிடப் போறீங்க?

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



# பரட்டை

அண்ணன் - தங்கச்சி, அப்பா - மகன், அண்ணன் - தம்பி சென்டிமென்ட் வரிசைல 'பரட்டை' அம்மா - மகன் சென்டிமென்ட். அழகுசுந்தரமா கிராமத்துல உலாவிக்கிட்டிருக்கிற தனுஷ், அப்பாவை இழந்து, அம்மாவைக் காப்பாத்த பணம் சம்பாதிக்க சென்னைக்கு லாரி ஏறி ஓடி வர்றார். அங்கதான் ஏழரை ஸ்டார்ட் ஆகுது. சென்னையைக் கதி கலங்க வெச்சுக்கிட்டிருக்குற நம்பர் ஒன் தாதாவை, சூழ்நிலை காரணமா தனுஷ் போட்டுத் தள்ள, 'பரட்டை'ங்கிற பேர்ல அண்ணன் படுஃபேமஸாகி ரத்தத்தோடு அலையுறாரு. சரி, படம் முடிஞ்சுதா? அதான் இல்ல... 'சென்னைக்குப்

கே.பாலசந்தர் இயக்கத்துல ஜெமினி கணேசன் நடிச்ச பழைய 'நான் அவனில்லை'தான் இப்போ புது முலாம் பூசப்பட்டு ஜீவன் கலக்க வந்திருக்கு. நமீதா, சினேகா, மாளவிகா, ஜோதிர்மயி, கீர்த்தி சாவ்லான்னு அஞ்சு நாயகிஸ். ஒண்ணுக்கே நம்ம ரசிகப் புள்ளைங்க உருகிடும்ங்க. இங்க இத்தனை... பாவம், அவங்கதான் என்ன செய்வாங்க... ஒவ்வொருத்தரையும் காட்டும்போதும் தியேட்டர்ல நிசப்தமா படம் பார்க்குறாங்க. அஞ்சுல டாப்பு நமீதாதான். ஜீவனுக்காக உருகி உருகி உருகுறதைப் பார்க்கும்போது நமக்கே ஒரு மாதிரி இருக்கு!

பெண்களை ஏமாத்துற கேரக்டர் ஜீவனுக்கு அல்வா சாப்பிடுற மாதிரி இல்லையா... கிண்டி நமக்கும் ஊட்டி விடுறார். அங்கங்கே ஓவர் டோஸானாலும் நல்ல டேஸ்ட். ஆனா அடிக்கடி 'நான் அவன் இல்லைங்க'ன்னு கூப்பாடு போடுறது அலுப்பா இருக்கு.

டைரக்ஷன் நம்ம செல்வாஜி. ஒவ்வொரு ஹீரோயினுக்கும் ஒரு ஃப்ளாஷ்பேக், எப்படி ஏமாந்தாங்கன்னு. 'ஐயயோ... ரொம்ப போரடிக்கும் போலிருக்கே'ன்னு நெனச்சா, வித்தியாச காட்சியமைப்புகளால விளாசித்

# நான் அவன்

# என்கிற அழகுசுந்தரம்

போன புள்ள என்னாச்சோ'ன்னு அட்ரசில்லாம தேடி வர்ற அம்மாவ, தனுஷ் சந்திச்சாரான்னு பாசம் பொங்கச் சொல்லி முடிக்கிறாங்க.

பரட்டையா நடிப்புல அரட்டை அடிச்சிருக்கார் தனுஷ். கதைக்கு ஹீரோயின் வேணுமே! ப்ரஸ் ரிப்போர்ட்டரா நடிப்புல எந்தக் குறையும் வெக்காம மிளிர்றாங்க மீரா.

அம்மாவா அர்ச்சனா. கெட்டப்பு மாத்தினதெல்லாம் ஓ.கே. பாசம்கூட நல்லாவே கொப்புளிக்குது. ஆனா, வேஷம்தான் ஓவர் பாஸ். நாடகத்தனம் நெஞ்சோட நடுவாந்தரத்துல நின்னு நர்த்தனமாடுது. கொஞ்ச நேரம் வந்தாலும் மனசைக் கலங்க வெச்சுடுறாரு லிவிங்ஸ்டன்.

இசை, இன்பத்தோட உச்சிக்குக் கூட்டிட்டுப் போய் கிறங்க வைக்க, பாடல்களும் பின்னணியும் பின்னிப் பிணைஞ்சு மிரட்டுது. ஒளிப்பதிவு கண்ணுக்கு விருந்து. சுரேஷ்கிருஷ்ணா இயக்கியிருக்கார். திரைக்கதைல ஸ்பீடு கம்மி. அம்மாவும் புள்ளையும் சந்திப்பாங்களாங்கற சஸ்பென்ஸ் ஒரு கட்டம் வரைக்கும் தான் இனிக்குது. அப்புறம் கசக்க ஆரம்பிச்சிடுது. பாசத்தை முன்னிறுத்தினவர், கொஞ்சம் பரவசத்தையும் சேர்த்துத் தந்திருக்கலாம். ○



துள்றார். அந்த நாயகியும் கோக்குக்குக் கூடா துன்னு ஆளுக்குத் தலா ஒரு பாட்டு வச்சதெல்லாம் ஓ.கேதான். ஆனா இன்னும் எவ்ளோ நாளைக்கு இப்படியே...

மியூசிக் விஜய் ஆன்டனி. 'மேனாளுக்கு என்ன ஆச்சு' பாட்டு காதுல ரீங்காரமிடுது. பட்டுக்கோட்டை பிரபாகரோட வசனங்கள் படத்துக்கு ரொம்ப பலம்.

முடிவு எதிர்பாராதது; நிறைவானது. ஆண்கள்கிட்ட சுலபமா ஏமாந்துடுற பெண்களுக்கு எச்சரிக்கை மணி அடிச்சிருக்காங்க. காதுல பலமா விழட்டும்!

- லஜ்ஜாவதி

# இல்லை

* விழாவில் (இடமிருந்து வலமாக) தேவன் அறக்கட்டளையைச் சேர்ந்த சாருகேசி, ஓவியர் ஜெயராஜ், விழாவுக்குத் தலைமை தாங்கிய இந்து முரளி, தென்கச்சி சுவாமிநாதன்.



# பைத்தியமாக இரு!

எழுத்தாளர் தேவன் நினைவு பதக்கத்தை வாங்கிக்கொண்ட கையோடு ''இன்றைய உலகில் ஹார்ட் அட்டாக் வராமல் இருக்க வேண்டுமானால் மனிதர்கள் சித்த சுவாதீனத்துடன் கூடிய பைத்தியத் தன்மையுடன் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்'' என்று அதிரடியாக ஒரு ஆலோசனை சொன்னார் தென்கச்சி சுவாமிநாதன். தனக்கேயுரிய நகைச்சுவை ஸ்டைலில் அதற்கு விளக்கமும் அளித்தார்.

''ஒருவர் பேங்க் வேலைக்கான இன்டர்வியூவுக்குச் சென்றபோது, 'எட்டை மூன்றால் பெருக்கினால் என்ன கிடைக்கும்?' என்று கேட்கப்பட்டபோது, அவர், 'இருபத்து மூன்று' என்று வாய்தவறிச் சொல்லிவிட்டார். தனக்கு வேலை கிடைக்காது என்று வருத்தமாக இருந்தபோது, அவருக்கு வேலைக்கான நியமன உத்தரவு வந்து விட்டது! 'எங்கோ தவறு நிழ்ந்துவிட்டது; தப்பாக பதில் சொன்ன எனக்கு வேலை கொடுத்துவிட்டார்களே!' என்று அவருக்கு ஒரே ஆச்சரியம். வேலைக்குச் சேர்ந்து, சில மாதங்கள் கழித்து, வேலை நிரந்தரமானது. மெதுவாகத் தன் மேலதிகாரியிடம், 'நீங்கள் கேட்ட கேள்விக்கு நான் தவறாக பதில் சொல்லியும் என்னை வேலைக்கு எடுத்துக் கொண்டது ஏன்?' என்று கேட்க, அவர் 'அன்று நேர்முகத் தேர்வுக்கு வந்தவர்கள் சொன்ன பதில்களிலேயே உங்கள் பதில் தான் சரியான விடைக்கு மிக அருகில் இருந்தது' என்றாராம்!

அந்த அதிகாரியின் நிலைதான் சித்த சுவாதீனத்துடன் கூடிய பைத்தியத்தன்மைக்கு உதாரணம். இன்றைக்கு எதிலும் பர்ஃபெக்ஷன் பார்க்கக் கூடாது. முன்னே

பின்னே இருந்தாலும் அட்ஜஸ்ட் பண்ணிக்கொண்டு வாழ வேண்டும். நமக்கு எட்டு மூணு இருபத்திநாலுன்னு தெரியும். மனைவி இருபத்திமூணுதான்னு சொன்னால் 'தப்பு' என்று விவாதித்துக்கொண்டு இருக்காமல், 'என் வாத்தியார் இப்படிச் சொல்லிக் கொடுத்தார். உன் வாத்தியார் அப்படிச் சொல்லிக் கொடுத்திருப்பார் போலும்' என்று அப்படியே ஏற்றுக்கொண்டு விட வேண்டும்'' என்றார் தென்கச்சியார்.



**மனைவி இருபத்திமூணுன்னு சொன்னால், விவாதித்துக் கொண்டு இருக்கக் கூடாது!**

அவர் உரையிலிருந்து இது ஒரு சிறிய சாம்பிள் தான். மொத்த அரங்கமும் அவருடைய பேச்சை அப்படி ரசித்துக் கேட்டது. இவருடன் சேர்ந்து, இந்த வருடம் தேவன் அறக்கட்டளையின் தேவன் நினைவுப் பதக்கம் பெற்ற இன்னொருவர் ஓவியர் ஜெயராஜ்.

''நான் ஏராளமான கதைகளுக்கு, கவர்ச்சியாகப் படங்களை வரைந்திருந்தாலும் என்னுடைய லெட்டர் பேடிலும், விசிட்டிங் கார்டிலும் போட்டுக் கொண்டிருப்பது பாக்கியம் ராமசாமி உருவாக்கிய நகைச் சுவை கேரக்டர்களான அப்புசாமி - சீதா பாட்டியைத்தான்'' என்றார்.

நிகழ்ச்சியின் இறுதியில் இந்திரா பார்த்தசாரதியின் 'வீடு' நாடகம் நடைபெற்றது.

– கௌதம்ராம்




# டிரைவிங் லைசென்ஸ்

**நாளுக்கு நாள் சாலைகளில் வாகனங்கள் பெருகிக்கொண்டே இருக்கின்றன. ஆர்.டி.ஓ. அலுவலகங்களில் டிரைவிங் லைசென்ஸ் பெற கூட்டம் அலைமோதுகிறது. சட்டப்படி லைசென்ஸ் பெற என்ன செய்ய வேண்டும்? இதோ வழிமுறைகளைச் சொல்கிறார் ஜெயபாரதம் ஓட்டுநர் பள்ளியின் மேலாளர் மோகன்...**

● இரண்டு சக்கரம், நான்கு சக்கரம் மற்றும் ஆறு சக்கர வாகனங்களை ஓட்டுவதற்கு நிரந்தர உரிமம் கொடுக்கிறது போக்குவரத்துத் துறை. இதில் எந்த வகை வண்டிக்கும் நிரந்தர உரிமம் வாங்குவதற்கு முன்பு முதலில் எல்.எல்.ஆர். எனப்படும் பயிற்சி உரிமம் வாங்க வேண்டும். அதற்குத் தேவையான விண்ணப்பம் அலுவலகத்தின் வாசலில் தனியாரால் அச்சடித்து விற்கப் படுகின்றன. இந்த விண்ணப்பத்துடன், ஐந்து பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள், வயதைக் குறிப்பிடும் பள்ளிச் சான்றிதழ், ரேஷன் கார்டு ஆகியவற்றின் நகல்களையும் இணைக்க வேண்டும். ரேஷன் கார்டு இல்லாதவர்கள், வாக்காளர் அடையாள அட்டை, பாஸ்போர்ட் மற்றும் எல்.ஐ.சி. பாலிசி ஆகியவற்றின் நகல்களைப் பயன்படுத்தலாம். வேறு எந்த அடையாள அட்டைகளையும் ஆர்.டி.ஓ. ஒப்புக்கொள்வதில்லை.

● எல்.எல்.ஆருக்கு - அது இரண்டு சக்கரமாக இருந்தாலும் சரி, நான்கு சக்கரமாக இருந்தாலும் சரி - செலுத்த வேண்டிய கட்டணம் முப்பது ரூபாய் தான். இது ஆறு மாதங்களுக்குச் செல்லுபடியாகும். விண்ணப்பிப்பவருக்கு 18 வயது பூர்த்தியாகியிருக்க வேண்டும்.



எல்.எல்.ஆர். கிடைத்த 30 நாட்களுக்குப் பிறகு நிரந்தர உரிமத்துக்கு விண்ணப் பிக்கலாம். இதற்குக் கட்டணம் 300 ரூபாய். எல்.எல்.ஆர். விண்ணப்பித்த எல்லோருக்கும் மறுக்காமல் கொடுக்கும் படி அரசு உத்தரவு போட்டிருக்கிறது. ஆர்.டி.ஓ. ஒரு மினி டெஸ்ட் நடத்து வார். அது சாலைக் குறியீடுகள் குறித்த அப்ஜெக்டிவ் டைப் டெஸ்டாக இருக் கும். விண்ணப்பிக்கும் நபர் கட்டாயம் அதிகாரி முன்பு ஆஜராக வேண்டும்.

● நிரந்தர உரிமம் வாங்குவதற்கு போக்குவரத்து அதிகாரி முன்பு வண்டியை ஓட்டிக் காண்பிக்க வேண்டும். இரண்டு சக்கரம் என்றால் எட்டு வடிவத்தில், திருப்பங்களில் காலை ஊன்றாமல் ஓட்டிக் காண்பிக்க வேண்டும். கார் என்றால் உங்களுட னேயே பயணம் வந்து, நீங்கள் போக்கு வரத்து சிக்னல்களை எப்படிக் கடை பிடிக்கிறீர்கள் என்பதையும், குறியீடு களை எப்படிக் கைகளால் காண்பிக் கிறீர்கள் என்பதையும் கணக்கில் கொண்டு உரிமம் வழங்கப்படும்.

● நிரந்தர உரிமம் 20 வருடங்களுக் குத்தான். ஏனென்றால் 50 வயதுக்குப் பிறகு, ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை உரிமம் புதுப்பிக்கப்பட வேண்டும்.

● 16 வயது முதல் 18 வயது வரை கியர் இல்லாத மொபெட் போன்ற வற்றுக்கு உரிமம் கொடுக்கப்படும். கியர் உள்ள வண்டி என்றால் கட்டாயம் 18 வயது பூர்த்தி யாகியிருக்க வேண் டும்.


● எல்.எல்.ஆர். வாங்கி வண்டி ஓட்டு பவர்கள், கட்டாயம் வண்டியில் எல் போர்டு மாட்டியிருக்க வேண்டும். மேலும் நிரந்தர உரிமம் வைத்திருப்பவர்களின் துணையோடு தான் சாலையில் வண்டியை ஓட்ட வேண்டும்.

● நான்கு சக்கர உரிமம் வைத்திருக் கும் ஓட்டுநர்கள், தொழில் ரீதியாகப் பொது மக்கள் பயன்பாட்டுக்கான வாகனங்களை ஓட்டுவதற்கு பேட்ஜ் எனப்படும் அனுமதி வாங்க வேண்டும். இதற்கு வசிக்கும் முகவரியின் எல்லைக் குட்பட்ட போலீஸ் ஸ்டேஷனில் தடை யில்லா சான்றிதழ் (NOC)வாங்க வேண் டும். 20 வயதாகியிருக்க வேண்டும். நிரந்தர உரிமம் பெற்று ஒரு வருடம் ஆகியிருக்க வேண்டும். மூன்று வருடங் களுக்கு ஒரு முறை பேட்ஜைப் புதுப்பித் துக்கொள்ள வேண்டும். முன்பெல்லாம் மூன்று சக்கர வாகனமான ஆட்டோவுக் குத் தனியாக உரிமம் கொடுத்து வந்தார் கள். இப்போது, அதற்கு நான்கு சக்கர வாகன உரிமத்துடன் பேட்ஜ் வாங்க வேண்டும்.

● இடைத்தரகர்களை நம்பிச் செல் லாமல் மக்கள் நேரடியாக அதிகாரிகளை அணுக வேண்டும். அல்லது அங்கீகாரம் பெற்ற பயிற்சிப் பள்ளிகளை அணுகலாம். எளிமையான முறைகள் மூலம் இன்று மிகச் சுலபமாக லைசென்ஸ் பெற்றுவிட லாம்.

**- கௌசி**

# ம் பெறுவது எப்படி?



# நடக்குமென்பார்;

13.5.2007 முதல் 19.5.2007 வரை

**மேஷம்:** பொருளாதார பிரச்னைகள் தலை தூக்காது. தடை விலகித் திருமணம் நடக்கும். சிலருக்கு தொழில் மாற்றம் ஏற்படும். குழந்தைகள் பற்றின கவலை தீரும். சனிக்கிழமைதோறும் ஆஞ்சநேயர் சுவாமிக்கு தீபம் ஏற்றி, ஒன்பது முறை வலம் வரவும். குரு / ராகு / கேதுவை வழிபட்டு வரவும்.

**ரிஷபம்:** தொட்டதெல்லாம் வெற்றி வாகை சூடும் நேரம் இது. திருமணம் கைகூடும். வீடு / மனை வாங்க ஏற்ற காலம். உத்தியோகத்தில் முன்னேற்றம் உண்டாகும். சிலருக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும். ராகு / கேது வழிபாடு செய்து வருதல் நற்பலனை அளிக்கும்.

**மிதுனம்:** குடும்ப உறவில் முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் பதவி உயர்வு உண்டாகும். தெய்வ தரிசனம் கிட்டும். தொலைதூரப் பயணம் வந்து சேரும். வியாழன்தோறும் தட்சிணாமூர்த்திக்குத் தீபம் ஏற்றி வரவும்.

**கடகம்:** யாருடனும் வாக்குவாதம் தவிர்க்கவும். தேர்வில் அதிக மதிப்பெண் கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. திருமணக் காரியம் கைகூடும். செவ்வாய், வெள்ளிதோறும் ராகு / கேதுவுக்கு விளக்கு ஏற்றி வருவது சங்கடங்களைப் போக்கும். சனிக்கிழமை தோறும் சனி பகவானுக்குத் தீபம் போடவும்.

**சிம்மம்:** உத்தியோகத்தில் இருந்து வந்த மன பயம் போகும். கல்வியில் அதிக மதிப்பெண் பெறுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் செலவுகள் உண்டாகும். வியாபாரத்தில் கணிசமான முன்னேற்றம் ஏற்படும். குழந்தைகள் வழியில் சுபச் செலவு ரெடி. வராத பாக்கிகள் வசூலாகும். சனிக்கிழமைதோறும் சனி பகவானுக்குத் தீபம் ஏற்றி 9 முறை வலம் வரவும். ராகு / கேது / குரு கிரஹங்களை அந்தந்த கிழமைகளில் வழிபட்டு வருதல் நற்பலனை அளிக்கும்.

**கன்னி:** எதிலும் நற்பலன் நிறைந்து காணப்படும். பொன், மனை வாங்க நேரிடும். குடும்ப உறவு நன்றாக இருக்கும். வியாபாரத்தில் நற்பலன் கிட்டும். திருமணம் தடை விலகி நடக்கும். தேர்வில் அதிக மதிப்பெண்கள் கிட்டும். குழந்தை



# நடக்கும்! தஞ்சை பரத்வாஜ்

பாக்கியம் கிட்டும். வியாழன்தோறும் ராக்வேந்திர சுவாமி தரிசனம் செய்து வர, நற்பலன் கிட்டும்.

**துலாம்:** மனதுக்கு இனிய சம்பவங்கள் நடக்கும். கொடுக்கல் வாங்கல் நற்பலனை அளிக்கும். பூர்வீகச் சொத்து பாகப் பிரிவினை ஆகும். வியாபாரதில் நல்ல லாபம் உண்டாகும். குழந்தைகள் வழியில் மகிழ்ச்சியான செய்தி கிட்டும். மாணவ / மாணவியர் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுவார்கள். சனிக்கிழமைதோறும் சனி பகவானுக்கு விளக்கு ஏற்றி வரவும். ராகு / கேது வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

**விருச்சிகம்:** அற்புதமான வாரம். சொத்துகள் சேரும். ஆடை ஆபரண அலங்காரப் பொருட்கள் வாங்குவீர்கள். உத்தியோகத்தில் உயர்வு, பணி மாற்றம் உண்டாகும். தேர்வில் அதிக மதிப்பெண்கள் வாங்குவீர்கள். மனக்கவலை தீரும். ராகு / கேது / குரு வழிபாடு செய்து வந்தால் நற்பலன் கிட்டும்.

**தனுசு:** தெய்வ அனுகூலம் நிறைந்த வாரம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தேர்வில் அதிக மதிப்பெண்கள் கிட்டும். புண்ணிய ஸ்தலம் செல்லும் வாய்ப்பு வந்து சேரும். சனிக்கிழமைதோறும் ஆஞ்சநேயருக்கு துளசி மாலை சாற்றி வழிபாடு செய்து வரவும்.

**மகரம்:** திருமண காரியம் கைகூடும். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. குழந்தைகள் வழியில் சந்தோஷம் கிட்டும். மாணவ, மாணவியர் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுவார்கள். யாரிடமும் வாக்குவாதம் வேண்டாம். சனிகிழமைதோறும் சனி பகவானுக்கு எள்ளு தீபம் ஏற்றி 9 முறை வலம் வரவும். ராகு / கேது வழிபாடு நல்லது.

**கும்பம்:** வேலை மாற்றம் உண்டாகும். புதிய வேலைவாய்ப்பு வந்து சேரும். கல்வியில் நல்ல மதிப்பெண்கள் கிடைக்கும். தடை விலகித் திருமணம் கைகூடும். உடல் நிலை சீராகும். நண்பர் / உறவினர் மூலம் ஆதாயம் கிட்டும். செலவுகள் சுபமானதாக இருக்கும். பணக் கஷ்டம் இருக்காது. வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி உண்டாகும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு செய்து வருதல் நற்பலனை அளிக்கும்.

**மீனம்:** பொன்னான வாரம். தொட்டது துலங்கும். சுபகாரியம் கைகூடும். சொத்துகள் வாங்க ஏற்ற தருணம். கொடுக்கல் வாங்கல் நன்றாக இருக்கும். பண உயர்வு ஏற்படும். மாணவ, மாணவியர் பாராட்டுப் பெறுவார்கள். ஆடை ஆபரணங்கள் சேரும். சனி காயத்ரி படித்து வருதல் நற்பலனை அளிக்கும்.

## பரத்வாஜ் பதில்கள்

● *என் உறவினர் மகனுக்குத் திருமணம் தள்ளிப் போகிறது. எப்போது நடக்கும்?*

**-ஆர்.கோபாலன், திருச்சி**

வரனுக்கு சுக்ர தசையில் ராகு புத்தி நடைபெற்றது. ஆதலால் திருமணம் தடைபட்டது. தற்போது குரு புத்தி ஆரம்பமாகி உள்ளது. 2007-ல் திருமணம் முடியும். சர்ப்பதோஷம் உள்ள வரனாகப் பார்க்கவும்.

● *என் மகனுக்கு நல்ல வரன் அமையுமா?*

**- எம். சுப்ரமணியம், பெங்களூர்**

உங்கள் மகனுக்கு 2007 கடைசியில் திருமணம் நடக்கும். படித்த, வேலையில் உள்ள பெண் அமைவாள்.

● *என் மகனுக்கு எப்போது திருமணம் நடக்கும்?*

**- எஸ். அலமேலு, ஹைதராபாத்**

உங்கள் பையனுக்கு 2007 கடைசியில் திருமணம் நடக்கும். படித்த வேலையில் உள்ள பெண் அமைவாள்.



# தங்கத் தாத்தா!

எழுபத்து மூன்று வயதில் என்னவெல்லாம் செய்யலாம்? காலையில் எழுந்தவுடன் காஃபி சாப்பிடுவது, பத்திரிகை, புத்தகம் படிப்பது, டி.வி. பார்ப்பது, மறுபடி சாப்பிடுவது, தூங்குவது என்று தானே அடுத்தடுத்த நாட்களை ஓட்டிக் கொண்டிருப்போம்... ஆனால், வெங்கட்ராமன் அப்படியில்லை. விளையாட்டு, ஓட்டப்பந்தயம், பரிசு, விருது என்று தினமும் திசைப் பூட்டி வருகிறார்.

லால்குடி தாலுகா ரெட்டை மாங்குடிதான் வெங்கட்ராமனது சொந்த ஊர். பக்கத்திலுள்ள சிறுகனூரில் உடற்கல்வி ஆசிரியராகப் பணியாற்றியவர். ஓய்வுக்குப் பிறகும் விளையாட்டு மீதான காதலை அவர் விலக்கிக் கொள்ளவில்லை.





2003-ல் தஞ்சையில் நடைபெற்ற மாநில அளவிலான முதியோர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றவர். ஆயிரத்து ஐந்நூறு மீட்டர் ஓட்டப் பந்தயம் மற்றும் நீளம் தாண்டும் போட்டிகளில் வெண்கலப் பதக்கம் வென்றிருக்கிறார். 2004-ல் சென்னையில் நடைபெற்ற சுதந்திர தின விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டிருக்கிறார். ஐந்து கி.மீ. நடைப் போட்டி, தத்தித் தாண்டுதல், ஐந்நூறு மீட்டர் மற்றும் எண்ணூறு மீட்டர் ஓட்டப் பந்தயங்களில் தங்கப் பதக்கங்களைப் பெற்றிருக்கிறார். இவர் பங்கேற்காத போட்டிகளே இல்லையென்னும் அளவுக்கு இவரது வீடு முழுவதும் பதக்கக் குவியல்கள்.

அண்டை நாடான இலங்கைக்குச் சென்று, போல் வால்ட் மற்றும்' உயரம் தாண்டுதலில் தங்கப் பதக்கங்களையும், ட்ரிபின் ஜம்ப்பில் வெண்கலப் பதக்கத்தையும் வென்று வந்தவரால், சென்ற ஆண்டு பெங்களூரில் ஆசிய அளவிலான முதியோர் விளையாட்டுப் போட்டிகள் பலவற்றில் பங்கேற்க இயலவில்லை. காரணம் சிக்குன் குன்யா.

"கேம்ஸ்தான் என் மூச்சு. அதுக்காகத்தான் என் வாழ்நாளை அர்ப்பணிச்சிருக்கேன். இன்னும் இன்னும் மேல போகணும்... போவேன்" என்று கூறும் வெங்கட்ராமனின் செல்லப் பெயர் என்ன தெரியுமா? தங்கத் தாத்தா!

- திருநா

# அரக்கு முத்திரையின் மற்றொரு உபயோகம்!

சுஜாதா

ஒரு பாவச் செயலை இனிமேல் செய்ய மாட்டேன் என்ற தீர்மானத்தையோ, வைராக்கியத்தையோ வலியுறுத்த நாம் என்னவெல்லாம் செய்கிறோம்? கைப்பட எழுதிக் கொடுக்கிறோம்; துண்டு போட்டு மிதிக்கிறோம்; சூடம் கொளுத்தி அணைக்கிறோம் அல்லது ஸ்டாம்ப் பேப்பரில் எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கிறோம். திருச்சந்தவிருத்தத்தில் ஆழ்வார் ஒருபடி மேலே செல்கிறார். புலன்களால் (இந்திரியங்களால்) வரும் தொந்தரவு அவரை ரொம்ப இம்சை செய்கிறது. அவைகளுக்கு ஒன்பது வாசல்கள் உள்ளன. இவைகளையெல்லாம் முதலில் அடைத்துவிட வேண்டும் என்கிறார். அதுவும் எப்படி? அரக்கு முத்திரை இலச்சினை செய்து இந்த வாசல்களை அடைத்து விட்டால்தான் பகவானை அடையும் நல்ல வழிகளைத் திறக்க முடியும். அப்போதுதான் சுடர்போல ஞானம் பிறக்கும். சாப்பாட்டைக் குறைத்து, உடலை எலும்பு தெரியும்படியாகக் குறைத்து உள்ளே பக்குவப்பட்டு, நெஞ்சம் உருகி அன்பினால் மட்டும்தான் சக்கரபாணியான திருமாலைப் பார்க்க முடியும் என்கிறார். பாடலைப் பார்ப்போம்.


'புன்புல வழிஅடைத்து
அரக்கு (இ)லச்சினை
செய்து



நன்புல வழிதிறந்து ஞான
நற் சுடர்கொளீஇ
என்பில் எள்கிநெஞ்சு (உ)ருகி
உள்கனிந் தெழுந்ததோர்
அன்பில் அன்றி ஆழியானை
யாவர் காண வல்லரே?

(புன்புல - அற்பமான இன்பங்களின் வழி; நன்புல - நல்ல வழி; எள்கி - குறைந்து, ஆழி - சக்கரம்)

தை மாதம் மக நட்சத்திரத்தில் திருமழிசையில் பிறந்த ஆழ்வாரைப் பற்றிப் பல கதைகள் உள்ளன. மற்ற சமயங்களை ஆராய்ந்து விட்டு வைணவத்துக்கு வந்தவர் என்பது இவரது பாடல்களிலேயே தெரிகிறது.



**திருமழிசையில் உள்ள சன்னதியில், ஆழ்வாரின்-கால்கட்டை விரலில் ஒரு கண் இருக்கும். இதைப் பற்றிப் பல சுவாரஸ்யமான கதைகள் உண்டு!**

'குலங்களாய ஈரிரண்டில் ஒன்றிலும் பிறந்திலேன்' என்று அவரே சொல்லிக்கொள்கிறார். சிவவாக்கியரும் இவரும் ஒருவரே என்று சொல்பவரும் உண்டு. திருமழிசையில் உள்ள சன்னதியில், ஆழ்வாரின் கால்கட்டை விரலில் ஒரு கண் இருக்கும். இதைப் பற்றி பல சுவாரஸ்யமான கதைகள் உண்டு. சொன்னால் சைவர்கள் கோபித்துக் கொள்வார்கள். 'பேணிலும் வரந்தர, மிடுக்கிலாத' தேவர்களால் 'பிறப்பென்னும் பிணக்கை' அறுக்க முடியாது' என்கிறார்.

(படிக்கலாம்)

# வாருங்கள் வாசகர்களே!



**வணக்கம்...**

அறுபத்தைந்து வருடங்களாகத் தமிழ் மக்கள் மனத்தில் நீங்கா இடம் பிடித்திருக்கும் கல்கி, காலத்துக்கேற்ப தன்னைப் புதுப்பித்துக் கொண்டே வருகிறது. அதே நேரம் தரத்திலிருந்து இம்மியும் மாறாமல் வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கிறது.

'தேசநலன்!' 'தேசநலன்!' 'தேசநலன்!'- இதுதான் கல்கியின் அன்றைய, இன்றைய, என்றைக்குமான தாரக மந்திரம்! இந்தத் தாரக மந்திரமும் தரமும் மாறாமல் கல்கியில் இன்னும் என்னவெல்லாம் சேர்க்கலாம்? இப்போதுள்ள கல்கியில் உங்களுக்கு எதெல்லாம் பிடித்திருக்கிறது? எதெல்லாம் தேவையில்லை என நினைக்கிறீர்கள்? கருத்துச் சொல்ல வாருங்கள், வாசகர்களே...

எங்களுடன் இணைந்து கல்கியை நீங்களும் மெருகேற்றலாம். இங்கே கொடுக்கப்பட்டுள்ள கருத்துப் படிவத்தைப் பூர்த்தி செய்து அனுப்புங்கள். உங்கள் கருத்து மற்றும் ஆலோசனைக்காக ஆவலுடன் காத்திருக்கிறோம். முதலில் வரும் ஐம்பது படிவங்களுக்கு அமரர் கல்கியின் புத்தகங்கள் பரிசாக அளிக்கப்படும்.

கைகோத்து கல்கியை மெருகேற்றுங்கள்;
கை நிறைய பரிசுகளை வெல்லுங்கள்!

அன்புடன்
கல்கி ஆசிரியர் குழு




பெயர்: ..........................................................................................

விலாசம்: ..........................................................................................

..........................................................................................

* தாங்கள் எத்தனை வருடங்களாக கல்கி படிக்கிறீர்கள்? ☐
* தங்கள் வயது ☐
* கல்கியில் சமீபகாலமாக ஆக்கபூர்வமான மாற்றங்கள் தெரிகின்றனவா?

  ஆம் ☐ இல்லை ☐
* கல்கியில் இளைஞர்களுக்கும் பக்கங்கள் இருக்கின்றனவா?

  ஆம் ☐ இல்லை ☐
* படிக்கும் வேறு பத்திரிகைகள் ஜூ.வி. ☐ ஆ.வி. ☐

  குங்குமம் ☐ குமுதம் ☐ மற்றவை.......................... (குறிப்பிடவும்)
* +16 இணைப்பில் வரும் செய்திகள் பயனுள்ளவையாக உள்ளனவா?

  ஆம் ☐ இல்லை ☐
* பொதுவாக, கல்கியில் தாங்கள் விரும்பிப் படிக்கும் பகுதிகள்...

1. .......................................................... 2. ..........................................................

3. .......................................................... 4. ..........................................................

## கலை

* அடுத்து வெளியிடப்படும் தொடர்கதை கீழ்க்காண்பவற்றுள் யாருடையதாக இருந்தால் நீங்கள் விரும்பிப் படிப்பீர்கள்?

  ☐ அமரர் கல்கி ☐ ராஜேஷ்குமார்


  ☐ சீதா ரவி ☐ வாஸந்தி

  ☐ பாஸ்கர் சக்தி ☐ இயக்குநர் வசந்த்
* தற்போது வெளியாகும் சிறுகதைகளின் எண்ணிக்கை போதுமானதாக உள்ளதா?

  உள்ளது ☐ இல்லை ☐
* அமரர் கல்கியின் படைப்புகளில் தொடர்ந்து எதை வெளியிட்டால் உங்களுக்கு மிகவும் பிடிக்கும்?

  கட்டுரைகள் ☐ சிறுகதைகள் ☐

  தொடர் (சரித்திரம்) ☐ தொடர் (சமூகம்) ☐





- நிமிடக் கதைகள் / ஒரு பக்கக் கதைகள் வேண்டுமா? வேண்டாமா?

  வேண்டும் ☐ வேண்டாம் ☐

- திரைப்பட விமர்சனம் ரசிக்கும்படி உள்ளதா?

  ஆம் ☐ இல்லை ☐

- சினிமா கலைஞர்களின் பேட்டி, கட்டுரைகள் கல்கியில் இடம்பெறுவதை வரவேற்கிறீர்களா?

  ஆம் ☐ இல்லை ☐

- சினிமா விஷயங்கள் சுமார் எத்தனை பக்கங்கள் இடம்பெறலாம் ?

  6 ☐ 8 ☐ 10 ☐ அதற்கும் மேல் ☐

- சின்னத்திரைச் செய்திகள் வேண்டுமா?

  வேண்டும் ☐ வேண்டாம் ☐

- இசை, நாடகம் சார்ந்த செய்திகள் வேண்டுமா?

  வேண்டும் ☐ வேண்டாம் ☐

- பெண்களுக்கான பக்கங்கள் கல்கியில் வேண்டுமா?

  ஆம் ☐ இல்லை ☐

- சித்திரக் கதைகள் வெளியிடுவது ரசிக்கப்படுமா?

  ஆம் ☐ இல்லை ☐

- அரசியல், சினிமா, சமூகம், மருத்துவம், மனிதம் எல்லாம் கலந்த அட்டைப்படக் கட்டுரைகளை தற்போது வெளியிட்டு வருகிறோம். இதே பாணி தொடரலாமா?

  ஆம் ☐ இல்லை ☐

- கட்டுரை இல்லாமல், வெறும் அழகான பெண்கள் முகம் மட்டும்கொண்ட அட்டைப் படங்களை வெளியிடலாமா?

  ஆம் ☐ இல்லை ☐

அரசியல்

- வாரம்தோறும் வெவ்வேறு அரசியல் பிரமுகர்களின் பேட்டிகள் வேண்டுமா?

  ஆம் ☐ இல்லை ☐

- அரசியல் வி.ஐ.பி.களின் இன்னொரு பக்கம்... அதாவது அவர்தம் குடும்பம், தினசரி நடவடிக்கைகள் என்னென்ன, மக்களுக்கு எப்படித் தொண்டாற்றுகிறார்கள்... என்பன போன்ற செய்திகளை வெளியிட்டால் உங்களுக்குப் பிடிக்குமா?

  ஆம் ☐ இல்லை ☐

## ஆரோக்கியம்

- உலக நாடுகளின் மருத்துவ உலகில் நடைபெறும் ஆச்சர்யமான / விநோதமான செய்திகள், நடவடிக்கைகளைக் குறித்த கட்டுரைகள் உங்களால் ரசிக்கப்படுகின்றனவா?

  ஆம் ☐ இல்லை ☐

- குறிப்பிட்ட நோயைப் பற்றி வாரந்தோறும் மருத்துவ நிபுணர்களின் கட்டுரைகள் வேண்டுமா?

  ஆம் ☐ இல்லை ☐

- உங்கள் உடல்நலனைப் பற்றிய சந்தேகங்களுக்கு, டாக்டர்களிடமிருந்து பதில் எதிர்பார்க்கிறீர்களா?

  ஆம் ☐ இல்லை ☐

- வி.ஐ.பி.கள் தங்கள் உடல்நலனை எப்படிப் பாதுகாத்துக் கொள்கிறார்கள் என்பதைக் குறித்த அவர்களுடைய அனுபவங்கள் படிக்க சுவாரஸ்யமாக இருக்குமா?

  ஆம் ☐ இல்லை ☐

- அடுத்த தொடர் கீழ்க்காண்பவற்றில் எதுவாக இருந்தால் உங்களால் பெரிதும் விரும்பப்படும்?

  இருதய மருத்துவம் ☐ வலி நிவாரண மருத்துவம் ☐

  அக்குபஞ்சர் மருத்துவம் ☐ குழந்தை மருத்துவம் ☐

  மற்றவை .................................................................. (குறிப்பிடவும்)

## ஆன்மிகம்

- சுஜாதா எழுதும் 'வாரம் ஒரு பாசுரம்' தொடரை விரும்பிப் படிப்பதுண்டா?

  ஆம் ☐ இல்லை ☐

- 'வளம் தரும் கோயில்' தொடர் திருப்தியாகவும் பயனுள்ளதாகவும் இருக்கிறதா?

  ஆம் ☐ இல்லை ☐

- தஞ்சை பரத்வாஜ் எழுதும் ராசிபலன் திருப்தி தருகின்றதா?

  ஆம் ☐ இல்லை ☐

- கோயில் கட்டுரை எப்படி அமைய வேண்டும்?

பரிகார ஸ்தலங்கள் ☐ சுற்றுலா தொடர்பாக ☐ பிரபலமான கோயில்கள் ☐

## அறிவு

- தன்னம்பிக்கைக் கட்டுரைகள் ?

  வேண்டும் ☐ வேண்டாம் ☐

- வாரம் ஒரு மேற்படிப்பைப் பற்றி எழுதுவது இளைஞர்களுக்கு உபயோகமாக அமையுமா?

  ஆம் ☐ இல்லை ☐

- சுய தொழில் டிப்ஸ் + Success story

  வேண்டும் ☐ வேண்டாம் ☐

- உலக நடப்புச் செய்திகள்?

  வேண்டும் ☐ வேண்டாம் ☐

## அருள்வாக்கு



# முன்னோர் போன வழி!

மனஸிருந்தால் எதையும் செய்துவிடலாம். இத்தனை வாழ்க்கை பிரச்னை இருந்தாலும் எத்தனை பொழுது அரட்டை, நியூஸ் பேப்பர், சினிமா, சீட்டுக்கட்டு இத்யாதியிலேயே போகிறது? இப்படி வீணாகப் போகிற காலத்தில் பாதி பொதுநலப் பணிகளுக்கு என்றும், பாதி ஏதாவது வித்யாப்யாஸத்துக்கு என்றும் வைத்துவிட்டால் போதும் - ஸமூஹப் பணிகளும் நடந்துவிடும், நம்முடைய வித்யைகளும் பிரகாசம் பெற்றுவிடும், நாமும் பிரகாசம் பெற்றுவிடுவோம்.

வேலை வெட்டி, குடும்பத் தொல்லை என்று மன்றாடுபவர்களுக்கு 'டைவர்ஷன்' வேண்டாமா என்று கேட்கலாம். ஆசையோடு மனஸ் ஈடுபட்டு ஏதாவது ஒரு வித்யை அப்யஸிக்க ஆரம்பித்தீர்களானால்... உங்களுக்கே தெரியும், இந்த அப்யாஸத்தைவிடப் பெரிய 'டைவர்ஷன்' எதுவும் இல்லையென்று. களைத்துப்போன மனஸுக்கு வேண்டிய உத்ஸாஹத்தை இவையே (வித்யைகளே) ஊட்டிவிடும். அப்படியும் ஒரேயடியாக நீங்கள் 'டைவர்ஷன்' என்பதை விட்டுவிடும்படிச் சொல்லவில்லை. அதுவும் கொஞ்சம் வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் நீங்களே ஆலோசித்துப் பார்த்து, 'இப்படிப் பொழுதை வேஸ்ட் பண்ணுகிறோமே' என்று நினைக்கக் கூடியவைகளை விட்டுவிட்டு - இப்படி நிறைய அகப்படும் - அந்தப் பொழுதை இப்படியொரு Pursuit-ல் (தோட்டத்தில்) செலவிட்டால் போதும், ஏதாவதொரு ஸ்வதேச வித்யையில் ஈடுபட்டுத் தேர்ச்சி பெற்றுவிடலாம். நம் முன்னோர்கள் போன வழி அதுதான்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

முதல்வன்-18

# இந்தியாவின் வெடிகுண்டு!



தொண்ணூறுகளில், விண்டோஸின் மகா வெற்றிக்குப் பிறகு, பில் கேட்ஸ் நாடறிந்த பிரபலமாகி விட்டார். விண்டோஸுடன் வளர்ந்தது அவரது பொது வாழ்க்கை. மைக்ரோசாஃப்டின் முதலாவது வெகுஜன வெற்றிப் படைப்பான 'விண்டோஸ் 3'ல் தொடங்கி, அதன் ஒவ்வொரு வடிவமும், பில் கேட்ஸ் வாழ்க்கையில் அடுத்த வளர்ச்சிக் கட்டமாக அமைந்திருக்கிறது.

1995-ம் ஆண்டு, மைக்ரோசாஃப்டிலிருந்து புதிதாக ஒரு மேம்பட்ட விண்டோஸ் வடிவம் வெளியானது. ஆரம்பத்தில், 'சிகாகோ' என்று செல்லப் பெயரிடப்பட்டிருந்த இந்த ஆபரேட்டிங் சிஸ்டம், பின்னர் 'விண்டோஸ் 95' என்ற காரணப் பெயருடன் சந்தைக்குக் கொண்டு வரப்பட்டது.

யார் வேண்டுமானாலும் மிகச் சுலபத்தில் புரிந்துகொண்டு பயன்படுத்த முடிகிற எளிமை. அதே சமயம், கணினி வித்தகர்களைக் கவரும்படியான நவீன தொழில் நுட்ப மாற்றங்கள், இவற்றோடு கூடவே பொதுஜனம் எங்கே போனாலும் அவர்கள் முகத்தில் தவறாமல் பளிச்சிடுகிற விளம்பரங்கள்- இந்தச் சூத்திரம் தான் மைக்ரோசாஃப்டுக்குப் பிரமாதமான பலன்களைக் கொண்டு வந்தது. 'விண்டோஸ்

95' மாபெரும் வெற்றி.

இதே நேரத்தில் பில் கேட்ஸுக்கு இன்னொரு கௌரவமும் கிடைத்தது. ஃபோர்பஸ் (Forbes) வணிக இதழ் வெளியிடும் வருடாந்திரப் பணக்காரர்கள் பட்டியலில், அவருக்கு முதல் இடம் தரப்பட்டிருந்தது.

ஏற்கெனவே 1993-ம் ஆண்டில் தொடங்கி, அமெரிக்காவின் மிகப் பெரிய பணக்காரராக அறிவிக்கப்பட்டிருந்தார் பில் கேட்ஸ். இப்போது, உலக அளவில் உச்சத்தைப் பிடித்து விட்டார்- எல்லாம் விண்டோஸ் தயவுதான்!

1995-ல் உலகின் மிகப்பெரிய பணக்காரரான பில் கேட்ஸ், சமீபத்தில் வெளியான 2007-ம் ஆண்டுப் பட்டியல் வரை, தன்னுடைய முதல் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறார். வருங்காலத்தில்தான் இந்த நிலைமை கொஞ்சம் மாறலாம் என்று சொல்கிறார்கள்.

ஏன்? பில் கேட்ஸைவிட வேறு யாரேனும் அதிகம் சம்பாதித்துவிடப் போகிறார்களா?

இப்போதைக்கு அதற்குச் சாத்தியமே இல்லை. ஏனெனில், லேட்டஸ்ட் கணக்கின்படி பில் கேட்ஸுக்கும், இரண்டாவது இடத்தில் இருக்கும் அடுத்த பணக்காரர் வாரன் பஃபெட் (Warren Buffett)டுக்கும் இடையே உள்ள வித்தியாசம், நான்கு பில்லியன் டாலர்கள் - நம் ஊர் மதிப்பில் கிட்டத்தட்ட பதினெட்டாயிரம் கோடி ரூபாய்கள்!

சரி, விஷயத்துக்கு வருவோம்... உலகமெங்கும் மைக்ரோசாஃப்ட் பின் 'விண்டோஸ் 95' ஆபரேட்டிங் சிஸ்டத்துக்கு நல்ல வரவேற்பு கிடைக்க மிக முக்கிய காரணம், முந்தைய விண்டோஸ் வடிவங்களோடு ஒப்பிடுகையில், பெரும்பாலான குறைகள் இந்த வடிவத்தில் நீக்கப்பட்டிருந்ததுதான். ஆகவே, திடுதிப்பென்று ஒரு சுப வேளையில் நம்முடைய கம்ப்யூட்டர் நிரந்தரமாகப் படுத்துத் தூங்கிவிடுமோ என்று பயப்படாமல் மக்கள் தைரியமாக வேலை பார்க்க முடிந்தது.



இதனால், 'விண்டோஸ் 95' பழைய விற்பனைச் சாதனைகளையெல்லாம் உடைத்துக் கடாசிவிட்டுக் கன்னாபின்னாவென்று விற்றுத் தீர்ந்து கொண்டிருப்பதாக மைக்ரோசாஃப்ட் செய்திக் குறிப்புகள் தெரிவித்தன. 'அதெல்லாம் ஒன்றும் இல்லை. சுமாரான விற்பனைதான்' என்று நம்பத் தகுந்த வட்டாரங்களில் பேசிக் கொண்டார்கள்.

இந்தக் கணக்கு விவகாரம் ஒரு பக்கமிருக்க, இதே நேரத்தில் வேறு ஒரு வம்பில் மாட்டிக் கொண்டது மைக்ரோசாஃப்ட். இந்தியாவிலிருந்து கிளம்பி வந்த ஒரு வெடிகுண்டால், அவர்களுக்கு ஏகப்பட்ட மில்லியன் டாலர்கள் நஷ்டமாகிவிட்டது.

விஷயம் இதுதான் - 'விண்டோஸ் 95' வடிவத்தில் வெளியாகியிருந்த உலகப் படத்தில், காஷ்மீரின் சில பகுதிகள் பாகிஸ்தானில் இருப்பதுபோல் பதிவு செய்யப்பட்டிருந்தன. இதைப் பார்த்த நம்மவர்கள் கொதித்துப் போய் விட்டார்கள்.

இதனால் இந்தியாவுக்கு அனுப்பிய 'விண்டோஸ் 95' பிரதிகளையெல்லாம் மைக்ரோசாஃப்ட் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. அதன்

**என்.சொக்கன்**

**எல்லோரும் ஒரு பிரதி வாங்கியாக வேண்டும். அப்படி வாங்காதவர்களைச் சுற்றியிருக்கிறவர்கள் அருவருப்பாகப் பார்த்து முகம் சுளிக்கிற அளவுக்குப் போய்விட்டது நிலைமை!**



பிறகு இந்த வம்பே வேண்டாம் என்று உலகப் படத்தை நாடுவாரியாகப் பிரிக்காமல் வெளியிடத் தொடங்கிவிட்டார்கள்.

பில் கேட்ஸும் மைக்ரோசாஃப்டும் விண்டோஸில் கொழித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில், கணினி பயன்படுத்துபவர்களுக்கு உபயோகமான வேறு சில மென்பொருள்களையும் தொகுத்து வெளியிட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த வரிசையின் பெயர், 'மைக்ரோசாஃப்ட் ஆஃபீஸ்.'

அதாவது, ஓர் அலுவலகத்துக்குத் தேவையான எல்லா மென்பொருள்களும் இந்த 'மைக்ரோசாஃப்ட் ஆஃபீஸ்'ல் கிடைத்தது. கடிதம் எழுதுவதற்கு 'வேர்ட்', பட்டியல், அட்டவணைகள், வரைபடங்கள் தயாரிப்பதற்கு 'எக்ஸல்', மின்னஞ்சல்கள் அனுப்புவதற்கு 'அவுட்லுக்', ஷங்கர் படம் மாதிரி நம்முடைய யோசனைகளை பிரம்மாண்டமாகப் படம் வரைந்து காட்டுவதற்கு 'பவர் பாயின்ட்'... இன்ன பிற உதிரி சமாசாரங்கள் என சிலவற்றைப் பொட்டலாம் கட்டி, நல்ல விலைக்கு விற்றது மைக்ரோசாஃப்ட்.

வழக்கம்போல், இந்த மென்பொருள்களில் எவையும் மைக்ரோசாஃப்ட், பில் கேட்ஸின் சொந்தக் கண்டுபிடிப்புகள் இல்லை. என்ன மாதிரியான மென்பொருள்களை மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்று கவனிப்பது, அந்த வகைகளில் ஏற்கெனவே சந்தைக்கு வந்திருக்கிற முன்மாதிரிகளை ஆராய்வது, அதன் பிறகு அவற்றைவிடச் சிறப்பாகத் தோன்றுகிற ஒரு சாஃப்ட்வேரைத் தயாரித்துவிடுவது - திரும்பத் திரும்ப மைக்ரோசாஃப்டுக்கு ஏகப்பட்ட டாலர்களைக் குவித்துத் தந்த எளிய மந்திரம் இதுதான்.

இப்படித் தயாரித்த மென்பொருள்களையெல்லாம் ஆரம்பத்தில் தனித் தனியாகத்தான் விற்பனை செய்து கொண்டிருந்தார்கள். அதன் பிறகு எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாகக் கூறுகட்டி விற்றுவிடுவதில்தான் அதிக லாபம் என்று கண்டுகொண்டது மைக்ரோசாஃப்ட்.

அப்போதிலிருந்து யார் விண்டோஸ் வாங்கினாலும், கூடவே மைக்ரோசாஃப்ட் ஆஃபீஸும் வாங்கிப்போடுவது ஒரு சம்பிரதாயமாகிவிட்டது. பயன்படுகிறதோ இல்லையோ, எல்லோரும் ஒரு பிரதி வாங்கியாக வேண்டும். அப்படி வாங்காதவர்களைச் சுற்றியிருக்கிறவர்கள் அருவருப்பாகப் பார்த்து முகம் சுளிக்கிற அளவுக்குப் போய்விட்டது நிலைமை.

இதனால் மைக்ரோசாஃப்டுக்கு ரெட்டை லாபம். விண்டோஸும் நானே, ஆஃபீஸும் நானே என்று ஜோராகக் காசைக் குவித்துக்கொண்டிருந்தது.

**(தொடரும்)**

# காதல் மயக்கம்!

நமது நாட்டின் விவாக முறையைக் குறை சொல்வோர் பலர் இருக்கிறார்கள். அவர்கள் நமது விவாக முறை 'கட்டாய மணம்' என்றும், 'காதல் மணம்' அல்லவென்றும் கூறுகின்றனர்.

நமது விவாக முறையின் பேரில் எனக்கும் அநேக குறைகள் இருக்கின்றன. அவைகளை என்றாவது ஒருநாள் உங்களிடம் முறையிட்டுக் கொள்கிறேன். ஆனால், இந்தக் 'காதல் மண'மும் அதற்குப் பாட்டனாகவே இருப்பதாய்த் தோன்றுகிறது.

கமலா தேவி- ஹரீந்திரநாத் மணத்தை விடச் சிறந்த 'காதல் மணம்' வேறு இருக்க முடியாது. கமலாதேவி குயின் மேரிஸ் கலாசாலையில் படித்துக் கொண்டிருந்தபோது, முதல் கணவனை இழந்து கைம்பெண்ணானாள். பிறகு ஹரீந்திரநாத்தைச் சந்தித்தாள். இருவரும் காதல் கொண்டனர். கல்யாணம் நடந்தது.

இரண்டு பேரும் வயது வந்தவர்கள்; உலகமறிந்தவர்கள்; அறிவில் மிகுந்தவர்கள். ஒத்த வயது; ஒத்த மேதை; ஒத்த சௌந்தரியம். காதல் தெய்வத்தின் அருளைப் பெறுவதற்கு எல்லா வகையிலும் பாத்திரமானவர்கள். ஆயினும் அவர்களுடைய இல்வாழ்க்கை விவாகரத்தில் முடிந்தது!

மற்றொரு பக்கத்தில், பெற்றோர் பார்த்து மணம் புரிவித்த தம்பதிகளின் இல்வாழ்க்கையைப் பாருங்கள். நான் அறிந்த அத்தகைய குடும்பங்களில் 100க்கு 70 தம்பதிகள் கூடிய வரையில் சந்தோஷமான வாழ்க்கையே நடத்துகிறார்கள்.

கல்யாணமாகி 25 வருஷங்களுக்கு மேலாகியும் நேற்றுதான் முதன்முதலாகச் சந்தித்துக் 'கண்டதும் காதல்' கொண்டவர்களைப்போல் அன்னியோன்யமாய் வாழும் தம்பதிகளை நான் அறிவேன். ஆயினும் இவர்களுடைய கல்யாணம் குழந்தைப் பருவத்தில் பெற்றோர்களால் முடித்து வைக்கப்பட்டதுதான்.

ஆகவே, உங்களை மறுபடியும் கேட்கிறேன். இந்தக் காதலின் இரகசியம் என்ன? எது உண்மைக் காதல்? எது பொய்க் காதல்? அது எப்படி வருகிறது? எப்படிப் போகிறது? அதனால் மனித வாழ்க்கையில் ஏற்படுவது இன்பமா? துன்பமா?

'காதல் மயக்கம்' என்று சொல்கிறார்கள்... உண்மையில் இந்தக் காதல் விஷயத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்யப் புகுந்தாலே மயக்கந்தான் உண்டாகிறது.

– 'பெண் தெய்வங்கள்'
வானதி வெளியீடு...

■ அமரர் கல்கி



# தூங்கும் முன் சாமி!





''என்னப்பா, நான் பாடம் நடத்தும்போது சாமி கும்பிடுற...''

''எங்க அம்மா தூங்கறதுக்கு முன்னாடி சாமி கும்பிடச் சொன்னாங்க டீச்சர்!''

- நீ.முத்துக்குமார்

''ஏன் கையில ரெண்டு வாட்ச் கட்டியிருக்கீங்க?''

''ஒண்ணுல சின்ன முள் ரிப்பேர்... இன்னொண்ணுல பெரிய முள் ரிப்பேர்...!''

- லட்சுமி ஆவுடைநாயகம்





''நீங்க யாருக்குக் கடன் கொடுத்தாலும் வாங்கினவங்க அப்புறம் உங்களுக்குக் கடவுளா மாறிடுறாங்களா... எப்படி?''

''கடன் வாங்கினப்புறம்தான் யாரும் கண்ணுக்கே தெரியவே மாட்டேங்கறாங்களே...!''

- லட்சுமி ஆவுடைநாயகம்


''பசி வந்தா பத்தும் பறந்துடும்னு சொல்வாங்க...''
''சமைச்சது மனைவியா இருந்தா?''
''அந்தப் பசியே பறந்துடும்...''
- கே.ஆனந்தன்
''உனக்குக் கனவுலகூட நல்லது நடக்கறது இல்லையா... என்ன சொல்றே ரவி?''
''ஆமா... உனக்கும் எனக்கும் கல்யாணம் நடக்கற மாதிரி கனவு வருதே விமலா...''
-கே.ஆனந்தன்
''எங்க வீட்டு நாய் அவ்வளவு சீக்கிரம் யாரையும் கடிக்காது..?''
''ஏன்?''
''ரொம்ப தூரம் ஓடவிட்டு அப்புறமா ஜம்ப் பண்ணித்தான் கடிக்கும்!''
- குருவை ஆர்.தேவிகா
''என்னம்மா, தினமும் ஃபோன்ல மூணுமணி நேரம் பாய் ஃப்ரெண்டோட அரட்டை அடிப்ப, இன்னைக்கு ஒரு மணி நேரத்துலயே வச்சுட்டியே?''
''ராங் நம்பர்பா!''
- நீ.முத்துக்குமார்

ஆங்கிலம் தெரிந்தால்தான் வேலை என்கிற நிலைமை கிட்டத்தட்ட வந்தே விட்டது. இதனால் தமிழகமெங்கும் ஆங்கிலம் கற்றுக்கொள்ளும் ஆர்வம் அதிகரித்து வருகிறது. இன்று தமிழக மெங்கும் ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி வகுப்புகள் ஏராளமாக நடத்தப்படுகின் றன. ''கடந்த ஏழெட்டு வருடங்களாக ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி வகுப்புகளுக் கான தேவை அதிகரித்துள்ளது. இன்று பல நிறுவனங்களும், பல்வேறு ஊர்



* ராமகிருஷ்ண மடத்தில் ஆங்கிலப் பயிற்சி வகுப்பு...

# ஆங்கிலத்தை

களிலும் கிளைகள் தொடங்கி வகுப்புகள் நடத்தினாலும், தேவைக்கு ஏற்ப போது மான அளவில் இல்லை'' என்கிறார் ஆங்கிலப் பயிற்சியளிக்கும் Zeal அமைப் பின் நிறுவனரான ராஜன்.

''அண்மையில் ஒரு பிரபல பொறியி யல் கல்லூரிக்கு என்னை அழைத்திருந் தார்கள். அந்தக் கல்லூரிக்கு கேம்பஸ் ரெக்ரூட்மென்ட்டுக்காக இந்தியாவின் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட பெரிய கம்பெனிகள் வந்திருந்தும், பதினைந்து சதவிகித மாணவர்களுக்கு மட்டுமே வேலை கிடைத்தது. 'கேம்பஸ் இன் டர்வியூவின்போது கேட்கப்பட்ட கேள்வி களுக்கு, பதில் தெரிந்திருந்தும்கூட எங்கள் மாணவர்களால் சரியாகச் சொல்ல முடிய வில்லை. அவர்களுக்கு நல்ல ஆங்கிலப் பேச்சுத் திறமை இல்லாததுதான் காரணம்' என்று வருத்தத்துடன் தெரிவித்தார் அந்தக் கல்லூரியின் தலைவர்.

தமிழ்நாட்டில் ஏராளமான ஆங்கில மீடியம் பள்ளிகளில், ஆங்கிலத்தையே தமிழில்தான் சொல்லிக் கொடுக்கிறார்கள். கல்லூரிகளிலும்கூட ஆசிரியர்களின் ஆங்கில அறிவு மெச்சும்படி இல்லை. எனவே இன்டர்வியூக்களில் கேட்கப்படும் டெக்னிக்கல் கேள்விகளுக்கு நன்றாகப்

பதில் சொல்லி வேலை கிடைத்தாலும், அதன்பின் ஆங்கிலப் பேச்சுத் திறமையின்மை அவர்களுக்கு ஒருவிதத் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தி விடுகிறது. அதனால் வேலையில் தொடர்வதே பெரும் பிரச்னையாகிறது'' என்கிறார் ராஜன்.

தி.நகர் ராமகிருஷ்ணா மடம் கடந்த நான்காண்டுகளுக்கும் மேலாக ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது. ''எல்லா வயதினரும் இந்த வகுப்புகளில் சேர்கிறார்கள் என்றாலும், இருபது வயது முதல் முப்பத்தைந்து வயதுக்காரர்களே அதிகமாகச் சேர்கிறார்கள். குறிப்பாக, தொழில்நுட்பக் கல்வியை முடித்துவிட்டு பன்னாட்டு நிறுவனங்களில் வேலை பார்க்கிறவர்கள்தான் அதிகம். நாங்கள் வசூலிக்கும் கட்டணம் குறைவானது. ஆரம்பம், இடைநிலை, உயர்நிலை என்று மூன்று நிலைகளில் ஒவ்வொருவரையும் பரிசோதித்து, அவரவர் நிலைக்கு ஏற்ப சேர்த்துக் கொள்கிறோம். சுமார் ஆறும்ாத காலம் நடைபெறும் மூன்று பயிற்சிகளுக்கும் சேர்த்தே, நாங்கள் வசூலிக்கும் கட்டணம் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய்தான்'' என்கிறார் ராமகிருஷ்ணா மடத்தின் சுவாமி போதமயானந்தா.

இன்று ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி அளிப்பதாக பல நிறுவனங்கள் விளம்பரம் செய்கின்றன. இவற்றில் சேர்ந்தால் உண்மையிலேயே நன்றாக ஆங்கிலம் பேச முடியுமா?

''பலர் இதனை ஒரு பிஸினஸாகவே செய்கிறார்கள். மாணவர்களின் ஆங்கில அறிவு நிலைமை என்னவென்று பார்த்து, ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் அக்கறை செலுத்திச் சொல்லிக் கொடுப்பதில்லை. எங்களுக்கு வர்த்தக நோக்கம் இல்லாததால், நாங்கள் பயிற்சியின் தரத்தில் கவனம் செலுத்துகிறோம். ஒரு வகுப்புக்கு இருபத்தைந்து அல்லது முப்பது மாணவர்களைத்தான் சேர்க்கிறோம்'' என்கிறார் ராமகிருஷ்ணா மடத்தின் ஆங்கிலப் பயிற்சி ஆசிரியரான திருமதி. ரகுநாத்.

'ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி வகுப்புகளுக்குச் சிலர் ஆயிரக்கணக்கில் கட்டணம் வசூலிக்கிறார்களே!' என்றால்,

''இன்று ஐந்நூறு ரூபாய்க்குக்கூட ஆங்கிலம் சொல்லித் தருகிறார்கள். அதேசமயம் தரமான ஆங்கிலப் பேச்சுப் பயிற்சியுடன், ஒட்டுமொத்த ஆளுமை வளர்ச்சியையும் அளிக்கும்படியான பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. இன்றுள்ள பெரிய பிரச்னையே, நல்ல திறமையான ஆங்கில ஆசிரியர்கள் இல்லாமைதான். ஒரு தரமான பயிற்சி நிறுவனம், திறமையான ஆசிரியர்களுக்கு நல்ல ஊதியம், மாணவர்களுக்குச் சௌகரியமான வகுப்பறை, பாடப் புத்தகங்கள் மற்றும் விளம்பரம் ஆகியவற்றுக்கெல்லாம் ஏராளமாகச் செலவழிக்க வேண்டியுள்ளது. எனவே, கட்டணம் கூடுதலாக வசூலிக்கிறார்கள். இவற்றைப் பற்றிக் கவலைப் படாதவர்கள் குறைந்த கட்டணம் என்று கூறி மாணவர்களை ஈர்க்க முயல்கிறார்கள். அவர்களில் பலர் வெற்றியும் பெறுகிறார்கள். ஆனால், தோற்பதென்னவோ மாணவர்கள்தான்!'' என்கிறார் ராஜன்.

# அறுவடை செய்!

– எஸ்.சந்திரமௌலி

படம்: ஸ்ரீஹரி



ஐந்து வருடங்களுக்குப் பிறகு என் அத்தை மகள் மாலதி எங்கள் வீட்டுக்கு வரப்போகிறாள். காலையில்தான் கடிதம் வந்தது. கடிதம் கண்டதிலிருந்து மனதுள் மகிழ்ச்சிப் பூக்கள் மலர்ந்து இனம் புரியாத பரவசம்.

ஐந்து வருடங்களுக்கு முன் அத்தை, மாமாவுடன் வந்தபோது அவளுக்கு வயது பதினாறு. அப்போதே சிற்பம்போல நுட்பமான அழகுடன் திகழ்ந்தாள். அவளுக்குத் தான் என் மீது எத்தனை அன்பு, பாசம்! இப்போதும் அதேபோல் பழகுவாளா? இல்லை விலகிப் போவளா? அந்த நினைப்பே கசந்தது. இன்று புதன்கிழமை. அடுத்த புதனன்று வரப் போகிறாள். இடையில் ஒரு வாரம் எப்படி கரையப் போகிறது!

பலவித சிந்தனைகளோடு தோட்டத்தில் உட்கார்ந்திருந்த என்னை, அந்தக் கோழிகளின் சத்தம் திசை திருப்பியது. பக்கத்து வீட்டில் ஒரு கிறிஸ்தவக் குடும்பம் புதிதாக வந்துள்ளது. அவர்கள் வீட்டுக் கோழிகள் அனைத்தும் எங்கள் தோட்டத்தில்தான் மேய்கின்றன.

சாம்பல் நிறத்தில் கருப்பு, வெள்ளைப் புள்ளிகளோடு ஒரு பெட்டைக் கோழி மிக அழகாக இருந்தது. சிவப்பு, கருப்பு, வெள்ளை நிறங்களிலும் ஐந்தாறு பெட்டைக் கோழிகள். ஆனால், சேவல் மட்டும் இரண்டுதான். ஒன்று செவலை நிறத்திலும், மற்றொன்று வெள்ளை நிறத்திலும் இருந்தன.

அந்தச் செவலைச் சேவல் வேலியின் மீது கம்பீரமாய் நின்றபடி பெருங்குரலெடுத்துக் கூவியது. அப்போதுதான் அந்த

# நொண்டிச்

# க.மா.மகாலிங்கம்

வெள்ளைச் சேவலைக் கவனித்தேன். அதன் ஒருகால் பின்புறமாக வளைந்து, அதன் முன் விரல்கள் மடங்கித் தரையில் தேய்ந்தவாறு இருக்க, விந்தி விந்தி நடந்தது. எனக்குள் ஒருவித சோகம் படர, அதையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

கொக், கொக், கொக்கென்று சப்தமிட்டபடி ஒரு பக்கச் சிறகை இறக்கி, சற்றுச் சாய்ந்தவாறு அந்தச் சாம்பல் நிற பெட்டைக் கோழியை அணுகியது. இது நெருங்கவும் அது விலகி ஓட, சேவல் தன் வளைந்த கால் தரையில் தேய, தேய அதை விரட்டியது. அப்போதுதான் அது நிகழ்ந்தது. வேலியில் நின்றிருந்த செவலைச் சேவல் விர்ரெனப் பறந்து வந்து சாம்பல் நிறப் பெட்டையின் மீது அமர்ந்து, தன் அலகால் அதன் கொண்டையைப் பற்றிக் கொண்டு பெட்டையின் முன் உடம்பு தரையில் பதியுமாறு பலமாக மிதித்தது.

சில விநாடிகளில் கிழே இறங்கியது. பெட்டைக் கோழி தன் சிறகுகளைச் சிலிர்த்துக்கொண்டு ஓடியது. செவலைச் சேவல் தன் தலையை உயர்த்தி இப்படியும், அப்படியும் பார்த்தவாறு கொக்... கொக்... கொக்கென்று கொக்கரித்தபடி கம்பீரமாக நடந்தது.

தோல்வியுடன் நொண்டிச் சேவல் கால்கள் மடிய தரையில் அமர்ந்து கக்... கக்...கக்கென்று ஓசை மாறி கேவியது. ஏனோ அந்தக் காட்சி என் மனதைப் பிசைந்தது.

தோட்டத்திலிருந்தபடியே ''அம்மா, அம்மா'' என்று சத்தம் போட்டுக் கூப்பிட்டேன்.

''என்னடா... என்னடா மாதவா... என்ன ஆச்சு?'' என்று அம்மா பதற்றத்துடன் ஓடி வந்தாள்.

''ஒண்ணுமில்லம்மா... எனக்கு அந்த வெள்ளைச் சேவல் வேணும்மா...''

''ஏண்டா, கொழந்தையா நீ? இருபத்தெட்டு வயசு ஆகுது. இப்பப் போய் கோழி வேணும், குஞ்சு வேணும்ட்டு...'

''அம்மா ப்ளீஸ்மா. நீ என்ன பண்ணுவியோ ஏது பண்ணுவியோ... எனக்கு அந்தச் சேவல் வேணும்... அவங்களைப் போய் கேட்டுப் பாரும்மா'' என்றேன் கெஞ்சலுடன்.

''சரிடா, கேட்டுப் பாக்கறேன்'' உள்ளே போய் கொஞ்சம் காசு எடுத்துக்கொண்டு பக்கத்து வீட்டுக்குப் போனாள்.

'அவர்கள் கொடுப்பார்களா!' என்ற கவலை எழ, அம்மாவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன்.

அம்மா வந்தாள். ''டேய் அது நொண்டிச் சேவலாமேடா. பிடிச்சக்கச் சொல்லிட்டாங்க'' என்றவள், சட்டென்று உதட்டைக் கடித்துக் கொண்டு, ''சரி, சரி எதிர்த்த வீட்டு மோகனைக் கூப்பிடறேன், பிடிச்சுக் கொடுப்பான்'' என்று பேச்சை மாற்றினாள்.

''அம்மா, நீ இன்னொரு உதவியும் பண்ணணுமே. கையோட மார்க்கெட்டுக்குப் போய் எளசா ஒரு பெட்டைக் கோழியும் வாங்கிட்டு வந்

# சேவல்



துடும்மா.''

''டேய், உனக்கு என்ன ஆச்சு? ஏன் இப்படி இம்ச பண்றே?''

''போம்மா, போய் சீக்கிரம் வாங்கிட்டு வாம்மா.''

அம்மா என்னை விநோதமாகப் பார்த்த வாறு வெளியேறினாள்.

மோகனும் அந்த வெள்ளைச் சேவலை பிடித்துக் கொடுத்தான். ஒரு கயிற்றை அதனுடைய நன்றாக இருந்த காலில் கட்டி, மறுமுனையை தோட்டத்தில் இருந்த அவரைப் பந்தலில் கட்டினேன். கூடவே அம்மா வாங்கிக் கொடுத்த கருப்பு நிறப் பெட்டைக் கோழியையும் கயிற்றால் அதே அவரைப் பந்தலில் கட்டினேன்.

தொடர்ந்து இரண்டு நாட்கள் கட்டிப்

**உள்ளத்தில் சந்தோஷம் பரவ, நிம்மதிப் பெருமூச்சு விட்டேன். என் பின்னே காலடியோசை கேட்டுத் திரும்பிப் பார்த்தேன்... மாலதிதான்... அழகோவியமாக நின்றிருந்தாள்.**



போட்டே தீனி வைத்தேன். கோதுமைத் தவிட்டில் சாதம் வடித்த கஞ்சி கலந்த தீனி, அரிசி நொய், கருவாட்டுத் தூள் கலந்த தவிடு என்று வேளா வேளைக்கு உபசரித்தேன். தடவிக் கொடுத்தேன். தூக்கி முத்த மிட்டேன்.

மூன்றாம் நாள் இரண்டையும் அவிழ்த்துவிட்டேன். இரண்டும் ஜோடி யாகத் தோட்டத்தில் மேய்ந்தன. மாலை யானதும் இரண்டையும் ஒரே கூடையில் கவிழ்த்து மூடினேன். அம்மா எல்லாவற் றையும் ஒருவித கலக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அடுத்த இரண்டு நாட் களில் என்னைக் கண்டவுடன் தீனிக்காகப் பின் தொடருமளவுக்குப் பழகியிருந்தன.

இன்று புதன்கிழமை... மாலதி வரும் நாள். ஏதேதோ எண்ணங்கள் அலைமோத, தோட்டத்துக்கு வந்து நாற்காலியில் உட் கார்ந்தேன். எதேச்சையாக என் பார்வை அவரைப் பந்தலருகே சென்றபோது, அங்கே எனது வெள்ளைச் சேவல் கருப்புப் பெட்டையின் மேல் உட்கார்ந்திருந்தது.


உள்ளத்தில் சந்தோஷம் பரவ, ஒரு நிம் மதிப் பெருமூச்சு விட்டேன். என் பின்னே காலடியோசை கேட்டுத் திரும்பிப் பார்த் தேன். மாலதிதான். அழகோவியமாய் நின்றிருந்தாள். உடனே நாற்காலியிலிருந்து எழுந்தேன். பேலன்ஸ் தவறி வலது பக்க மாகச் சாய்ந்தேன். மாலதி ஓடிவந்து என் னைத் தாங்கிப் பிடித்தாள். அதே அன்பு, பாசம், கனிவு. எந்த மாற்றமுமில்லை.

இடது காலைவிட சற்று உயரம் குறைந்த என் வலது காலைப் பரிவுடன் பார்த்தபடி, என் கையைப் பற்றித் தன் தோளில் வைத்துக்கொண்டு, ''வாங்க உள்ளே போவோம்'' என்றாள்.

வீட்டின் முன் அறையில் அம்மாவுடன் அத்தையும், மாமாவும் பேசிக் கொண்டிருந் தார்கள்.

''என்ன பார்வதி இப்படிக் கேட்டுட்ட... அவனுக்கென்ன கொறைச்சல்? நிறைய படிச்சிருக்கான். நல்ல வேலையில் இருக் கான். நான் வாக்கு மாற மாட்டேம்மா. நீ எப்ப சொல்றியோ அப்ப கல்யாணத்தை முடிச்சிரலாம். சரியா'' என்றார் மாமா.

மாலதியின் முகத்தில் வெட்கச் சிவப் போடியது. என் விழிகளில் நீர்த்துளி அரும்ப, ''சே, என்ன இது கொழந்த மாதிரி'' என்றபடி என் கண்களைத் துடைத் தாள். ●


Happy Holiday Special
MAY 2007 RS.10/-
4 Travel Articles, 4 Stories, Puzzles, Board Game & Lots more to keep you engaged this Summer!
HP Meets JKR
-A Competition for children!
Now on the Stands
GOKULAM
THE Magazine for Children

'நடு நடுவில் காதல் நந்தவனம் காணாமப் போய்டுது. பக்கங்களைப் புரட்டி ஏமாற்றமடைய வேண்டியதாயிருக்கு. வாரம் தவறாமல் வர்ற மாதிரி பார்த்துக்க மதனா'ன்னு ஒரு வாசகர் லெட்டர் போட்டிருக்காரு.

காத்திருக்கறதும், சின்னச் சின்ன ஏமாற்றங்களும் காதலுக்குத் தனி சுகம் கொடுக்கும் சார். அதுக்காகத்தான் இப்படி நடுவுல இடைவெளி விட்டுக் கொடுக்கறேன் (அப்பாடி! எப்படியோ சமாளிச்சுட்டேன்).

இந்த வாரம் காதல் நந்தவனத்துல வந்து குவிஞ்சுடுச்சு பதில்கள்... பெஸ்ட் ஆன்ஸர்ஸ் ரெண்டு... முதல்ல சென்னிமலை செந்தில்குமார் சொல்றதைக் கேட்போம்...

''தாராளமா வாங்கலாம். அவளது துக்கத்தை, சோகத்தை, கஷ்டத்தைக் கடன் வாங்கலாம்; ஷேர் பண்ணிக் கொள்ளலாம். இருவருக்கும் இடையே இருக்கின்ற சுகதுக்கங்களைப் பரிமாறிக் கொள்வதுதானே காதல்!''

# காதல் ந

இடம்பெறும் ஜோடி பிரகாஷ் - அமுதவல்லி.


இவங்களோட கல்யாணம் அரேன்ஜ்டா ஆரம்பிச்சு லவ்வாகி மறுபடியும் அரேன்ஜ்டு மேரேஜாச்சு. குழப்பறேன் இல்லே? பிரகாஷே சொல்றாரு கேளுங்க...

''முதலில் பெரியவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பெண் பார்க்கும் படலம் தடபுடலாக நடந்தது. சில பேச்சு வார்த்தைகளுக்குப் பின் முறிந்து போனது. இந்த இடம் சரிப்படாது என்று சொல்லி விட்டார்கள். என்னால் அப்படிச் சுலபமாகத் தூக்கியெறிய முடியலை. அமுதவல்லி என் மனசுல ஆணியடிச்சு உட்கார்ந்துட்டாங்க. ஸோ, பார்த்துட்டு வந்த பொண்ணைத்தான் கட்டிப்பேன்னு ஒத்தக் கால்ல நின்னேன். அதோடு அடிக்கடி அமுதவல்லியைப் பார்த்து லவ்வையும் டெவலப் பண்ணினேன். கடைசியில இரண்டு பக்கமும் சம்மதிக்க, டும்! டும்! டும்!''



**கா**தலியிடம் கடன் வாங்கலாமான்னு கேட்டோம்...

**மதனராஜன்**



அடுத்து லெ.நா.சிவகுமார்...

''காதலி 'அசல்' என்றால் 'வட்டியும் முதலுமாக' உங்களால் திருப்பிச் செலுத்த முடியுமென்றால், தாராளமாகக் கடன் வாங்கலாம். அது அன்பாக இருந்தாலும் சரி, பொருளாக இருந்தாலும் சரி.''

இவங்க ரெண்டு பேருக்கும் பரிசு உண்டுங்க.

**கா**தலைப் பற்றிச் சில மேலை நாட்டு அறிஞர்கள் ஆங்கிலத்தில் சொன்னதை மொழி பெயர்த்திருக்கிறார் கிரிஜா மணாளன். கூடவே இன்னொரு வேலையும் செய்திருக்கார். திருக்குறளுக்கு உரை எழுதற மாதிரி அந்த இரண்டிரண்டு வரிகளுக்கு எல்லோரும் புரிஞ்சுக்கற பாஷையில விளக்கமும் கொடுத்திருக்கார். படிங்க...

**சுலபமாக அடையும் காதல் கவர்ச்சியை இழந்து விடுகிறது. தடைகள்தான் காதலுக்குப் பெருமதிப்பு தருகிறது!**

**- ஆண்ட்ரியஸ் கோபவனூஸ்**

'கடலை' போட்டோ, வலை விரிச்சோ ஒரு ஃபிகரை லவ் பண்ண வச்சா, அந்த 'லவ்'வுல கவர்ச்சியே இல்லே! அவளோட லவ்வை அடையறதுக்கு நாயா அலையணும்; வில்லனுங்க வந்தா விளாசணும்! இப்படி அமையற காதலுக்குத்தான் கவர்ச்சியும், மதிப்பும் இருக்கு.

# ந்தவனம்



★ பிரகாஷ் - அமுதவல்லி

**கா**தல் **என்பது மனமயக்கம். திருமணம் என்ற சிறு சடங்குடன் அது சமாதியடைந்து விடுகிறது.**

**- மோரி கொரில்லா**

காதல் மயக்கமானது, காலப்போக்குல கதி ஏறிப்போய் 'டாஸ்மாக்' அயிட்டம் போட்டது மாதிரி ஆயிடுது! காதலோட ஆயுள் கல்யாணம் வரைக்கும் தான்! 'மணமேடை'ங்கறது காதல் 'அடக்கம்' ஆகும் சமாதி மேடை!

**கண்ணீரோடு கலக்கும்போதுதான் காதலின் அழகு அதிகரிக்கிறது!**

**- வால்டர் ஸ்காட்**


காதல்னா அது அரும்பி, பூத்து, காய்ச்சி, பழுத்து, கல்யாணம்ங்கற சந்தைக்குப் போறவரைக்கும் 'கல கல'ன்னு மகிழ்ச்சியாகவே இருந்துடக் கூடாது! ஏதாவது ஒரு விஷயத்துல அதுல கண்ணீர் கலந்தாத்தான் அது ஆழமான, உண்மையான காதல். ●




★ வெளியீட்டு விழா...

# தமிழர்களுக்காக ஒரு தகவல் களஞ்சியம்!

ஆங்கிலத்தில் 1768ல் வெளியான என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா, இன்றுவரை உலகின் மிகச் சிறந்த ரெஃபரன்ஸ் புத்தகமாக விளங்கி வருகிறது. உலகின் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ள இது, ஏற்கெனவே மலையாளத்தில் மொழிபெயர்க்கப்பட்டு, முப்பதாயிரம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகியுள்ளது. பிரிட்டானிகாவின் தமிழ் மொழிபெயர்ப்பு, ஆனந்தவிகடனால் அண்மையில் முதலமைச்சரும், பல்வேறு தமிழ் அறிஞர்களும் கலந்துகொண்ட வண்ணமிகு விழாவில் வெளியிடப்பட்டது. மூன்று தொகுதிகள், மூவாயிரத்து அறுநூறு பக்கங்கள். பிரிட்டானிகா வெளியீட்டாளர்களிடமிருந்து தமிழில் வெளியிட உரிமையை வாங்கி, மூன்றாண்டுகள் கடுமையாக உழைத்துத் தமிழில் இந்தத் தகவல் களஞ்சியத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.




''பல்வேறு தகவல்களைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் தமிழ் மக்களிடையே முன்னெப்போதுமில்லாத அளவுக்குக் கடந்த பத்தாண்டுகளாக பெருகியுள்ளது. அந்தத் தகவல் தாகத்தைத் தீர்க்கும் முயற்சிதான் இது'' என்கிறார் விகடன் பதிப்பாளரான பா.ஸ்ரீனிவாசன்.

பிரிட்டானிகா தகவல் களஞ்சியத்தின் பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்று பணியைச் செவ்வனே செய்து முடித்துள்ளார் டாக்டர் சுதா சேஷய்யன். ''முப்பத்திரண்டு தொகுதிகள், நாலு கோடியே நாற்பது லட்சம் வார்த்தைகள் கொண்ட ஆங்கிலப் பதிப்பை தமிழில் மொழிபெயர்த்தது ஒரு மாபெரும் பணி. கடைசி மூன்று வாரங்கள் எனது குழுவில் இருந்த பதினைந்து பேரும் வீட்டுக்கே போகாமல், அலுவலகத்திலேயே தங்கி இரவு முழுக்கக் கண் விழித்துப் பணிபுரிந்தார்கள். இந்தத் தகவல் களஞ்சியத்தின் சிறப்பம்சமே, ஆங்கிலப் பதிப்பில் வெளியான சிலவற்றை நீக்கி விட்டு இந்தியா, தமிழ்நாடு, தமிழர்களுடன் தொடர்புடைய சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு தகவல்களைச் சேர்த்திருப்பதுதான். மலேசியா, சிங்கப்பூர், ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளில் வசிக்கும் தமிழர்களைப் பற்றிய தகவல்களும் இடம் பெற்றிருக்கின்றன'' என்று பெருமிதம் பொங்கப் பேசுகிறார் சுதாசேஷய்யன்.

- மௌலி


வாழ்வின் வழிமுறை
எஸ்டேட் ஃப்ரெஷ்
ஃபில்டர் காபியின்
அதிகாலை ஆரம்பம்
இதுபோன்ற நிறைவில்லை வேறெந்த காபியிலும்
இன்று காலை வணக்கம் தமிழகத்தில் சுவையும் மணமும் மற்றும் உங்கள் நாவில் நெடுநேரம் நிலைத்து இருக்கும் எஸ்டேட் ஃப்ரெஸ் பில்டர் காபியுடன் ஆரம்பம் ஆகிறது.
பல காலமாக எங்கள் வாடிக்கையாளர்களால் பெரிதும் விரும்பப்பட்டு வரும் எஸ்டேட் ஃப்ரெஸ் பில்டர் காபியை உங்கள் அருகாமையிலுள்ள கடைகளில் வாங்கி சுவைத்து இன்றைய நாளை தொடங்குங்கள்.
COFFEE 85%
CHICORY 15%
EFG
ESTATE
FRESH
Coffee
For Door Delivery
Chennai:
044-24415290
Rest of Tamilnadu:
94862 63342
EFG
Estate Foods & Grains
சென்னை மற்றும் தமிழகமெங்கும் வியாபார விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.
தொடர்பு கொள்க: Chennai:9841221796, Rest of Tamilnadu: 9486263342

“அதுல பாருங்க தம்பி, ஆங்... பேரென்ன சொன்னீக? முத்துராமன். நல்ல பேரு. நா என்ன சொல்ல வாரேன்னா, அரசியலுக்கு வர்றதுன்னா பதினாறு வயசுல வந்துரணும். இருபது வயசுல செயிலுக்குப் போயி பாத்துரணும். அப்பத்தேன் முப்பதுல கட்சிக்காரன் மதிக்க ஆரம்பிப்பான். நாப்பதுல மக்களுக்கு நம்மளத் தெரிய ஆரம்பிக்கும். அம்பதுல மினிஸ்டர் ஆயி, அறுவதுல சாவுறதுக்குள்ள கொஞ்சம்



சொத்து சேத்து வெச்சிட்டுப் போயி சேரலாம். நடுக்கா, நாலஞ்சு போராட்டம், தடியடின்னு பேப்பர்ல நம்ம பேரு வந்திச்சின்னா ஒரு கவனம் கெடைக்கும். எங்கப்பா பதிமூணு வயசுல எதிர்கட்சித் தலைவரோட கொடும்பாவிய எரிச்சிருக்காருன்னா பாத்துக்கிடு!''

முத்துராமன் கருத்தேதும் சொல்லாமல் கைகட்டிக் கேட்டுக்கொண்டிருந்தான். அவனுக்கு ஒரு வியப்புதான். எம்.எல்.ஏ. தங்கவேலு கொடுத்தனுப்பிய ஃபைலை அவன் ஓட்டலுக்கு

வெளியே நின்றபடி ஒரு புரட்டு புரட்டிவிட்டுத்தான் இந்தத் திருநெல்வேலிக்காரரிடம் கொடுத்திருந்தான். வித்தியாசமாக ஏதும் அவன் கண்ணில் தட்டுப்படவில்லை.

ஆனால், சொல்லி வைத்த மாதிரி இவர் ஃபைலைத் திறந்ததுமே பின்புறம் ஒட்டிக்கொண்டிருந்த ஒரு தாளை நீக்கி அதன் அடியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துவிட்டாரே!

# கொசு



நிதானமாக அதைப் படித்து முடித்து, மடித்து சட்டைப்பையில் வைத்துக்கொண்டு, "ம்... அப்புறம்... என்ன சாப்புடறீங்க தம்பி?" என்று ஆரம்பித்தவரை அவனுக்குப் புரியவில்லை. சில நிமிடங்களுக்கு முன்னர்தான் யாரோ ஒரு தொண்டனைக் கழுத்தில் துண்டைப் போட்டு இறுக்கி, "நாளைக்கி சுலோசனா மொதலியார் பாலத்துக்கு அடியில ஒம்பொணம் கெடக்கும், சாக்கிரத!" என்று எச்சரித்துவிட்டு வந்திருந்தார்.

அந்தக் கோபமும் உக்கிரமும் ஆங்காரமும் அவனுக்கு மிகுந்த அச்சத்தைக் கொடுத்தன. 'ரொம்ப வெவகாரம் புடிச்ச ஆளா இருப்பாரு போலருக்கே' என்று நினைத்துக்கொண்டான். மாட்டிக் கொண்டிருந்த அந்த இளைஞன் மிகவும் வத்தலாக இருந்தான். ஏதோ நிதி விவகாரமாகத்தான் இருக்க வேண்டும் என்று முத்துராமனுக்குத்

**பா.ராகவன்**

தோன்றியது. தேன் அடித்தவன் புறங்கை நக்காமல் இருக்க முடியாது. அதற்குமேல் களவாட யோக்கியதை அற்றவனாகத்தான் தோன்றியது.

"ஒரு ஒழுக்கம் இல்லாம என்னாத்த இவனுக அரசியலுக்கு வந்து சாதிக்கப் போறானுக?" என்று பொதுவில் கேட்டபடி திருநெல்வேலிக்காரர் அவன் தோளை அணைத்து வெளியே வந்தார்.

"ஐயா, தங்கவேலண்ணன் எதுக்கு என்னிய உங்களாண்ட அனுப்பி வெச்சாருன்னு எனக்குத் தெரியலீங்க. இந்த ஃபைலைக் கொண்டு குடுத்துட்டு வாடான்னாரு. குடுத்துட்டேன்..." என்று நீட்டியபோது, அவனை ஏற இறங்கப் பார்த்தார்.

"அப்பிடியா? ஒண்ணும் சொல்லலியா? லெட்டருல வேற என்னமோல்ல எழுதியிருக்காரு..."

"என்னதுங்கய்யா?"

"அட வேறென்ன? மாநாடு நடக்கப் போவுதில்ல? இங்க கொஞ்சம் எடுத்துப் போட்டு செய்யிற ஆளு பலம் கம்மி. வேலைக்காரனுக இருக்காங்க. இத்த செய்யி, அத்த செய்யின்னா மாடா ஒழைப்பானுக. ஆனா புத்திக்காரன் கம்மி. அதுவுமில்லாம இந்த மாநாடு கொஞ்சம் விசேஷமானது. தலைவரு நாலஞ்சு முடிவுங்கள ஸ்ட்ராங்கா அறிவிப்பாருன்னு

தெரியுது. தங்கவேலு சொன்னாப்ல, மெட்ராசுல பத்து நிமிசத்துக்கு ஒரு சேதி பொறக்குது. இங்க திருநேலிக்கு வந்து சேர்றதுக்குள்ள எல்லாம் பழசாயிடுது.''

ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் அவர் பேசுவது போலிருந்தது அவனுக்கு. அவருடன் இருந்த நாலைந்து தொண்டர்கள் அசப்பில் தொண்டர்கள் போலில்லாமல் குண்டர்கள் போலிருந்ததையும் அவன் கவனித்தான். முரட்டு உருவமும் பொருந்தாத வெள்ளைச் சட்டையும் வேட்டியும் வார் செருப்புமாக, ஒவ்வொருவர் கழுத்திலும் அரைக்கிலோவுக்குக் குறையாமல் நகைகள் இருந்தன.

''ஐயா, சொல்லுறன்னு தப்பா எடுத்துக்காதீங்க. நான் ரொம்பப் புதுசு. எனக்குப் பெருசா ஒண்ணும் தெரியாது. அண்ணன் போயிட்டு வாடான்னாரேன்னு வந்தேன். நீங்க சொல்லுறதப் பாத்தா பெரிய பொறுப்பு ஏதோ தருவீங்க போலருக்குது. எனக்கு அதுக்கெல்லாம் தகுதி இல்லீங்கய்யா!''

திருநெல்வேலிக்காரர் மனம் விட்டு ரசித்துச் சிரித்தார். ''அட இருக்கட்டும்லெ. தனக்குத் தகுதி இல்லைன்னு புரிஞ்சி வெச்சிருக்காம்பாரு. அது தாம் மொத தகுதி. நான் கேக்குதேன், இங்க யாருக்கு என்ன தகுதி இருக்குது? தெரிஞ்சத செய்யிறோம்; கோசம் போடுதோம். பழம் விழுந்தா திங்குறது; கல்லு விழுந்தா தேய்ச்சி விட்டுக்கிட்டுத் திரும்ப ஒருக்கா அடிச்சிப் பாக்குறது, அவ்ளதானே?''

''இருந்தாலும்...''

''அட பெரிசா ஒண்ணும் இல்ல, தம்பி. மாநாட்டுக்கு அதிக நாள் இல்ல. இன்னும் எட்டே பகல் ராத்திரி. டவுன்ல இருக்குற லாட்ஜெல்லாம் புக் பண்ணியாச்சி. தலைவர் குடும்பத்துக்கு மரகத விநாயகம் தோட்டத்துல கெஸ்ட் அவுசு ஏற்பாடு பண்ணியிருக்கு. நம்ம பசங்க எல்லாத்தையும் பக்காவா பாத்துக்கிடுவாங்க. ஒன்ன எதுக்காக தங்கவேலு அனுப்பி வெச்சாருன்னா, ஒரு காரியம் இருக்குது...'' என்று சொல்லி நிறுத்தியவரை, கேள்வியுடன் பார்த்தான் முத்துராமன். என்ன காரியம்?

''கட்சில இருவது வருசம் ஒழைச்சவனுக்குக்கூட கெடைக்காத பரிசய்யா இது! மன சோட வெச்சிக்க; இப்பத்திக்கு மூச்சு விடாத. தலைவரு ஃபேமிலி தங்கப் போற கெஸ்ட் அவுஸுக்கு நீதான்



## அகதியின் காதல் கதை!

பரீட்சார்த்த முயற்சிகளைச் செய்வதென்றால் ஜீவாவுக்கு அல்வா சாப்பிடுவது மாதிரி. ''ஆரம்பத்துல நானும் எல்லோரையும் போலத்தான் இருந்தேன். ராம்-க்குப் பிறகுதான் நாம் ஏதாவது வித்தியாசமா பண்ணணும்னு தோண ஆரம்பிச்சது. என்னோட ஒவ்வொரு படத்தையும் ஏதாவது ஒரு விதத்துல மாறுபட்டுத் தரணும்னு ஆர்வம் வந்துடுச்சு. டிஷ்யூம், ஈ, அரண், பொறி வரிசையில அடுத்து ராமேஸ்வரம் பண்றேன். முழுக்க முழுக்க ராமேஸ்வரப் பின்னணில வளருது படம். அகதியா நடிச்சிருக்கேன். அகதியோட வாழ்வே சூன்யமானது. ஆனா அதை சூப்பராக்க என் வாழ்க்கைல வர்றா ஒரு பொண்ணு. நல்லா வந்திருக்கு. பாவனாதான் எனக்கு ஜோடி. பிச்சி உதறியிருக்காங்க. உலகத் தமிழர்கள் மத்தியில இப் படம் எனக்கொரு நல்ல பேரை வாங்கித் தரப் போறது நிச்சயம்!'' என்கிறார் ஜீவா.

- ரேவதி

மூணு நாளும் சூப்பர்வைசரு.''

''ஐயா! என்ன சொல்லுறீங்க?'' பதறிவிட்டான் முத்துராமன்.

''அட ஆமாங்கறேன். இதெல்லாம் கொஞ்சம் பெரிய எடத்து அரசியல். ஒனக்கு மூளக்க வெளங்குமான்னு தெரியல. தங்கவேலு என்னாண்ட சொல்லிவுட்டது இதான். அவரு நமக்கு நாப்பது வருச சிநேகம். ரத்தமும் சதையுமா வளந்துட்டம். இப்ப ஒரு காரியம் பண்ணலாம்னு யோசிச்சப்ப, 'சரியான ஆளா பாத்து அனுப்பு தங்கம்'னு சொல்லியிருந்தேன். அதான் உன்னிய அனுப்பியிருக்காரு.''


''என்னால நம்பவே முடியலீங்கய்யா. நான் ஒரு குப்பை. எங்கியோ குப்பத்துல கெடக்குறவன்... என்னியப் போயி... ஐயா, அதெல்லாம் போலீசு, செக்யூரிட்டி ஆளுங்க இருப்பாங்களேங்க?''

''எவன் இருந்தா ஒனக்கென்னப்பு? தலைவர் ஃபேமிலியப் பாத்துக்கிட வேண்டியது நம்ம பொறுப்பு. வேளைக்குச் சாப்பாடு, டிபன், கூல் டிரிங்ஸு, அப்பால என்ன கேக்குறாங்களோ போட்ரச் சொல்லியிருக்காரு தங்கம்...''

''நான் வேற என்னா செய்யணுங்க?''

''அட இந்த வேலை போதாதா ஒனக்கு? எம்புட்டு பெரிய காரியம் தெரியுமா? எலுவத்தேலுல இதே வேலைய ஒருக்கா நாம் பாத்திருக்கேன். அம்மிணிக்கு அப்ப பிரசவகாலம். வூட்டாண்ட சாதிசனம் குய்யா முய்யான்னு கத்திக்கிட்டு இருந்ததுங்க. 'என்னா தகப்பண்டா இவன்'னு காறித் துப்பினாங்க. கண்டுக்கலியே நான்?

''நைட்டு நம்ம க்ளப் அவுசாண்ட வந்துரு. அங்க வெச்சி சொல்லுதன். இங்க தொண்டருங்க நெறையப் பேரு இருக்காங்க. ஒவ்வொருத்தனும் ஒவ்வொண்ணு நெனச்சிப்பானுக. இன்னாடா தலைவரு திடீர்னு மெட்ராஸ்காரன் ஒருத்தனப் புடிச்சிக்கிட்டு ரகசியம் பேசுதாரேன்னு தப்பா எடுத்துக்குவாங்க. தொண்டர்கள் இல்லாம நாம அரசியல் பண்ணிரமுடியுமான்ன? அவங்கதான் சீவாதாரமே! என்ன நாஞ்சொல்லுறது?''



**பிரமிப்புடன் பார்த்தபடி நடந்த முத்துராமன், தனக்கு என்ன நேர்ந்து கொண்டிருக்கிறது என்பதே புரியாமல் குழம்பினான்!**

''அ...ஆமாங்க''

''முத்து, நீ சாப்ட்டு கொஞ்சம் படுத்துத் தூங்கு. நான் ஆறுமணி சுமாருக்கு வந்துருதேன். வந்ததும் நாம க்ளப் அவுசுக்குப் போயிருவோம்.'' அவர் கிளம்பிவிட்டார்.

**மா**நாட்டுத் திடல் களைகட்டத் தொடங்கியிருந்தது. லாரிகளில் வந்திறங்கிய கட் அவுட்டுகள் நிமிடப் பொழுதில் எழுந்து நின்றன. கைகூப்பிய தலைவர், கையாட்டும் தளபதிகள், புன்னகைக்கும் செயல் வீரர்கள். வாழ்த்தும் நெஞ்சங்கள். பந்தல் வேலை படுஜரூராக நடந்துகொண்டிருந்தது. பந்து பந்தாகத் தாம்புக் கயிறுகள் உருட்டிவிடப்பட்டுக் கொண்டிருந்தன. வேட்டியை மடித்துக் கட்டி திருநெல்வேலிக்காரர் வேலைகளில் மூழ்கிவிட்டார்.

பிரமிப்புடன் பார்த்தபடி நடந்த முத்துராமன் தனக்கு என்ன நேர்ந்துகொண்டிருக்கிறது என்பதே புரியாமல் குழம்பினான். உடன் வந்த நெல்லைத் தொண்டன், தொண்டையைச் செருமிக்கொண்டு, ''நீங்க செய்யப்போற வேலைதாங்க உங்க ஊரு எம்.எல்.ஏ., எங்க ஊரு எம்.எல்.ஏ. ரெண்டு பேத்தோட எதிர்காலமே இருக்குது'' என்று சொன்னான்.

மிரண்டு போனான் முத்துராமன்.

**(தொடரும்)**

# உயிர் சுரக்கும் வாசகம்!

பா.சத்தியமோகன்



யாரோ ஒருவர்
நம் பொருட்டு
ஓயாமல் பாடுபடுகிறார்

யாரோ ஒருவர்
பனிச் சிகரத்தில்
எங்கோ நின்றபடி நம்க்காக
உறங்காது நின்று
கடமையாற்றுகிறார்

யாரோ ஒருவர்
சற்றும் தளராமல் தம் வலி தாண்டி
அடுத்த கட்டம் ஏறுகிறார் நமக்காச

எதிலோ ஒருவர்
நம் பொருட்டுச் சிந்தித்து
உயிர் சுரக்கும் வாசகம் எழுதினார்

எந்நேரமும் எங்கோ ஓர் மூலையில்
நம் உணவு தயாரித்த
தாயின் வளையல் கைகள்
நரம்பு தளர்ந்து ஏங்குகின்றன

எங்கோ ஒரு பள்ளி மூலையில்
வேப்ப மரத்தின் கீழ் ஒரு குழந்தை
திணிக்கப்பட்ட கல்விச் சுமையால்தான்
வலி என்று உணர
சந்தர்ப்பம் தரப்படாமல்
பாடம் கற்கிறது கண்ணீர் காய்ந்து

தப்பும் தவறுமாக விரோதித்தபடி
எப்படி எப்படியோ இருக்கிறோம்

எங்கோ இருந்து
தானிய மணிகளும்
நீரும் காற்றும் வாழ்வும்
சுரந்தபடியேதான் தருகிறது
செயல்பட மட்டுமே
அறிந்த இயற்கையும்

# சுட்டி டீ.வி. எப்படி இருக்கு?

1 ● என்.காசிதாஸ், சிதம்பரம்

*? பண்பாடற்ற அரசியல் சூழல் வந்து விட்டதாக கருணாநிதி வருத்தம் தெரிவித்துள்ளாரே?*

! இதைத்தான் விதை விதைப்பது அல்லது வினை விதைப்பது என்று பழமொழியாகச் சொன்னார்கள்!

2 ● கே.ஆர்.ஜெயலக்ஷ்மி, சென்னை - 11

*? இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் நமக்குச் சாதகம் என்று பிரதமர் மன்மோகன்சிங் கூறியுள்ள நிலையில், அணுசக்தி சட்டத்தின் மூலம் அமெரிக்கா நமக்கு முட்டுக்கட்டை போடுகிறதே?*

! அமெரிக்க நோக்கில், அதற்குச் சாதகமாக அமைகிற வரை மூலவர் (புஷ்) வரம் தந்தாலும் பூசாரி (ஸெனட்) வரம் தர மாட்டார்!

3 ● எம்.சிவகுருநாதன், தஞ்சை

*? 'நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சி 9.2 சதவிகிதம். ஆனால், இதனால் பலனடைந்த மக்களின் எண்ணிக்கை 0.02 சதவிகிதம்தான்' என்று மத்திய பஞ்சாயத் ராஜ் அமைச்சர் மணி சங்கர் அய்யர் தெரிவித்திருப்பது பற்றி...?*

! உண்மையை ஒப்புக்கொண்டதற்குப் பாராட்டு. ஆனால், புள்ளி விவரங்களுடன் நில்லாமல், பல்வேறு துறை அமைச்சர்களும் நிதி அமைச்சருடன் இணைந்து, நாட்டுக்கான அபிவிருத்தி/ முன்னேற்றக் கொள்கை வகுத்து, இலக்குகள் நிர்ணயித்து அவற்றை அடைய தீவிரமாக முயற்சி செய்வது நல்லது.

4 ● வீ.பெரியசாமி, தேனூர்

*? கழைக் கூத்தாடிகளுக்கு ஜிம்னாஸ்டிக் பயிற்சி அளித்து, எதிர்காலத்தில் அவர்களை சாம்பியன்களாக உருவாக்கலாம் என விளையாட்டுத் துறை*



* விதை விதைத்தார்



* பிழைத்துக் கொள்வார்!

துரை

## நீங்கள் கேட்டவை

## வாசக தராசுகளே!

இவ்வாரத்தின் சிறந்த பதிலைத் தேர்வு செய்து, அஞ்சலட்டையில் எழுதி, முகவரி பகுதியில் வாசக தராசு 20.5.07 என்று குறிப்பிட்டு 21.05.07-க்கு முன்னதாகக் கிடைக்கும்படி அனுப்பி வையுங்கள். மிக அதிகமான வாக்குகளைப் பெறும் பதிலைத் தேர்வு செய்தோருள் ஒருவருக்குக் குலுக்கல் முறையில் ரூ 100 பரிசு! ஆசிரியரின் முடிவே இறுதி.

20.04.07 இதழின் வாசக தராசு போட்டியில் சிறந்த கேள்வியாகத் தேர்வானது கேள்வி எண் 13

பரிசு பெறுபவர்:

**எஸ்.ஜானகி, உடுமலை**



* [illegible]



* [illegible]

**அமைச்சர் மொய்தீன் கான் அறிவித்துள்ளாரே?**

! காற்றுக்கு வேலி போடும் முயற்சியாக முடியக்கூடும்.

5 ● **அ. முரளிதரன், மதுரை - 3**

**? சுட்டி டீ.வி. பார்த்தீர்களா? எப்படி இருக்கு?**

! 'போகோ' நெடி சற்று அதிகமா இருக்கு!

6 ● **எச்.ஆன்டனி தமிழரசன், மும்பை - 17**

**? தனியார் நிறுவனங்களுடன் போட்டியிடும் அளவுக்கு நல்ல சரக்குகளை உற்பத்தி செய்தால்தான் கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியும் என்று சட்டப்பேரவையில் முதல்வர் கூறியுள்ளாரே - சரியா?**

! அதிகார போதை என்பது மது போதையை விடவும் கொடியது. அதனால் தான் சில சமயங்களில் இப்படியெல்லாம் பேசத் தோன்றுகிறது. அடுத்தாற்போல் கள்ளச்சாராயத்தையே சட்டபூர்வமாக்கி விடலாம் என்றுகூடச் சொல்லக்கூடும்.

7 ● **வசீகரன், சென்னை - 18**

**? நல்ல காதலி அமைய என்ன செய்ய வேண்டும்?**

! நல்ல காதலனாக இருக்க வேண்டும்!

8 ● **எம்.பாஸ்கர், திண்டுக்கல்** ❐

**? கிரிமினல் பின்னணி உள்ளவர்களைத் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கக் கூடாது என்று தேர்தல் கமிஷனும் சட்ட கமிஷனும் அளித்துள்ள பரிந்துரைகளுக்கு நாடாளுமன்றம் ஏன் இன்னமும் ஒப்புதல் அளிக்க மறுக்கிறது?**

! எல்லாக் கட்சிகளுமே அதிக எண்ணிக்கையில் சட்டமன்றங்களிலும் நாடாளுமன்றத்திலும் இடங்களைப் பிடித்து, ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஒரே சுயநல நோக்குடன் செயல்படுவது காரணமாகத்தான். இதற்குப் பணபலமும் குண்டர் படையும் உதவும் என்ற நம்பிக்கையின் விளைவாகத்தான்.

9 ● **ஆர்.பிரகாஷ், திருச்சி - 4**

**? தமிழக காங்கிரஸில் நிலவும் கோஷ்டிப் பூசல், கட்சியின் வளர்ச்சிக்கு உதவும் என்கிறாரே மார்கரெட் ஆல்வா?**

! அது உண்மையெனில், இதுநாள்வரை நடந்த கோஷ்டிப் பூசலில் இன்று காங்கிரஸ் ஓஹோஹோ என் றல்லவா இருக்க வேண்டும்!

**தராசு**

# நீங்கள் கேட்டவை

10 ● லெ.நா.சிவகுமார், சென்னை - 33

*? பள்ளி - கல்லூரிகளில் விளையாட்டைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்று மன்மோகன்சிங் யோசனை தெரிவித்துள்ளாரே?*

! பகுதி அளவில் சரி, கட்டாயமாக்கப்படட்டும்; ஆனால் பாடமாக்கப்பட வேண்டாம். பாடமாக்கி, மதிப்பெண் தர ஆரம்பித்தால் விளையாட்டின் மீது வெறுப்பை வளர்க்க வேறெதுவுமே வேண்டாம்!

11 ● எஸ்.கே.மூர்த்தி, குட்டலாடம்பட்டி

*? ஜெயலலிதா யார் யாரை எப்படியெப்படி திட்டியிருக்கிறார் என்று கலைஞர் தெரிவித்துள்ள புள்ளி விவரப் பட்டியலைப் பார்த்தீர்களா?*

! பதிலுக்கு ஜெயலலிதாவும், கருணாநிதி யார் யாரை எப்படியெப்படியெல்லாம் திட்டினார் என்று ஒரு பட்டியல் தயாரிக்கலாம். நம் செம்மொழியின் சக்தியை உலகறியச் செய்ய இதைவிடச் சிறந்த உபாயம் வேறென்ன!

12 ● எம்.ராஜேந்திரன், லால்குடி

*? ஆஸ்திரேலியாவுக்கு இணையாக எந்த அணியும் இல்லை என்று ரிக்கி பாண்டிங் மார் தட்டுகிறாரே?*

! இப்போதைக்கு கங்காருவின் துள்ளலுக்கு ஈடு கொடுக்க எதனாலும் முடியலை என்பதை நிரூபித்த பிறகு, தாமே மார்தட்டிக் கொள்வதில் தப்பில்லை!

13 ● வீ.முத்தையா, திருநெல்வேலி★

*? கலாசாரத்தில் உலகளாவிய உயர்வு பெற்ற நாம், சமூக ஒழுக்கத்தில் ஏன் மிகவும் பின் தங்கி இருக்கிறோம்?*

! கலைகளைப் பொருத்தமட்டில் நாம் உலகளவில் உயர்ந்து நிற்கிறோம்; உண்மை. ஆனால், கலாசாரம்/பண்பாடு என்பது கலைகள் மட்டுமல்ல... போலித் தனத்தை ஒதுக்கி, நமது மெய்யான பண்பாடு என்ன என்பதை நாமே புரிந்துகொண்டால், (அதற்கு வழி செய்யப்பட்டால்) சமூக ஒழுக்கம் தன்னால் உருவாகும்.

14 ● மல்லிகை மன்னன், மதுரை

*? மீண்டும் சிறைக் கம்பிகளை எண்ண வேண்டிய பரிதாப நிலைக்கு வைகோ அண்ணாச்சி வந்துவிடுவார் போலத் தெரிகிறதே?*

! அந்த அளவுக்குக் கலைஞருக்குத் துணிவு இருப்பதாகத் தெரியவில்லை.



* யோசனை சொன்னார்!



* புட்டு வைத்தார்!

☐ ரூ 100 பரிசு பெறுபவர்
எம்.பாஸ்கர்,
ஹோட்டல் சங்கீத்,
30, ஏ.எம்.சி.ரோடு,
திண்டுக்கல்
624 001

★ ரூ 50 பரிசு பெறுபவர்
வீ.முத்தையா,
35, பாரதியார் தெரு,
திருநெல்வேலி டவுன்
627 006



6

# தீமையை ஓட்டும்

**ஸ்**வபாவ மதுரா என்று ஒரு பெயர் அம்பாளுக்கு உண்டு. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமத்தை ஓதும் வழக்கம் உள்ள பக்தர்களுக்கு இது நன்கு தெரிந்திருக்கும்.

சுபாவத்தில் இனிமையானவள் என்பது இதற்குப் பொருள். அன்னை பராசக்தியானவள் தீமையை அழிப்பதற்கு முன் நிற்பவளேயானாலும் அவளது உள்ளார்ந்த தன்மை என்பது அமைதி நிறைந்த இனிமைதான் - இதனை உணர வேண்டுமானால் நாம் சிறுவாச்சூர் மதுரகாளி அம்மனைத் தரிசனம் செய்ய வேண்டும்.

சடைமுடி அவள் முகத்தைச் சுற்றித் தீச்சுடரைப் போல் விரிந்து பரவி, சிரசின் உச்சியில் கூம்பி நிற்கிறது. பீடத்தில் அமர்ந்த நிலையில் ஒரு கால் மடிந்திருக்க, வலப் பாதம் சிம்ஹ வாகனத்தின் மீது அழுந்திக்கொண்டிருக்கிறது. மேல் கைகளில் நாகம் சுற்றிய உடுக்கையும், பாசமும், கீழ்க்கரங்களில் கூரிய கத்தி, கபாலமும் (சிலர் இதை அக்ஷயப் பாத்திரம் என்றும் சொல்கிறார்கள்) ஏந்தியிருக்கிறாள். கண்கள் புடைத்துப் பெரிதாகத் தெரிகின்றன... ஆனால் வடிவமும் தோற்றமும் அச்சுறுத்துவதற்குப் பதிலாக அரவணைக்கின்றன. அவள் முன்னே நிற்கிறபோது அமைதியும் இனிமையுமே நம்மை ஆட்கொள்கின்றன. நிறைவுடன் வணங்கி நிற்கும் சமயத்தில் கோயில் பூசாரி ஒருவர் வாழ்த்துச் சொல்கிறார்... அடிவயிற்றிலிருந்து ஓங்கி எழும் அவரது குரல், ''உன்னால் ஆகாதது ஒன்றில்லை சாமி...'' என்று ஆரம்பித்து, நாடு, நகரமும், வீடு - வாசலும், பிரார்த்தனைக்கு வந்துள்ள பக்தர்களும், உலகம் முழுமையும் சிறக்க, எளிய பேச்சுத் தமிழில் வரம் வேண்டுகிறது...

'கண கண'வென்று கோயில் மணி ஓசை போல் ஒலிக்கும் அந்த வாழ்த்துரை முடிந்த பிறகு தவழும் அலாதியான அமைதியில் தீப ஆராதனை காட்டுகிறார்கள். அந்த ஒளியில் அம்மன் முகத்தில் தெரியும் மதுர புன்னகை ''நீங்கள் வேண்டியன யாவையும் தந்தோம், தந்தோம், தந்தோம்'' என்று மீண்டும் மீண்டும் சொல்கிறாற் போலிருக்கிறது.

இவ்வாறு 'வாழ்த்து'ச் சொல்லி, பக்தர்

சீதா ரவி

# மதுரகாளி

களின் பிரார்த்தனைகளை அம்மனிடம் பரிந்துரைக்கும் வழக்கம் சிறுவாச்சூர் மதுர காளியம்மன் ஆலயத்துக்கே உரியது. இதைப் போன்று வேறு பல நூதன வழக்கங்களும் இங்கே உண்டு. அவற்றை அறியும் முன், சிறுவாச்சூருக்கு எப்படிப் போக வேண்டும் என்று பார்ப்போம் -

பெரம்பலூரிலிருந்து (தெற்கே) எட்டு கிலோமீட்டர் தொலைவிலும் திருச்சி யிலிருந்து 48 கிலோமீட்டர் தூரத்திலும் இருக்கிறது சிறுவாச்சூர். என்.எச்-45 நெடுஞ்சாலையிலிருந்து சிறுவாச்சூருக்குக் கிளைச் சாலை பிரியும் இடத்தில் கோயில் இருப்பதைத் தெரிவிக்கும் பெரிய வளைவு இருக்கிறது. அதனுள் நுழைந்து சற்று தூரம் சென்றால் முதலில் வேறொரு கோயில் தான் தென்படும். அதைக் கடந்து, ஊர் எல்லைக்குப் போனால்... மதுரகாளி அம்மன் ஆலயம்!

பொதுவாக, திங்கள் - வெள்ளிக் கிழ மைகளில் மட்டுமே மதுரகாளி அம்மன் கோயில் திறந்திருக்கிறது. திருவிழாக் காலங்களிலும் (சித்திரை அமாவாசைக்கு அடுத்த செவ்வாய் ஆரம்பம்), நவராத்திரி நாட்கள், பௌர்ணமி, அமாவாசை களின்போதும் அம்மனைத் தரிசிக்கலாம். மற்ற நாட்களில் கோயில் திறப்பதில்லை.

கர்ணப் பரம்பரையாக நிலவி வரும் இந்த வழக்கத்துக்குக் காரணமும் இருக் கிறது. மதுரகாளி அம்மன் கண்ணகியின் அம்ச தேவதை என்கிறார்கள். பொங்கியெழுந்த தார்மிகக் கோபத்தில் மதுரையைத் தீக் கிரையாக்கிவிட்டு வெளி யேறிய கண்ணகி, இந்தச் சிறுவாச்சூருக்கு வந்த பிறகு தான் கோபம் அடங்கி சாந்தம் அடைந் தாளாம்! மதுரையிலிருந்து வந்து அவள் இங்கே குடியேறியதால் மதுரைகாளி என் றும் பெயர் பெற்றதாகவும் இதுவே பின்னால் மதுரகாளி என்று (அவளுக்கு அமைதி திரும்பியதற்குப் பொருத்தமாக) மருவியது என்றும் கர்ணப் பரம்பரைக் கதை விளங்குகிறது.

மதுரகாளியம்மன் ஒரு வெள்ளிக் கிழமையில்தான் இவ்வூருக்கு வந்து சேர்ந் திருக்கிறாள். அப்போது இங்கு இருந்த செல்லியம்மன் என்ற கிராம தேவதை, ஒரு மந்திரவாதியின் சூன்யத்தால் கட்டுப்படுத் தப்பட்டு இருந்திருக்கிறாள். மதுரகாளி யம்மனிடம் அவள் இவ்விஷயத்தை எடுத் துச் சொல்ல, மந்திரவாதியை அழித்து, செல்லியம்மனை விடுவித்து நிலைப் படுத்தியிருக்கிறாள் மதுரகாளி. செல்லியம் மன் தன் இடத்தை மதுரகாளியம்மனுக்கு விட்டுக் கொடுத்து, சிறுவாச்சூர் கோயிலில் குடியேறச் சொல்லிவிட்டு, அருகே உள்ள சிறு குன்றுப் பகுதிக்குச் சென்றுவிட்டாள். சிறுவாச்சூர் மதுரகாளி கோயிலுக்கு அழ கிய பின்புலமாக அமைந்துள்ள அந்தக்

✱ மதுரகாளி





* புற்றுக்கோயில், சிறுவாச்சூர்

குன்றுகளில் இன்னமும் செல்லியம்மனும், வேறு பல கிராம தேவதைகளும் கோயில் கொண்டிருக்கிறார்கள்.

வெள்ளிக்கிழமை இவ்வூருக்கு வந்து, திங்கள்கிழமையன்று மதுரகாளியம்மன் பக்தர்களுக்குக் காட்சி கொடுத்ததால் இவ்விரு தினங்களில் கோயில் திறக்கப்பட்டு வழிபாடு நடைபெறுகிறது.

வழிபாட்டில் எது செய்தாலும் அது செல்லியம்மனுக்கே முதலில் செய்யப்படுகிறது. தீப ஆராதனை முதலில் குன்றுகள் இருக்கும் திசையில் காட்டப்பட்ட பிறகே மதுரகாளி அம்மனுக்குக் காட்டப்படுகிறது. உத்ஸவ விசேஷங்களும் முதலில் செல்லியம்மனுக்கே செய்யப்படுகின்றன. மதுரகாளி அம்மன் சன்னிதிக்கு வெளியே, துவார - பாலகிகளின் அருகே, குன்றில் உள்ள முக்கிய தேவதைகளுக்கும் பிரதிநிதித்துவ சிலை வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மூலஸ்தான் அபிஷேகம் செய்கையில் இவர்களுக்கும் முறைப்படி அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. உத்ஸவ தினங்களின்போது, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தேவதை மதுரகாளியுடனும் செல்லியம்மனுடனும் சேர்ந்து வலம் வருகிறார்கள்.

நாம் சென்றிருந்தபோது சித்திரை மாத உத்ஸவ காலம்! இரவெல்லாம் ஊர்வலம் வந்த களைப்பில் மதுரகாளியம்மனுடன் வேறு மூன்று தேவதைகளும் காலை பத்து மணி அளவில் கோயில் வாசலில் தத்தமது சப்பரங்களில் அமர்ந்தபடி இளைப்பாறிக் கொண்டிருந்தார்கள். சிம்ஹ வாகனத்தில் நடுநாயகமாக மதுரகாளியம்மன் வீற்றிருக்க, விதவிதமான நிறங்களில் மலர்ச் சரங்கள் அடுக்கடுக்காக அவளது சப்பரத்தை அலங்கரித்தன. இளம்பச்சை நிறத்து தவன மாலையிலிருந்து மதுரமான மணம் பரவி அவளது பெயரையும் சக்தியையும் ஒருங்கே பறைசாற்றியது. அவள் அருகே, திரிசூல வடிவின் மையத்தில் நிற்கும் செல்லியம்மனின் அழகிய சிறிய உருவம், காவல் செய்வது போல் பெரியசாமியும் சோலை முத்துசாமியும் தனித் தனிச் சப்பரங்களில் ஆரோகணித்திருக்கிறார்கள்.

பூசாரிகள் பய பக்தியுடன் சுவாமி வடிவங்களையும் அம்மன் விக்ரஹங்களையும் இறக்கி வந்து மூலஸ்தானத்தையொட்டிய உள்பிராகாரத்தில் நிலைகொள்ளச் செய்தார்கள்.

தலைமைப் பூசாரி சுந்தரம், கோயிலைப் பற்றியும் அம்மனைப் பற்றியும் விவரங்

களைச் சொன்னார்.

மதுரகாளி அம்மனுக்குச் சுத்தமான அன்னம்தான் படையல்! இங்கே நேர்ந்து கொண்டு தரப்படும் ஆடு-மாடு-கோழி இனங்கள் உயிரோடு ஏற்கப்படுகின்றன. பலி பூஜையும் படையலும் பரிவார தேவதைகளுக்குத்தான்!

சிவராத்திரியின்போது இங்கே நடக்கும் கரகாட்டம் கண்கொள்ளாத காட்சியாக இருக்குமாம்! ஒன்பது கரகங்களைத் தாங்கி கலைஞர்கள் சுழன்றாடுவது பக்திப் பெருக்கினால்தான் சாத்தியமாகிறது என்கிறார்கள்.

சதாசிவ பிரம்மேந்திரர் இத் தலத்துக்கு வந்து ஸ்ரீ சக்கர பிரதிஷ்டை செய்ததாகச் சொல்லப்படுகிறது. காஞ்சி முனிவர் ஆண்டுக்கொருமுறை இவ்வூரில் வந்து தங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார் என்றும் சுந்தரம் பூசாரி தெரிவித்தார்.

மலைமேல், செல்வியம்மனைத் தவிர கரிகண்ட அய்யன், லாடதுரை, சத்திரத்தம்மன், பெரியகன்னியம்மன் ஆகியோரும் இருக்கிறார்கள். அங்கேயே வேறு கோயில்களில் கிணத்தடி அய்யன், சிவகன்னி அம்மன், உரப்புளி அம்மன், கன்னிமார், ஆத்தடி குருசாமி, நாகக்கன்னி அம்மன் என்று தேவதைகளின் பட்டியல் நீண்டதாக இருக்கிறது. இவர்களையெல்லாம் தவிர, சித்தாதி சித்தர்கள் 64 பேர் வேறு... சூட்சும ரூபத்தில் மலைச்சாரலில் இருக்கிறார்கள்!

இத்தனை சக்திகளும் இருக்கும் இடத்துக்கு (மலை மேல்) மெல்லியல்புடைய பெண்கள் செல்லலாகாது என்பதும் கர்ணப் பரம்பரை வழக்கமாக இருக்கிறது. கீழே இருந்தபடியே மலைமேலுள்ள கோயிலை நோக்கி வழிபட இடம் அமைத்திருக்கிறார்கள்.

இக் கோயிலில் அனைத்து தினங்களிலும் அன்னதானம் அளிக்க பல்வேறு பக்தர்கள் கட்டணம் செலுத்திப் பதிவு செய்திருக்கிறார்கள்..



● சுந்தரம் பூசாரி

**ப**ல்லாயிரம் குடும்பத்தினருக்கு இந்த மதுரகாளியம்மன் குலதெய்வமாக விளங்கி அருள்புரிந்து வருகிறாள். அங்கப் பிரதஷிணம் செய்வதும் மாவிளக்குப் போடுவதும் இங்கே முக்கியமான பிரார்த்தனைகள். மாவிளக்குக்கான மாவை-கோயிலுக்கு வந்த பிறகு இங்கேயே-இடித்துக் கொள்ளும் பழக்கம் நிலவுகிறது. இதற்கென உரல் - உலக்கை வசதியும், இடிக்க இயலாதவர்களுக்கு இடித்துத் தர ஆட்கள் வசதியும் செய்யப்பட்டிருக்கின்றன.

**ம**ந்திரவாதியின் சக்தியை மதுரகாளி முறியடித்து செல்லியம்மனின் பெருமையை மீண்டும் நிலைநாட்டிய தலம் என்பதால் பில்லி - சூன்யம், கண் திருஷ்டி போன்றவற்றை நீக்கவும் போக்கவும் இத் தலத்தில் நேர்ந்து கொள்வோர் அதிகம்.

பகுத்தறிவுக்கு ஒவ்வாத நம்பிக்கையாக இருக்கிறதே என்று நாம் வாதாடும் முன் ஒருமுறை மதுரகாளியம்மனின் திருமுகத்தைப் பார்த்துக்கொண்டால் போதும், அவள் கண்களில் தெரியும் தீக்ஷண்யம் நமக்குள் இருக்கும் அச்சப் பிச்சு அவலங்களைப் பொசுக்கி விட்டதாக உணர்வோம். உலகில் எங்கு, என்ன வகை தீமை இருப்பினும் அதனை இருந்த இடத்திலிருந்தபடி அழிப்பதென்பது அவளுக்கா இயலாது!

*நல்லது தீயது நாம் அறியோம் -*
*அன்னை*
*நல்லது நாட்டுக; தீமையை ஓட்டுக!*
*நின்னைச் சரணடைந்தேன்*
*(பாரதியார்)*

படங்கள் : ஸ்ரீ அரசு

*(தொலைபேசி: 04328 - 225333, 04328 - 225325)*
*மின் அஞ்சல்: siruvachoormathurakali.org*
*இணையதளம்: mathurakaliamman@sanchar net.in*





# “அவர்கள் ஹீரோக்கள் அல்ல... கொள்ளையர்கள்!”

## பள்ளிக்கூட பாடம் நடத்தும் தங்கர்பச்சான்


“**வா**ழ்வில் நாம் உயர்ந்த பிறகு தாய் - தந்தையை மறப்பதில்லை; நண்பர்களையும் பூஜிக்கிறோம். ஆனால், இத்தனை உயரத்துக்கு நம்மைக் கொண்டு வந்த பள்ளிக்கூடத்தை நினைக்கிறோமா? ஒவ்வொரு மனிதருக்குள்ளும் இந்தக் கேள்வி கொழுந்துவிட்டு எரிய வேண்டும்; நாம் படித்த பள்ளிக்கூடத்துக்குத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும்'' - 'பள்ளிக்கூடம்' படத்தைப் பற்றிக் கேட்டால், 'பக்'கென்று பூத்துவிடுகிறது தங்கர்பச்சானின் மனசு. தொடர்ந்து அதே லயத்தோடு பேச்சைத் தொடர்கிறார்...

''தமிழ் சினிமா இதுவரை



பள்ளிக்கூடத்தை காதலுக்கான ஒரு களமாகத்தான் பயன்படுத்தியிருக்கிறது. ஆனால் ஒரே பள்ளியில், ஒரே வகுப்பில் பயிலும் இரு மாணவர்களில் ஒருவன் நீதிபதியாகவும் அடுத்தவன் குற்றவாளியாகவும் உருவாவது எப்படி என்கிற வாழ்வியல் முரண்பாடுகளை முதன்முறையாக என் படத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இழந்துபோன நேரத்தைத் திரும்பப் பெற இயலாது. இதை






அடிப்படையாக வைத்து நான் இரண்டரை வருடங்களுக்கு முன் எழுதிய நாவல்தான் 'களவாடிய பொழுது'. அதை நான் வெளியிடவே இல்லை. அப்படி வெளியிட்டிருந்தால் நான் 'பள்ளிக்கூடம்' செதுக்குவதற்கு முன்பே சினிமாவாக்கி அதைச் சிதைத்திருப்பார்கள். இந்த நாவல்தான் பள்ளிக்கூடமாக உருவாகியிருக்கிறது.''

**அடிக்கடி ஏதாவது சர்ச்சைகளில் சிக்கிக்கொள்கிறீர்களே... விரும்பியா... அல்லது வேண்டுமென்றே சிக்க வைக்கப்படுகிறீர்களா?**

''சர்ச்சை என்பது என்ன? தந்தை பெரியார் சிக்கிக்கொள்ளாததா? சமூகத்தைப் பற்றிய உணர்வும், சிந்தனையும் உள்ள போராளிக்கு எப்போதுமே சிக்கல்தான்! சமூகத்தைப் பற்றி எந்தக் கவலையும் இல்லாமல் தன்னலத்தோடு 'தான் உண்டு, தங்கள் வேலை உண்டு' என்றும் எவனாவது பார்த்துக்கொள்வான்... தங்கர்பச்சான் மாதிரி ஆட்கள் எதற்கு மூக்கை நுழைக்கிறார்கள் என்றும் இருப்பவர்கள், சர்ச்சைகளில் சிக்கிக்கொள்ளவும் மாட்டார்கள்... சமூகப் பொறுப்பற்றவர்களாகவும் ஆகிவிடுகிறார்கள். என்னுடைய கேமராமேன் தொழில், வேலை செய்து' கூலி வாங்குவது. ஆனால், அதையும் மீறி நான் அடித்தட்டு மக்களின் வாழ்க்கையைப் பற்றிக் கவலைப்படும்





சமூகப் பொறுப்புள்ள சிந்தனையாளன். அதிலும் மொழிச் சிந்தனையாளன். இதைப் பார்த்து எரிச்சல் அடைகிறவர்கள்தான் என்னைச் சிக்கலில் மாட்டி விடுகிறார்கள்.''

**பெரிய ஹீரோக்களை வைத்துப் படமெடுக்கத் தயங்குவது ஏன்?**

''பெரிய ஹீரோக்கள் எதை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள்? அவர்களை வைத்துப் படம் எடுக்கவில்லையென்றால் எனக்கா இழப்பு? தமிழில் நல்ல சினிமா வராது, அவ்வளவுதான்!



# ரஜினியிடம் என் படத்தில் நடிக்க கால்ஷீட் கேட்டது உண்மைதான்!

நான் சொல்கிற மாதிரி அவர்கள் நடிக்கட்டும், இந்தச் சமூகத்தை மாற்றிக் காட்டுகிறேன். ஆனால், சமூகத்தைப் பற்றி எந்த அக்கறையும் இல்லாமல், பணம் மட்டுமே குறிக்கோளாக உள்ள - தங்கள் பை நிரம்பினால் போதும் என்று நினைக்கும் கொள்ளையர்கள், ஹீரோக்கள் அல்ல... சமூகத்துக்கான வில்லன்கள்!''

**ஒரு படத்தின் வெற்றியைத் தீர்மானிக்கும் அம்சம் எது?**

''பப்ளிசிட்டிகள் கொடுத்து, ரசிகர்களால் கட் அவுட்கள் வைக்கப்பட்டு, பல கோடிகளைக் குவிப்பது மட்டுமே ஒரு படத்தின் வெற்றியைத் தீர்மானித்துவிட முடியாது. அந்த சினிமாவால் மக்களுக்கு எதைக் கொண்டு போய்ச் சேர்த்தோம் என்பதே உண்மையான வெற்றி. 'பள்ளிக்கூடம்' படத்தின் பாடல்களை பத்திரிகையாளர் சந்திப்பில் வெளியிட்டுவிட்டு, படத்தின் கருவைச் சொன்னேன். அன்று இரவு பன்னிரண்டரை மணிக்கு, ஒரு பத்திரிகை நிருபரின் தொலைபேசி அழைப்பு! உரிமையாகப் பேசிய அவர், என்னை நெகிழ வைத்து விட்டார்.

'எங்களைத் தூங்கவிடாமப் பண்ணிட்டு நீங்க தூங்குறீங்களே சார்... நீங்க சொன்ன பள்ளிக்கூடத்தின் கதையைக் கேட்டுட்டு, குற்ற உணர்ச்சி குத்துதுங்க... எங்களுடைய கர்ப்பப்பை எங்கிருந்து உருவானதுன்னு சொல்லிட்டீங்க.... ஒரு பத்திரிகையாளனா இன்னைக்கு நான் வர்றதுக்குக் காரணம் என் பள்ளிக்கூடம் தானே... அதனால் நாலாயிரத்து ஐந்நூறு ரூபாய்க்கு ஒரு பீரோவை வாங்கி நான் படித்த பள்ளிக்கு அனுப்பிவிட்டுத்தான் உங்களுக்கு ஃபோன் பண்ணினேன்' என்று சொன்னார். ஒரு படம் வருவதற்கு முன்னாலேயே இப்படி ஒருவரைத் தான் படித்த பள்ளிக்கு ஏதாவது செய்யத் தூண்டியிருக்கிறதென்றால், படம் வந்ததும் என்னவெல்லாம் நடக்கும்? இப்படி நாம் சொல்ல வந்த விஷயத்தை மக்களிடம் சரியாகப் பதிவு செய்து, ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதுதான் உண்மையான வெற்றி!''

**உங்கள் படத்தை உலகப் போட்டிக்கு அனுப்பியிருக்கிறீர்களாமே...**

''ஆம். அறுபத்தைந்து வருடங்களாக நடக்கும் ஃப்ரான்ஸ் கேன்ஸ் திரைப்பட போட்டியில் இதுவரை தமிழ் சினிமா கலந்துகொண்டதே இல்லை. உலகத்தின் பல மொழிப் படங்களில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட படங்கள் மட்டுமே தேர்வாகி, அதில் ஒரே ஒரு படத்தை உ



இன் சிறந்த படமாகத் தேர்ந்தெடுத்து, சிறந்த இயக்குநர் என்றும் விருது தருவார்கள். இந்தப் போட்டியில் கலந்துகொண்டு தோற்பதே நமது படத்துக்குப் பெரிய அந்தஸ்துதான்! இதுவரை நானூறு படங்களில் ஒன்றாகப் 'பள்ளிக்கூடம்' இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. வெளியான படங்களை இப் போட்டிக்கு எடுத்துக்கொள்ள மாட்டார்கள். அதனால்தான் இன்னும் இங்கு படத்தை ரிலீஸ் செய்யவில்லை. வரும் மே மாதம் பதினாறாம் தேதி சிறந்த படம் எதுவென்று தெரிந்து விடும்.''

***சினிமாவில் உங்களை எப்படிப் பதிவு செய்துகொள்ள விரும்புகிறீர்கள்... நடிகராகவா? இயக்குநராகவா?***

''நான் முதலில் ஓர் இலக்கியவாதி. நேர்மையான கலைஞனாக, சமூகப் பொறுப்புள்ளவனாக இருக்க வேண்டுமென்பது எனது எண்ணம். மக்களின் பணத்தைக் கொள்ளை அடிப்பதற்குத்தான் பலர் சினிமா எடுக்கிறார்கள். ஆனால், மக்களின் மனதைக் கொள்ளை அடிக்கிற சினிமா கொடுக்க வேண்டும்.''

***ரஜினியிடம் நீங்கள் கால்ஷீட் கேட்டதாகத் தகவல்கள் வெளியானதே...***

''உண்மைதான். என்னுடைய 'ஒன்பது ரூபாய் நோட்டு' கதையை என்றாவது ஒருநாள் திரைப்படமாக்கினால் உலகத்தின் சிறந்த விருதான 'கேன்ஸ்' விருதைப் பெறும் என்று சுஜாதா, 'கணையாழி பத்திரிகையில் குறிப்பிட்டிருந்தார். எனவே இந்தக் கதைக்கு மிகவும் பொருத்தமானவர் ரஜினிதான் என்று முடிவு செய்து, அவரிடம் கால்ஷீட் கேட்டேன். 'கதை நன்றாக இருக்கிறது' என்று பாராட்டியவர், கடைசியில் கைவிட்டு விட்டார்! ரஜினி மாதிரி ஒரு இயல்பான நடிகர் எவரும் இல்லை. அவருடைய வயதுக்கும், அவருடைய நடிப்புக்கும் ஏற்ற இந்தக் கதையில் நடித்தால், அவரை என்னால் உலகத் தரத்துக்குக் கொண்டு செல்ல முடியும்.''

- மனோ விக்டர்

படம்: பொள்ளாச்சி சுந்தரம்



# தடுமாற்றம் தரும்

'தலை சுத்துது' என்று அவ்வப்போது நாம் சாதாரணமாகக் கூறுவதுண்டு. பிறகு கவனிக்காமல் அப்படியே விட்டுவிடுவதும் உண்டு. உங்களுக்குத் தெரியுமா, தானோ, தன்னைச் சுற்றியுள்ள பொருட்களோ சுழல்வது போன்ற உணர்ச்சிக்கு vertigo என்று பெயர். இதை ஆயுர்வேதத்தில் பிரமம் என்று குறிப்பிடுவார்கள். பொதுவாக தலைச்சுற்று வந்த பிறகு வாந்தி எடுக்கும் உணர்வும், தடுமாற்றமும் (loss of balance) ஏற்படும். நாம் சிறு வயதில் ராட்டினத்தில் சுற்றியிருப்போம். அப்பொழுது எல்லாமே சுற்றுவது போன்ற உணர்வினை அனுபவித்திருப்போம். ராட்டினத்தில் சுற்றாமலே அவ்வாறு நிகழும் பொழுது அது நோயாகக் கருதப்படுகிறது! தலைச்சுற்று பல காரணங்களால் வரலாம். ஒரு மனிதன் நிலைபெற்று நடப்பதற்கு உட்காதின் செயல்பாடுகள் இன்றியமையாதவையாக இருக்கின்றன. சிறு மூளை பாதிப்பினாலும் உள் காதின் குறைகளாலும் தலைச்சுற்று வரலாம். பிரயாண காலத்தில் சிலருக்குத் தலைச்சுற்று மற்றும் வாந்தியும் இருக்கும். இதற்கு மோஷன் சிக்னஸ் என்று பெயர். உள் காதில் சில படிமானங்கள் ஏற்படுகிறபோது தலைச் சுற்றும் உணர்வு இருந்துகொண்டே இருக்கும். திடீரென்று இது வரும். இதனால், ஆபத்து ஒன்றும் இல்லை. இதற்கு பினைன் வெர்டிகோ என்று பெயர். தலையைச் சில நிலைகளில் திருப்பும்பொழுதும்

# தேவமருந்து 30

# தலைச்சுற்று!


டாக்டர் எல். மஹாதேவன்

இது வரும். மேனியர்ஸ் என்ற காது பிரச்னையினாலும் இவ்வாறு வரலாம். நுண்கிருமிகளாகிய பாக்டீரியா, வைரஸ் நோய்களுக்குப் பிறகு வரும் தலைச்சுற்று viral labyrinthitis ஆகும். காதுகளில் ஏற்படு கின்ற கட்டி, சில மருந்துகள் போன்றவை யும் இதற்குக் காரணமாகின்றன. மூளைக்கு இரத்த ஓட்டம் செல்லாத நேரத்திலும் மயக்க உணர்வுகள் ஏற்படலாம். உதாரண மாக, பக்கவாத நிலைகளில் இது காணப் படும். கழுத்தெலும்புத் தேய்மானம் உள்ள வர்களுக்கும் தலைச்சுற்று ஏற்படுவதுண்டு. இது சர்ச்சைக்குரியதாகவே இருக்கிறது. காக்காய் வலிப்பு போன்ற நோய் ஏதேனும் இதனுடன் உள்ளதா என்பதை மருத்துவர் கண்டறிய வேண்டும்.

திடீரென்று வரும் இந் நோயால் அசாதாரண மான உணர்வு காணப்படும். எல்லாமே சுற்றுவது போன்று தெரியும். நடை தள்ளாடும். நடக்க இயலாது. வண்டி ஓட்ட இயலாது. கண்களின் அசைவு (Nystagmus) ஏற்படும். வாந்தியும் ஏற்பட லாம். சில நிமிடங்களுக்கோ, சில மணி நேரங்களுக்கோ-ஏன் சில நாட்களுக்கோ கூட இவ்வாறு காணப்படலாம். படுத்துக் கொண்டால் குறையும். சில நோயாளி களுக்குக் காதில் முழக்கம் ஏற்படும் (கர்ண நாதம்), செவி கேட்கும் திறன் குறையும். தலைச் சுற்றுடன் தலைவலி, பேச்சுக் குழ றுதல், இரண்டு இரண்டாகத் தெரியும் தன்மை, கைகால்களில் பலக்குறைவு, உணர்வின் தடுமாற்றம் போன்றவை ஏற் படுகிறபோது, அது பக்கவாத நோயின் அறி குறியாகவும் இருக்கலாம். இவ்வாறு வந் தால் கவனமாக உடனடி யாக மருத்துவரிடம் அழைத்துச் செல்ல வேண்டும்.

பிரமம் வாதபித்தத்தின் தாக்கத் தினாலும் மனோ குணமாகிய ரஜஸ் என்னும் குணத்தினாலும் ஏற்படுகிறது. பகலில் தூங்குதல், இரவில் தூங்காது விழித்திருத்தல், காரம், புளி, எண்ணெய்ப் பலகாரங்களை அதிகம் சாப்பிடுதல், வேளைக்குச் சாப்பிடாது இருத்தல், வெயிலில் நடத் தல், மது பானங் களை அருந்துதல், இந்திரியங்களுக்கு அசதி தரும் வேலை களை அதிகமாகச் செய்தல், மனோ காரணங்கள், சோகம் போன்ற உணர்வுகள் ஆயுர் வேதத்தில் முக்கிய காரணங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

என்னிடம் ஒரு நபர் சிகிச்சைக்கு வந்தார். அவருக்குக் காதினுள் எப்பொழு தும் முழக்கம்,வாந்தி எடுக்கும் உணர்வு மற்றும் தலைச்சுற்று இருந்தது. இவருக்கு மிருத்வீகாதி கஷாயத்தில் சிறிது இஞ்சிச் சாறு கலந்து கொடுத்து, பின் தலைக்கு க்ஷீரபலா தைலத்தைக் கொண்டு குளிக்கச் செய்து முசுமுசுக்கையால் காய்ச்சப் பட்ட நெய்யும் கொடுத்து வந்தேன். மூன்று மாதங்கள் சாப்பிட்ட பின் இப் போது நன்கு குணம் பெற்று வரு கிறார். வாயில் அடிக்



**வெயிலில் நடத்தல், மது பானங்களை அருந்துதல், மனோ காரணங்கள், சோகம் போன்ற உணர்வுகள் இந்நோய்க்கு முக்கிய காரணங்களாக ஆயுர்வேதத்தில் கூறப்படுகின்றன**

கடி ஏல அரிசியையும் மென்று வரச் சொன்னேன். இதுவும் தலைச்சுற்றுக்குச் சிறந்த மருந்தாகும்.

வாதம் தன்னுடைய நிலையிலிருந்து மேல்நோக்கிச் சென்று கபஸ்தானமாகிய மூளையில் மாற்றங்களை ஏற்படுத்தி இம் மாதிரி நோய்களை உருவாக்குகிறது. திராக்ஷையால் செய்த திராக்ஷாதி கஷாயம் மிருத்வீகாதி கஷாயம் போன்றவை இந்நோய்களுக்கு நல்ல பலனைத் தரும். பின்பு சிவதை வேரினால் செய்யப்பட்ட சூரணத்தைப் பாலில் சேர்த்துக் கொடுத்து மலமிளக்கச் செய்யலாம். கச்சூரம் என்ற கச்சோலத்தைப் பொடி செய்து க்ஷீரபலா எண்ணெய் கலந்து, ஒரு ரூபாய் நாணய வடிவில் தலைக்குத் தளம் வைக்கலாம். பின்பு பலா தைலத்தையோ, பஞ்சகந்த தைலத்தையோ பஞ்சில் முக்கி, தலைக்குப் பிசு வைக்கலாம். காதில் பிரச்னை அதிகம் உள்ளவர்களுக்கு பஞ்சகந்த தைலத்தைக் கொண்டு தலைக்கு சிரோ வஸ்தி செய்வது சிறந்தது. குறுந்தொட்டி வேர், நன்னாரி, சந்தனம், அதிமதுரம், தாமரை இவற்றால் காய்ச்சப்பட்ட எண்ணெயானது தலைவலிக்கு முக்கிய மருந்தாகப் பயன்படுகிறது. பித்தத்தினால் ஏற்படும் தலைச்சுற்றுக்கு இஞ்சிச் சாறு மிகவும் சிறந்த மருந்தாகக் கருதப்படுகிறது. தலைச்சுற்றிலிருந்து உடனே நிவாரணம் பெற கஸ்தூரி குளிகை, தான்வந்தரம் குளிகை இவற்றை இஞ்சிச் சாறு அல்லது வெற்றிலைச் சாற்றுடன் கொடுத்தால் நல்ல பலன் கிடைக்கும்.

தலைச்சுற்று வந்தவுடன் நோயாளியைக் காற்றோட்டமாகப் படுக்க வைப்பது, தலையை அசைக்காமல் படுக்க வைப்பது, காலைத் தூக்கி வைப்பது போன்றவை சிறந்தவையாகும். உள்காது பிரச்னையால் தலைச்சுற்று வருபவர்களுக்கு இரவு தூங்குவதற்கு முன் பத்ரதார்வாதி கஷாயத்தைக் கொடுக்கலாம். பலா அஸ்வகந்த லாக்ஷாதி தைலத்தை அல்லது ஹிங்குத் திரிகுண தைலத்தை சிறிது சூடாக்கி காதில் சொட்டு மருந்தாகப் பயன்படுத்தலாம். முசுமுசுக்கை, இஞ்சி கஷாயத்தில் பனங்கற்கண்டு சேர்த்துச் சாப்பிட்டால் தலைச் சுற்று உடனடியாகத் தீரும்; அல்லது பசு நெய்யை மூக்கில் இரண்டு துளி விட்டு நஸ்யம் என்னும் சிகிச்சை செய்து வரலாம். தொடர்ந்து தலைச்சுற்று வராமல் இருப்பதற்கு நெல்லிக்காய் சேர்த்துக் காய்ச்சப்பட்ட மஹாதிக்தகம் நெய்யை இரவு தூங்குவதற்கு முன் சாப்பிடலாம். இரவு தூங்குவதற்கு முன் மருந்து சாப்பிட்டால் தலைப் பிரச்னைகள் தீரும் என்பது ஆயுர்வேத சாஸ்திரத்தின் ஒரு கணிப்பாகும்.

**(டாக்டர் மஹாதேவனின் மருத்துவக் குறிப்புகள் இத்துடன் முடிகின்றன. டாக்டரின் முடிவுரையும் தன்வந்தரி டாலர் போட்டி முடிவுகளும் அடுத்து வரும் இதழ்களில்...)**

# ஒரு லட்ச ரூபாய் போட்டி முடிவுகளின் அணிவகுப்பு...



## 7ம் பக்கத் தொடர்ச்சி...

போய் சீட்டுக்கட்டு, ரூபாய் எல்லாவற்றையும் அப்படியே போட்டுவிட்டு ஓடிவிட்டது.

மீசை சுந்தரமூர்த்திக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. ''என் மீசையோட அருமை உங்களுக்குத்தான் தெரியலை'' என்று சொல்லிக்கொண்டே அவர்கள் விட்டுவிட்டுப் போன பணம் மற்றும் சீட்டுக்கட்டை எல்லாம் பொறுக்க ஆரம்பித்தார். அப்போதுதான் வினை ஆரம்பித்தது. உண்மையான மூன்று போலீஸ்காரர்கள் எங்கிருந்தோ வந்து எங்களைத் தவறாக நினைத்துச் சுற்றி வளைத்து விட்டார்கள். எவ்வளவோ கெஞ்சியும் புண்ணியம் இல்லை. கடைசியில் ஏற்கெனவே ஓடிப் போன கோஷ்டி விட்டுப்போன பணம், நாங்கள் வைத்திருந்த பணம் எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்டு ஆளுக்கு இரண்டு அடியும் கொடுத்து அனுப்பினார்கள். குற்றாலத்தில் சீசன் ஆரம்பித்ததுமே எங்களுக்கு இந்த நினைப்பு வந்துவிடும். அன்றைக்கு வலித்தாலும் என்றைக்குமே சிரிப்பை வரவழைத்துவிடும் இந்தச் சம்பவம்.

- ஏ.சாதிக் குல்

### ஐயோ பெண்ணே!

**கோ**டை விடுமுறைக்கு ஜமுனாமத்தூரில் இருக்கும் பீமா பால்ஸுக்குச் சென்று வரத் தீர்மானித்தோம் நானும், எனது நண்பர்களான ரமேஷ், ராஜா, சிவராமன் ஆகியோர். நாங்கள் சென்றபோது நீர்வீழ்ச்சி இல்லாமல் ஆங்காங்கே தண்ணீர் தேங்கியிருந்தது. அந்த நீர்நிலைகளைக் கண்ட உடன் குளிக்கும் ஆர்வம் வந்து, குளிக்கச் சென்றோம். ஆனால் ரமேஷ், 'எனக்கு நீச்சல் தெரியாது. ஆகையால் நான் வர மாட்டேன்' என்று கூறினான். இருந்தாலும் கரை ஓரத்தில் உட்கார்ந்து குளிக்கச் சொன்னோம்.

அப்போது அங்கு, இளம் பெண்கள் ஐந்து பேர் வந்தனர், குளித்தனர். அவர்களில் ஒருவர் திடீரென்று அலறினார். இதைக் கவனித்த என் நண்பன் ரமேஷ், அந்தப் பெண்ணுக்கு நீச்சல் தெரியவில்லை என்று நினைத்து, தனக்கு நீச்சல் தெரியாததையும் மறந்து சட்டென்று குதித்து அந்தப் பெண்ணைப் பிடித்துக் கொள்ள, இருவரும் நீரில் மூழ்க ஆரம்பித்தனர். இதைக் கண்ட நாங்கள் விரைவாக வந்து காப்பாற்றி, கரைக்குக் கொண்டு வந்து என்ன நடந்தது என்று விசாரித்தோம்.

மிரண்டு போயிருந்த அந்தப் பெண் சரமாரியாகத் திட்டிக்கொண்டே கூறினாள். ' என் காலை மீன் கடித்ததால் அலறினேன். எனக்கு நீச்சல் நன்றாகத் தெரியும். உன்னை யார் வந்து காப்பாற்றச் சொன்னது? நீ வந்து என்னைப் பிடித்துக் கொண்டு மூழ்கியதால் நானும் மூழ்க ஆரம்பித்தேன்' என்று கூறிக்கொண்டே அழ ஆரம்பித்தாள். அப்புறமென்ன... ரமேஷுக்கு அன்று முழுக்க அர்ச்சனைதான்!

- த.ஸ்ரீதர்

# உங்கள் ஊரில் கல்கி

## திண்டுக்கல், புதுச்சேரி, விழுப்புரம்

அன்பு வாசகர்களே!

கல்கி நிறுவனத்திலிருந்து மதிப்புமிக்க வாசகர்களாகிய உங்களைச் சந்திக்க உங்கள் ஊருக்கே வருகிறது கல்கி ஆசிரியர் குழு. இந்தச் சந்திப்பில் நீங்கள் உங்கள் குடும்பத்தோடு அவசியம் கலந்துகொண்டு, 'கல்கி' வார இதழைப் பற்றிய உங்களுடைய மேலான யோசனைகளையும் கருத்துகளையும் பரிமாறி, ஆக்கபூர்வமான யோசனைகளின் மூலம் கல்கி இதழை மேலும் மிளிரச் செய்ய உதவ வேண்டுகிறோம்.

இதயத்தை இதமாக்கும் 'கலகல' நிகழ்ச்சிகளும், இன்ப அதிர்ச்சியூட்டும் பரிசுப் போட்டிகளும் உண்டு. உங்கள் ஊருக்கு நாங்கள் வரும் தேதியை இன்றே உங்கள் நாட்குறிப்பில் குறித்து வைத்துக் கொள்ளுங்களேன்!

- ஆசிரியர் குழு

கல்கி
நிறுவனம் வெளியீடு
தரம் நிரந்தரம்

### திண்டுக்கல்

இடம் : வி.ஜி.எஸ். மீட்டிங் ஹால், பேருந்து நிலையம் அருகில்
தேதி : 14.05.2007
நேரம் : மாலை 4.30 மணி

### புதுச்சேரி

இடம் : அன்னை வரவேற்பு இல்லம், 54, நடுத்தெரு, புதுச்சாரம்,
தேதி : 19.05.2007
நேரம் : மாலை 4.30 மணி

### விழுப்புரம்

இடம் : ஹோட்டல் உட்லேண்ட்ஸ், திருச்சி மெயின் ரோடு (சிக்னல் அருகில்)
தேதி : 20.05.2007
நேரம் : மாலை 4.30 மணி

விரைவில் மற்ற ஊர்களிலும்...





# கல்கி

குடும்பத்துடன் படிக்க...

கல்கி

தரம் நிரந்தரம்

20.5.2007 இணைப்பு

எங்கள் உழைப்பு
+
வாடிக்கையாளர்
திருப்தி
=
வெற்றி


3

9

வாழ்வு
வளம்பெற

எல்லோரும்
ஓர் இடத்தில்...!

5





சென்னை தி.நகர் பஸ் நிலையத்தை அடுத்து பிரம்மாண்டமாக எழும்பி நிற்கும் ஸ்ரீ சங்கர பாண்டியன் ஸ்டோர்ஸ் சமீப காலமாக பெரிய அளவில் வாடிக்கையாளர்களை ஈர்த்து வருகிறது. ஸ்ரீ சங்கர பாண்டியன் ஸ்டோர்ஸின் வெற்றிக்கதையை கல்கி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார் கடையின் நிறுவனரான சங்கர பாண்டியனின் மகன் சேகர்.

“தூத்துக்குடிக்கு அருகில் உள்ளது எங்கள் ஊரான சிறுதண்டநல்லூர். எங்கள் குடும்பம் விவசாயக் குடும்பம். எங்கள் அப்பா சென்னைக்கு வந்தபோது வயது பதினாறுதான் இருக்கும். என் அப்பா, பெரம்பூரில் ஒரு விறகுக் கடை ஆரம்பித்தார்.

சில வருடங்களுக்குப் பிறகு பொன்னேரியில் விறகு வியாபாரத்தைத் துவங்கினார். வியாபாரத்தில் நேர்மையாக நடந்து கொண்டார். பிறகு, விறகுக் கடையை விரிவுபடுத்தி பெரிய டிம்பர் டெப்போவாக மாற்றினார். வியாபாரம் அபிவிருத்தி அடைந்தது. இந்தத் தருணத்தில் ஊரிலிருந்த தமது தம்பிகளை வியாபாரத்தில் உதவிக்கு அழைத்துக் கொண்டார்.

ஹரிஹரன் பஜாரில் எங்களுக்கு நல்லதொரு இடம் கிடைத்தது. தம்பிகள் கூட இருக்கும் தைரியத்தில், டிம்பர் டெப்போவுடன், உர வினியோகத்தையும் ஏற்று நடத்தினார். அந்தச் சமயத்தில் நெய்வேலி நிலக்கரி நிறுவனம், லீகோ கரி உற்பத்தியைத் தொடங்கியது. பொன்னேரியைச் சுற்றி அமைந்த நான்கு தாலுகாக்களுக்குக் கரி வினியோக ஏஜென்சி எடுத்தார். தொடர்ந்து மாடர்ன் பிரட் ஏஜென்சியையும் ஆரம்பித்தார். தினமும் பதினெட்டு மணி நேரத்துக்குக் குறையாமல் உழைப்பார் அப்பா. ''உழைப்புதான் நம்முடைய முதல் மூலதனம்; அதற்கப்புறம்தான் நாம் முதலீடாகப் போட்டிருக்கும் பணம்'' என்று என் அப்பா அடிக்கடி சொல்வார்.

மும்பையில் வசித்த என் சகோதரி, தம் குடும்பத்தின் உதவியுடன் அவள் சூரத் நகரில் துணிமணிகள் வாங்கி அனுப்ப, நாங்கள் பொன்னேரி கடையில் ஜவுளிப் பிரிவை ஆரம்பித்தோம். பாத்திர விற்பனைப் பிரிவையும் துவக்கினோம்.

'கல்யாண பர்சேஸ் எல்லாத்தையும் உங்க கடையிலேயே முடிச்சிட்டோம். ஒரு கல்யாண



✱ சேகர்

# எங்கள் உழைப்பு + வாடிக்கையாளர் திருப்தி = வெற்றி

மண்டபத்தையும் கட்டிப் போட்டீங்கன்னா செளகர்யமா இருக்குமே?' என்று மக்கள் கேட்க ஆரம்பித்தார்கள். பொன்னேரியிலேயே இரண்டு கல்யாண மண்டபங்களையும் கட்டி முடித்தோம்.

அடுத்து, 2003-ல் தி.நகர் பேருந்து நிலையத்துக்கு அருகில் இடம் வாங்கி 2004-ல் கட்டடம் கட்டினோம். 2005 செப்டெம்பரில் எங்கள் அப்பாவின் ராசியான கரங்களால் கடையைத் திறந்தோம்.

சென்னைக் கடையில் பேஸ்மென்ட்டில் நகைக் கடை இருக்கிறது. தரைத் தளத்தில் புடைவைகள், மற்றும் சுரிதார் ரகங்கள். முதல் மாடியில் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான ரெடிமேடு உடைகள்; இரண்டாவது மாடியில் ஆண்களுக்கான உடைகள், பேன்ட்ஸ் மற்றும் ஷர்ட்டிங் துணி வகைகள், படுக்கை விரிப்புகள், போர்வை ரகங்கள்; மூன்றாவது மாடி முழுவதும் கிஃப்ட் ஐட்டங்கள், அழகு சாதனப் பொருட்கள், காலணிகள்; நான்காம் மாடியில் பாத்திரங்கள், சூட் கேஸ்கள், மிக்ஸி, கிரைண்டர் போன்ற வீட்டு உபயோகப் பொருட்கள்; ஐந்தாம் மாடியில் டி.வி., ஃப்ரிட்ஜ், ஏ.சி., வாஷிங் மெஷின் போன்ற சாதனங்களும், ஃபர்னிச்சர் ரகங்களும் கிடைக்கும்.

சென்னையில் இருநூறு பேர்களும், பொன்னேரியில் நூறு பேர்களும் வேலை பார்க்கிறார்கள். எங்கள் கடையில் ஒவ்வொரு தளமும் சுமார் ஒன்பதாயிரத்து இருநூறு சதுர அடி பரப்பு கொண்டது. எந்த ஒரு பொருளையும் அதன் குறிப்பிட்ட விலைக்கு சுமார் இருபது சதவிகிதம் வரை குறைவாக நாங்கள் விற்பனை செய்கிறோம். ஒரு முறை எங்கள் கடைக்கு வருகிறவர்கள் எங்கள் பொருட்களின் தரம், குறைந்த விலை, கனிவான கஸ்டமர் சேவை ஆகியவற்றை அனுபவித்து விட்டால், அடுத்த முறை எது வாங்க வேண்டுமென்றாலும், எங்களிடம்தான் வருவார்கள்'' என்று பெருமையுடன் கூறுகிறார் சேகர்.


புடவை மட்டுமில்லீங்க;
'பளிச் பளிச்' மாடர்ன் ட்ரஸ்களையும்
செலக்ட் பண்ணலாமுங்கோ!





## கலந்துரையாடல்

# எல்லாமே ஓர் இடத்தில்...!

மனதால் நினைக்கும் எந்த ஒரு பொருளையும் ஊர் முழுதும் சுற்றாமல் ஓர் அடுக்குமாடிக் கடைக்குள் நுழைந்து மகிழ்ச்சியுடன் ஷாப்பிங் செய்வது, நம் ஊரில் வாடிக்கையாளர்களுக்கு ஒரு புதிய அனுபவத்தை அளித்து வருகிறது. அத்தகைய அனுபவங்களைக் குறித்து சென்னை வடபழனி அஜீஸ் நகரில் வசிக்கும் சிவகாமி, பார்த்திபன், கிரிஜா, நளினி, மரகத மணி- இவர்களின் கலந்துரையாடல் தொகுப்பினை வழங்குகிறோம்:

**நளினி:** 'ஆல் அண்டர் ஒன் ரூஃப் ஷாப்' எனக்கு ரொம்பப் பிடிச்ச விஷயம். ஒரே இடத்தில் பலவிதமான செக்ஷன்கள். ஒவ்வொரு செக்ஷனும் ஒரு தனிக் கடை மாதிரி. நமக்கு என்ன வேண்டுமோ, அதை நிதானமாக செலக்ட் பண்ணிக்க ரொம்ப வசதி.

**மரகத மணி:** அது மாதிரியான ஷாப்பிங் பண்ணப் போயிட்டா எனக்கு நேரம் போவதே தெரியாது. ஒண்ணுமே வாங்காவிட்டால்கூட பரவாயில்லை. சும்மா வேடிக்கை பார்த்துகிட்டே இருக்கலாம்.

**சிவகாமி:** சொல்லி மாளாத கூட்டம் வேறு. எங்கே இருந்துதான் இவ்வளவு ஜனங்களும் வராங்களோன்னு தோணும். ஆனால் அந்தக் கூட்டத்துக் கேற்ற வசதிகள் (லிஃப்ட், உடனடி சேவை, அமர இருக்கைகள்...) குறைவாகத்தான் இருக்கின்றன.



* மரகத மணி, நளினி, கிரிஜா, சிவகாமி, பார்த்திபன்


நானும் ஒரு பாப்பாதானே,
எனக்கும் வித விதமா
ட்ரெஸ் கிடைக்கும்ல...
COOL







# கலந்துரையாடல்

**கிரிஜா:** ரொம்ப கரெக்ட். ஆயிரக் கணக்கான ஜனங்க வந்து போகிற இடத்துல இருபது, இருபத்தஞ்சு பேர் போகிறா போல ஒன்றோ, இரண்டோ லிஃப்ட் இருந்தா எப்படிப் போதும்?

**பார்த்திபன்:** இன்னும் ஒரு மெகா பிரச்னை. நம் ஊர்ல, பெரும்பாலான அடுக்குமாடி ஷாப்பிங் மையங்கள்ல பிரச்னையே வாகனங்களை நிறுத்த போதுமான இடவசதி இல்லை என்பது தான்!

**கிரிஜா:** பொதுவாகவே நம் ஊரில் 'ஆல் அண்டர் ஒன் ரூஃப்' ஷாப்பிங்கில் அனுகூலம் என்னவென்றால், விலை கொஞ்சம் குறைவாக இருக்கும். நமக்கு என்ன பொருள், எந்த விலையில் வேண்டுமோ, அந்த ரேஞ்சில் வெரைட்டியா கிடைக்கும். அதுமட்டுமில்லாமல், பல பிராண்டுகள் கிடைக்கும்; பிடித்ததை நாம் தேர்ந்தெடுத்து வாங்கலாம். சில ஐட்டங்கள் ரொம்ப நன்றாக இருக்கும்; நான் வாங்கிக் கொண்டு போவேன். அதைப் பார்த்துவிட்டு, நண்பர்கள் எங்கே வாங்கினே? என்று கேட்பார்கள். அடுத்த நாள் அவர்கள் அதே கடைக்குப் போனால், அந்த ஐட்டம் முழுவதுமாக விற்றுத் தீர்ந்து போயிருக்கும்.

நமக்கு என்ன பொருள், எந்த விலையில் வேண்டுமோ, அந்த ரேஞ்சில் வெரைட்டியா கிடைக்கும்.

**மரகத மணி:** ஆனால் இதுபோன்ற இடங்களுக்கு ஷாப்பிங் செய்ய வருவதில் ஒரு நெகட்டிவான விஷயம் இருக்கிறது. நாம் ரெண்டு ஐட்டங்கள் வாங்க வேண்டும் என்ற திட்டத்துடன் கடைக்குள் நுழைவோம்; ஏழெட்டு ஐட்டங்கள் வாங்கி விடுவோம்! குறிப்பாக, இன்றைய இளைய தலைமுறையினரில், கணக்கு வழக்கில்லாமல் கிஃப்ட் வாங்கும் சினேகிதிகள் நிறைய பேர்களை எனக்குத் தெரியும். இது போன்ற ஷாப்பிங் ரொம்பவும் ஜாலியானது; பட், கையில் பணம் கொஞ்சம் தாராளமாகப் புழங்க வேண்டும்.

**பார்த்திபன்:** சகட்டுமேனிக்கு கிரெடிட் கார்டுகளின் புழக்கம் வேறு! 'மாதக் கடைசி; கையில் பணமில்லை; சம்பளம் வந்ததும் பார்த்துக்கொள்ளலாம்; லிஸ்ட் போட்டு வாங்கலாம்' என்று மக்கள் நினைத்த காலம் மலை ஏறிவிட்டது.

**கிரிஜா:** ஏகப்பட்ட கவுன்ட்டர்கள், ஏகப்பட்ட கூட்டம். இதில் சில சமயம் அடிவாங்குவது கஸ்டமர் சர்வீஸ்.

**மரகத மணி:** அதெல்லாம் விடுங்க! இந்த மாதிரியான பல அடுக்குமாடிக் கடைகளில் எல்லாம் ஆயிரக்கணக்கான ஐட்டங்களையும் எப்படி கணக்கு வைத்துக் கொள்ளுவார்கள்? எப்படி ஷாப் லிஃப்டர்களைக் கண்டுபிடிப்பார்கள்?

**பார்த்திபன்:** அட, என்னங்க நீங்க... இந்தக் கணினி யுகத்துல இதுக்கெல்லாம் வசதிகள் இல்லாமல் இருக்குமா?

**நளினி:** இப்போது பல ஷாப்பிங் மையங்களில் ஃபாஸ்ட் ஃபுட் சென்டர்கள், ஜூஸ் கவுன்ட்டர்கள், பாப்கார்ன், கேண்டி கோன் ஐஸ்கிரீம், கூல்டிரிங்ஸ் வழங்கும் மெஷின்கள் என்று வரிசையா ரீஃப்ரெஷ்மெண்ட்டு வசதி கூட இருக்கு.

**மரகத மணி:** அதாங்க 'ஆல் அண்டர் ஒன் ரூஃப்' ஜாலி ஷாப்பிங் எக்ஸ்பீரியன்ஸ்!


இந்த ட்ரெஸ்
உங்களுக்குப் பிடிச்சிருக்கா?



**கதைத் தளம்**

# வாழ்வு வளம்பெற

ஸ்ரீ சங்கர பாண்டியன் ஸ்டோர்ஸில் அவ்வப்போது, மனித வள வல்லுநர்களை அழைத்து வந்து, தங்கள் ஊழியர்களுக்கு மனித உறவுகளை மேம்படுத்துவதற்கு ஆலோசனைகளை வழங்குகிறார்கள். அப்படி நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளில் சொல்லப்பட்ட சுவையான குட்டிக் கதைகள் :



## அவரவர் கையில்...

ஒரு பௌத்த சன்னியாசி, தன் சீடர்களிடம் ஒரு பழமையான தேக்கு மரத்தைக் காட்டி, ''இந்த மரத்தை வைத்துக் கொண்டு என்ன செய்யலாம்?'' என்று கேட்டார். சீடர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பயன்படுத்தலாம் என்று பதில் சொன்னார்கள். ஒரே ஒரு சீடன் மட்டும் மௌனமாக இருந்தான். ''உனக்கு ஒன்றுமே தோன்றவில்லையா?'' என்று சன்னியாசி கேட்க, ''குருவே! பயன்படுத்துபவர்களைப் பொருத்தே இதன் பயன் அமையும். இழைக்க நினைத்தால், விலை உயர்ந்த பொருளாகி வீட்டை அலங்கரிக்கும். பிளக்க நினைத்தால் விறகாகி, எரிந்து சாம்பலாகும்'' என்றான் அந்தச் சீடன். உடனே சன்னியாசி சொன்னார்: ''மனித வாழ்க்கையும் அப்படித்தான். அதனை இழைப்பதும், பிளப்பதும் அவரவர் கையில்தான் இருக்கிறது.''

## மணமும், மறதியும்

மல்லிகைப் பூ ஒன்று, குளத்தில் இருந்த தாமரையைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டது. ''உன்னைப் போல எனக்குப் பெரிய உருவம் இல்லையே என்பதுதான் என்னுடைய மனக்குறை! உன் பக்கத்தில் நிற்க எனக்கு வெட்கமாக இருக்கிறது'' என்று மனம் வருந்திச் சொன்னது. அதனைக் கேட்ட தாமரை, ''எதையும் குறை காணும் கண்ணோட்டத்தில் பார்க்கக்கூடாது. எனக்குப் பெரிய உருவம் இருக்கலாம். ஆனால், என்னிடம் இல்லாத அற்புதமான மணம் உன்னிடம் இருக்கிறது என்பதை நீ மறந்துவிட்டாயே! இறைவன் படைப்பில், ஒவ்வொன்றுக்கும், ஒவ்வொரு தனித்தன்மை உள்ளது. மகரந்தச் சேர்க்கை நடைபெற, தேனீக்களைக் கவர உனக்கு மணம்; எனக்கு உருவம் என்பதைப் புரிந்து கொள். இல்லாததை நினைத்துக் குறைப்பட்டுக் கொள்வதை விட்டு, இருக்கிற அம்சங்களுக்காக இறைவனுக்கு நன்றி சொல்வோமே!'' என்று சொன்னது.


அடேங்கப்பா...!
என்ன கலர்ஸ்!
என்ன வெரைடி!



சம்மரில் உடலையும், உள்ளத்தையும் குளிர்விக்க, சங்கர பாண்டியன் ஸ்டோர்ஸில் 'சிலு சிலு' நிகழ்ச்சிகள்...



டிஸைனை துணியில மட்டுமில்லீங்க, கையில கூட போட முடியும்ங்க.






ஜாலி ஷாப்பிங்
கிழிஞ்ச நோட்டு
திரும்பிடுச்சு
புத்தம் புதுசா...
மாஜிக்,மாஜிக்!


நான் தான்
ஜெயிப்பேன்


ரஞ்சனி பேருக்கு
இந்த வருஷம்
எத்தனை ட்ரெஸ்
கலெக்ட் ஆகும்னு
பார்த்துச்
சொல்லுடா







# பளபளக்குது பாத்திரம்;
# பறிபோகுது நம் உள்ளம்!









# புதுக்குடித்தனம் போகலாமே...

நம் குடும்பங்களில், திருமணத்தின் போது தர வேண்டிய சீர்கள் அனைத்தையும் ஒரே கடையில் ஒரே சமயத்தில் வாங்க முடியுமா?

''முடியும். எங்கள் கடையில் இதற்கென்றே ஒரு சிறப்புத் திட்டத்தை நாங்கள் செயல்படுத்தி வருகிறோம்'' என்கிறார் சங்கர பாண்டியன் ஸ்டோர்ஸின் சேகர்.

''தனிக்குடித்தனம் நடத்த பொருட்கள் மினிமம் என்னென்ன தேவையோ அவற்றை அடக்கிய ஒரு கல்யாண சீர் வரிசைக்கான அத்தனை ஐட்டங்களும் கொண்ட பேக்கேஜ் திட்டம் ஒன்றை நாங்கள் வைத்திருக்கிறோம். ஃப்ரிட்ஜ், டெலிவிஷன், கட்டில், பீரோ, கிரைண்டர், மிக்ஸி, வாஷிங் மெஷின் உள்ளிட்ட அனைத்து சீர் வரிசை ஐட்டங்களையும் முப்பத்து ஒன்பதாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூறு ரூபாய்க்கு நாங்கள் வழங்குகிறோம். இந்தத் திட்டத்தில் வழங்கப்படும் ஐட்டங்களைக் கொண்டு, புதுமணத் தம்பதி தனிக் குடித்தனம் நடத்தலாம்.

''இன்னொரு ஸ்பெஷல் திட்டமும் உண்டு. அந்தத் திட்டத்தில் அண்டா, குடம் என்று ஆரம்பித்து, காமாட்சி அம்மன் விளக்கு வரை எல்லா ஐட்டங்களையும் வாங்கிச் செல்லலாம். விலை அதிகமில்லை! வெறும் நாலாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூறு ரூபாய்தான்.

''இந்தத் திட்டங்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது.''



தொகுப்பு : எஸ்.சந்திரமெளலி

படங்கள் : ஸ்ரீஹரி, பொள்ளாச்சி சுந்தரம்








இல்லையென்று
சொல்ல இங்கே
ஒன்றுமேயில்லை!

# கல்கி

குடும்பத்துடன் படிக்க...

20.5.2007

இதழுடன் இணைப்பு 16 பக்கங்கள்

+16



## கண்கவர் ரகம்; காலத்துக்கும் தரம்!

ஜாலி ஷாப்பிங்!

தளம் B




sSS
ஸ்ரீ சங்கரபாண்டியன் ஸ்டோர்ஸ்
Sri Sankar

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57 Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under
PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka. Supplement to the Kalki Issue Dated 20.5.2007






# இதம் தந்து ரணம் ஆற்றும்

# சைபால்

## BEST SKIN OINTMENT

மக்கள் சேவையில் 70 ஆண்டுகள்


எரிச்சல் தரும் வெட்டுக்காயத்தின் மேல் சைபால் தடவுங்கள். எரிச்சலைப் போக்கி இதம் தரும். காயம் இருந்த சுவடே காணாமல் போகும்.

---

வெட்டுக்காயம், முகப்பரு, சேத்துப்புண், தேமல், வேனல்கட்டி, பித்தவெடிப்பு முதலிய வியாதிகளுக்கு சிறந்தது.

---

Mfrs.
**THE SOUTH INDIAN MFG. CO.,**
**MADURAI - 20. Ph: 2534108**



சைபால்: எல்லோர் வீட்டிலும் இருக்கவேண்டிய ஒன்று

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57*Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.